# அவமானமா அஞ்சாதே



டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா
M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# அவமானமா? அஞ்சாதே!

தேசிய விருது பெற்ற நூலாசிரியர்

**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**

M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI,

எஸ்.எஸ்.
பப்ளிகேஷன்

**எஸ்.எஸ். பப்ளிகேஷன்**

8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு,

தி.நகர், சென்னை – 600 017.

தொலைபேசி : 044–24332696

# நூல்விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அவமானமா ? அஞ்சாதே ! |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | சுயமுன்னேற்றம் |
| ஆசிரியர் | : | டாக்டர் **எஸ். நவராஜ் செல்லையா (1937 – 2001)** |
| பதிப்பு | : | டிசம்பர் 2007 |
| நூலின் அளவு | : | கிரவுன் |
| படிகள் | : | 1200 |
| அச்சு | : | 11 புள்ளி |
| தாள் | : | வெள்ளை |
| பக்கங்கள் | : | **96** |
| நூல் கட்டுமானம் | : | சாதா |
| விலை | : | **ரூ.35.00** |
| உரிமை | : | பதிப்பகத்தாருக்கு |
| தயாரிப்பு | : | ஆர்.ஆடம் சாக்ரட்டீஸ் |
| வெளியீட்டாளர் | : | **எஸ்.எஸ். பப்ளிகேஷன்**<br>8, போலீஸ் குவார்ட்டஸ் ரோடு,<br>தி,நகர், சென்னை – 600 017. |
| அச்சிட்டோர் | : | மீரா ஆப்செட், சென்னை |
| ISBN | : | **978-81-906055-6-4** |

# முன்னுரை

அவமானமா அஞ்சாதே!

முன்னேறுகிற முயற்சியை மேற்கொள்கிறபோதே பின்னேராக வருவது புகழ்ச்சி அல்ல இகழ்ச்சி. பெருமை அல்ல பொறாமை. பொருள் அல்ல மருள். ஏன் அப்படி?

நீங்கள் எதிர்பார்ப்பதெல்லாம் நடப்பதற்குப் பெயர் சொர்க்கம். எதிர்பாரதது நடப்பதுதான் வாழ்க்கை.

எதிர்பாராததை முறியடித்து எதிர்பார்ப்பதை நடக்க வைப்பதுதான் முயற்சி. அதற்கு நல்ல துணை நம்பிக்கை.

அவ்வப்போது ஏற்படுகிற அவமானங்கள் அனுபவங்கள் அலைக்கழிக்கிற துன்பங்கள் தோல்விகள் அல்ல. அவை வெற்றியின் வேள்விகள். விளங்க வைக்கும் பதில்களின் கேள்விகள். நடை பழகும் குழந்தைகள் தடுமாறி விழுவது சகஜம். எழுந்து நடப்பது மனோகரம்

உங்களைத் தொடர்வது துரோகம். ஆனால் துணிவில் கிடைப்பது விவேகம். கனிவாய் கிடைப்பது யோகம்.

இப்படியெல்லாம் அவனியிலே வெற்றிப் பவனி வர, இலட்சியத்தை மேற்கொள்ளுங்கள். மேலும் மேலும் மேற் செல்லுங்கள்.

உங்கள் வாழ்வின் வெற்றியை அஞ்சுபவர்களுக்குச் சொல்லுங்கள். அரவணைத்து வழிகாட்டுங்கள். இதுதான் நம் பிறவியின் பேறு!

எதையும் தொடேன். தொட்டால் விடேன் என்று இலட்சிய வேகத்தில் வெற்றி பெறுங்கள் என்று வாழ்த்துகிறேன்.

"லில்லி பவனம்" வாழ்த்துக்களுடன்
சென்னை - 17. டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அவமானமா? அப்படி என்றால் என்ன? | 5 |
| 2. | அவமானங்கள் பலவிதம் | 11 |
| 3. | உனக்கு என்ன தெரியும்? | 15 |
| 4. | விரட்டாமல் விடமாட்டோம் | 22 |
| 5. | வாழ்வையே திசை திருப்பிய அவமானம் | 27 |
| 6. | அவமானத்தின் கொடை - ஒரு கதை | 32 |
| 7. | இச்சகமும் அச்சகமும் | 38 |
| 8. | வீடு தந்த பாடு | 43 |
| 9. | என்ன செய்யலாம்? | 53 |
| 10. | டீன் ஏஜ் என்றால் என்ன? | 56 |
| 11. | கொக்கும் கோழியும் | 61 |
| 12. | உப்பாக இருங்கள். உம்மாக வாழுங்கள் | 66 |
| 13. | காலங்கள் ஏழு | 71 |
| 14. | மூன்று வகை மனிதர்கள் | 77 |
| 15. | தேடுங்கள் தெரியும் | 83 |
| 16. | ஆவலும் கூவலும் | 89 |
| 17 | அவமானம் அவர்களுக்குத்தான், நமக்கல்ல | 93 |

# 1. அவமானமா?
# அப்படி என்றால் என்ன?

ஒருவர் தன் வாழ்க்கையில் உயர்வதற்கும், ஒப்பற்ற சாதனை படைப்பதற்கும். உலகப்புகழ் அடைவதற்கும் அறிவு மட்டும் போதாது. அதிர்ஷ்டம் வேண்டும். அது மட்டுமா! கீழிருந்து தள்ள, மேலிருந்து தூக்க ஆட்களும் வேண்டும்.

பரிந்துரைகள் வேண்டும். பணத்தின் உதவி வேண்டும். பதவியிலுள்ளோர் அருள் வேண்டும் என்றெல்லாம் கூறுவார்கள்.

இவையெல்லாம் புறத்தைச் சார்ந்த ஊக்கிகள்தான். வெளியுலக சக்திகள் துணிந்து முயற்சிக்கின்ற தூக்கிகள்தான். ஆனால், அகத்தைச் சார்ந்த எழுச்சிகள் ஏற்படுகின்ற போதுதான் ஒரு மனிதன் உத்வேகம் கொள்கிறான். உற்சாகம் அடைகிறான். உணர்வுகளை நன்கு ஒருமுகப்படுத்துகிறான்.

சூழ்நிலையின் சுற்றுப்புறத் தாக்குதல்களை, தம்மைச் சுற்றி வாழ்கிற மனிதர்களின் சூட்சுமப் புத்திகளை, உன்னிப்பாகக் கவனித்து அவற்றை அனுசரித்துப் போகவும் கற்றுக் கொள்கிறான்

இடுக்கண்கள் என்கிற துன்ப வெள்ளத்தில் மிதக்கக் கற்றுக் கொள்கிறான். பெறுகிற அனுபவங்கள் மூலமாகப் பறக்கக் கற்றுக்கொள்கிறான்.

இப்படிப்பட்ட அக எழுச்சியை எழுப்புவது எது? தட்டி எழுப்புவது எது? குறுகுறுத்த நெஞ்சத்தைக் கொட்டி முழக்குவது எது? **அவமானம்தான்.**

அவமானமா!

ஐயோ! அவமானமா! அது என் வாழ்க்கையில் நடந்தால் நான் செத்தே போய்விடுவேன் என்று **ஜகதல**

பிரதாப புலம்பல்களை செய்து நடிப்போர் உலகத்தில் ஏராளம்! ஏராளம்.

எனக்கு அவமானமா! நான் அந்த ஏரியாவிலேயே தலைகாட்ட மாட்டேன்! எங்கேயாவது ஓடிப்போய் விடுவேன் என்று, மானப்பிரச்சனைக்கு வானளாவிய எல்லையைக் காட்டிப் பேசி, தலையணைக்குள் தலையை புதைத்துக் கொள்வோர் ஏராளம் ஏராளம்.

அவமானப்பட்டுக் கொண்டு, ஒருவர் உலகில் வாழ்வதைவிட, பட்டினி கிடந்து சாவதே மேல் என்று, சாப்பாட்டுப் பிரச்சினைக்குள் சரித்திரம் பேசுவோரும் ஏராளம்.

உண்மையில் அவமானம் என்பது யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றுதான். போற்றிப்பாராட்ட முடியாத ஒன்றுதான்.

என்றாலும், வருகிற அவமானத்தை, வாரி மடியில் கட்டிக் கொள்ளாமற் போனாலும், வந்ததை வரவேற்றுவிட வேண்டியதுதான். வேறு வழியில்லை. வழியேயில்லை.

ஒரு அவமானத்தை, மனமார ஏற்றபடி ஏற்றுக் கொள்வது எப்படி? என்றுதானே நீங்கள் கேட்கிறீர்கள்?

அது சுலபம். ரொம்ப சுலபம்.

சுலபமா! என்ன சார் கேலி செய்கிறீர்களா! எதையாவது எழுதியாக வேண்டும் என்பதற்காக புதிர் போடுகின்றீர்களா? என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

என்றாலும் நெருப்பு என்றால் வாய் வெந்துவிடுமா! சர்க்கரை என்றதும் நாக்கு இனித்துக் கொள்ளுமா! என்ன!

அதுபோலத்தான் அவமானமும்!

அவமானம் என்று நமக்கு வருகிறபோது, சந்தர்ப்ப சூழ்நிலைகள் நம்மைத் தாக்குகிறபோது, வீரனாக இருந்து ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் எப்படி?

எப்படி என்று பதில் சொல்வதற்கு முன் நாம் ஒன்று செய்வோம்.

நம்மை சுழற்றுகிற, ஆட்டி வைக்கிற, அச்சப்படுத்துகிற, அவமானம் என்ற சொல்லைப் பற்றி ஒரு சிறு ஆய்வு செய்வோம்.

**அவமானம் என்றால் என்ன பொருள்?**

அவமானம் என்றால் இழிவு, அவமதிப்பு, மான ஈனம் என்றெல்லாம் அர்த்தங்கள் உண்டு.

**இழிவு என்றால் என்ன?**

ஈனம், கேடு, தாழ்வு, கேலி, இகழ்ச்சி, பெருமையைக் குலைத்தல், நிலைமையைக் குற்றப்படுத்துதல் என்று பொருள்.

இப்பொழுதுதான், நாம் ஒரு யதார்த்த நிலைக்கு வருகிறாம். சாந்த நிலைக்குள் வருகிறோம்.

அவமானம் என்றால், நமது பெருமையைக் குலைத்தல், மற்றவர்கள் முன் நம்மை இகழ்ச்சிப்படுத்துதல், நம் தூய்மையான மனதை குற்றப்படுத்தி களங்கப்படுத்துதல்.

நமது ஆற்றலைக் கேலி செய்தல், உயர்வுக்குக் கேடு செய்தல், இருக்கும் நிலையில் இருந்து தாழ்த்திவிடுதல், மீள முடியாத சூழ்நிலையில் தள்ளிவிடுதல் என்றெல்லாம் ஏற்படுவது உண்மைதான். மறுக்க முடியாததல்ல.

அவமானம் என்றதும் இப்படியெல்லாம் அர்த்தங்கள் இருக்கிறபோது, தைரியம் உள்ள நாமே ஆடிப்போய் விடுகிறோம். அந்தப் பக்கமே தலைகாட்ட முடியாமல், ஓடிப்போய்விடுகிறார்கள் மற்றவர்கள். ஏன்?

ஆனால் நாம் தைரியசாலிகள் அல்லவா!

விளையாட்டுக் களஞ்சியத்தின் வாசகர்கள் எல்லோரும் வேகம் நிறைந்த வியூகம் படைக்கும் விவேகிகள் அல்லவா!

நம் இந்த அவமானத்திற்குள்ளே இருக்கும் நுட்பத்தை, திட்பத்தை, இன்று கொஞ்சம் உட்புகுந்து பார்ப்போமே!

பாம்பு என்றதும் பயந்தோடி விடாமல், பாம்பைப் பிடித்து, பல் எத்தனை என்று பார்க்கிற நிலைதான் இது.

அவமானம் என்ற ஒரு சொல்தான் நம்மை அச்சப்படுத்துகிறது. நமது வீரத்தை கொச்சைப்படுத்துகிறது என்றால், அந்தச் சொல்லைப் பிரித்துப் பாருங்கள். தோலுரித்த வாழைப்பழம் போல, நமக்கு இனிக்கும், மணக்கும், சுவைக்கும்.

அவ + மானம் என்ற இரண்டெழுத்தின் கூட்டுத்தான் அவமானம் என்று ஆயிருக்கிறது.

அவ என்ற சொல்லுக்கு அறிவு, ஆதாரம், கட்டளை, திருத்தம், சுத்தம், நித்தை என்றெல்லாம் அர்த்தம் உண்டு.

மானம் என்ற சொல்லுக்கு பெருமை, மரியாதை, வலிமை, பெருந்தன்மை, அகங்காரம் என்றெல்லாம் அர்த்தம் இருக்கிறது.

இப்போது அவமானம் என்ற வார்த்தையை, கூட்டிக் கழித்து, ஓர் அர்த்தம் செய்து பார்க்கலாமா! மனமிருந்தால் இடம் மட்டுமல்ல, வழியும் உண்டு. வாழ்க்கையும் உண்டு.

ஆக, அறிவுப் பூர்வமான ஆதாரமாக அமைந்த, ஆண்மை பிறப்பிக்கக்கூடிய, எதையும் திருத்தி, இனிதாக அமைக்கிற சுத்தப்படுத்துகிற சுகமான சுந்தர செயல்களைச் சொல்லிக் காட்டுவதுதான் 'அவ' ஆகும்.

அது எதற்காக இப்படிச் செய்கிறது?

ஒருவரின் மானமாக விளங்குகிற பெருமையை, வாழ்வாக இருக்கிற மரியாதையை, உடலுக்குள் இருக்கிற வலிமையை, மனத்துக்குள் இருக்கிற பெருந்தன்மையை, மேலும் மேலும் உயர்த்திக் காட்டத்தான். இந்த அவமானம் என்ற சொல் அமைந்திருக்கிறது.

புரியவில்லையா! குழப்புகிறீர்கள் என்று கூக்குரல் இடுவது எனக்குக் கேட்கிறது.

ஒருவரது வாழ்க்கையில் உயர்ந்த நிலை அடைய, அறிவை வளர்க்க, ஆற்றலை சிறக்க, திறமையை வளர்க்க, தேர்ச்சி பெற, திட்ப நுட்பத்தில் சிறக்க, இந்த அவமானம் உதவுகிறது என்று, நான் சொல்வது இப்போது புரிகிறதா? குழப்பம் இப்போது இல்லையே!

இன்னும் தெளிவாகவில்லை என்பது எனக்கும் தெரிகிறது.

இப்படிப்பட்ட ஓர் அவமானத்தை யார் நமக்கு இழைக்கிறார்கள்? யாரோ அல்ல? எங்கிருந்தோ வந்து அல்ல.

நமக்கு எதிரில் இருப்பவர்கள்தான், நமக்கு இப்படிப்பட்ட நல்ல காரியத்தைச் செய்கின்றார்கள்.

எதிரில் இருந்துகொண்டே, நமது உயர்வைத் தடுப்பவர்கள், அறிவை கெடுப்பவர்கள், புகழை இடிப்பவர்கள் போன்றவர்கள்தான் **நம்முடைய எதிரிகள்** என்கிறோம்.

எதிரிகள் என்றால் எங்கிருந்தோ வந்தவர்கள் அல்ல. நமக்கு எதிரிலேயே இருந்துகொண்டு, காரியம் செய்பவர்கள், நமக்கு முன்னே இருந்து கொண்டு நம்மைத் தூண்டிக் கொண்டு இருப்பவர்களைத்தான் நாம் எதிரிகள் என்கிறோம். நமக்கு மனக்கஷ்டத்தையும், மனப்புழுக்கத்தையும், மன அவதியையும் தருகிற செயல்களைச் செய்வதால்தான், அவர்களது செயல்களை நாம் அவமானம் செய்கிறோம்.

இப்படி செய்கிற அத்தனை பேர்களும், நமக்கு எதிரிகள் அல்ல. அவர்கள் செய்கிற காரியங்கள் எல்லாம் அவமானமும் அல்ல. அற்புதங்கள்.

அலங்காரமாக நகர்ந்து வருகிற தேர்ச் சக்கரங்களுக்கு முன்னே முட்டுக்கட்டைகள் போட்டு, தேரை சரியாக ஓட்டி நிலைநிறுத்தச் செய்கிறார்களே, அவர்கள் அந்தத் தேருக்கு எதிரிகள் இல்லையே!

தேர் சரியான பாதையில் சென்று, சரியான பாதையில் ஆலயத்தின் முன்னே போய் நிற்கத்தான் அவர்களது செயல் உதவுகிறது.

அதுபோலத்தான் நமது எதிரிகள் என்பவர்கள். நமக்கு முட்டுக்கட்டைப் போடுகிறார்கள். இங்கே முட்டுக்கட்டை என்பது நமக்கு அவர்கள் ஏற்படுத்துகிற அவமானங்கள்.

அவர்கள் நமக்கு இழைக்கிற அவமானங்களை, நாம் சரியான உணர்வோடு ஏற்றுக்கொண்டால், சங்கடங்கள் ஏற்படாது. சஞ்சலங்கள் தோன்றாது. அவை சரியான சந்தர்ப்பங்களாக மாறி நமக்கு உதவிகளாக அமைந்துவிடும்.

பிறர் நமக்கு இழைக்கின்ற அவமானங்களை கொஞ்சம் புத்தசாலித்தனமாக ஏற்றுக்கொண்டால், அதாவது கோபப்படாமல், குமுறிவிடாமல், கொந்தளித்துப் போகாமல், கூனிக்குறுகிவிடாமல், கொஞ்சம் நிதானத்தோடு, அவமானங்களை ஏற்றுக்கொண்டால், என்ன ஆகும்? எரியும் தீபத்திற்கு தூண்டுகோல் போல் ஆகிவிடும்.

அதற்கு பெரிய தந்திர மந்திரம் எதுவும் தேவையில்லை. கொஞ்சம் பக்குவப்பட்டுக்கொண்டால் போதும்.

வயலில் பயிரைவிட, புல் பூண்டு போன்ற களைகள்தான் வேகமாக, அதிகமாக வளர்கின்றன. அதுபோலத்தான் உலக வாழ்க்கையிலும் நல்லதைவிட கெடுதல் செய்பவர்கள்தான் அதிகமாக உருவாகின்றார்கள். கேடுகளை செய்கின்றார்கள். கெடுதல்களும் களைகளும் தினந்தினம் களையப்படுவதாக பேசிக் கொள்வார்கள். இரண்டையும் பிடுங்க முடியும். ஆனால் அழிக்க முடியாது.

# 2. அவமானங்கள் பலவிதம்

அவமானங்கள்தாம் தன்மானத்தைத் தட்டி எழுப்பும் சக்தியைப் பெற்றிருக்கின்றன என்று கூறுவதைக் கூட பலரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அவமானம் செய்தவர்களை சும்மா விட்டுவிடலாமா? திட்டித் தீர்த்துவிட வேண்டும் என்று கொட்டி முழக்குவோர் பலர். வெட்டிச் சாய்த்துவிட வேண்டும் என்று வீராவேசம் பேசுவோர்கள் பலர்.

இப்படி கோபம் கொள்வதையெல்லாம், தன்மானத்தைத் தட்டி எழுப்புகின்ற தன்மையாக நான் சொல்ல வரவில்லை. அவமானத்தின் அடித்தளத்தைப் பற்றி நாம் அமைதியாக ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதில் நான் குறியாக இருக்கிறேன்.

அவமானம் செய்தவர் யார்? அவரது அடிப்படை நோக்கம் என்ன? நம்மை அவமானப்படுத்திவிடுவதால் அவருக்கு ஏற்படும் லாபம் என்ன? என்று கொஞ்சம் சீற்றமடையாமல் சிந்தித்துப் பார்த்தால், நமக்கு கோபம் வராது. மாறாக லாபம்தான் வரும்.

அவமானப்படுகிறபோது ஆத்திரம் கொள்ளாமல், அமைதியாக சிந்திக்க முடியுமா? பொறுத்துப் போக முடியுமா? வாழ்க்கையே வெறுத்துப் போயிருக்கும் வேளையில், ஏற்பட்ட அவமானத்தின் வரலாற்றை ஆராய்ந்து கொண்டிருக்க முடியுமா? இப்படிக்கூற உங்களுக்கு எப்படி மனம் வருகிறது?

புரிகிறது புரிகிறது. உங்கள் கோபம் தெரிகிறது. அவமானம் ஏற்படுகிற சமயத்தில் வெகுண்டெழுந்து விட்டால், அவமானப்படுத்தியவர்க்கு ஏற்படுகின்ற சந்தோஷத்திற்கு அளவேயிருக்காது. அவர்களுக்கு ஏன் இரட்டிப்பு மகிழ்ச்சியை நாம் அளிக்க வேண்டும்?

நேர்ந்த நிகழ்ச்சி நிகழ்ந்துவிட்டது. நிலைமையை நம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட வேண்டுமே தவிர, கொந்தளித்துப் போய் காரியத்தைக் கெடுத்துவிடக்கூடாது.

**சாதாரண மனிதர்கள் என்றால் அடிபட்ட பாம்பாக சீறி, சூடுபட்ட பூனையாகத் தாண்டி, சீண்டி விடப்பட்டக் குரங்காகக் குதித்து, மிதிப்பட்ட நாயாகக் குலைத்து, பிறகு மனதுக்குள் சமாதானம் ஆகிவிடுவார்கள். அதற்குப் பிறகு அந்த நிகழ்ச்சியை அவர்கள் மறந்தேபோய் விடுவார்கள்.**

அறிவுள்ளவர்களுக்கோ அந்த அவமானம் அடி உரமாகப் பயன்படும். ஆணிவேராக உறுதிப்படுத்தும். கலங்கரை விளக்கமாகக் காட்சி தரும். வழிகாட்டும்.

எப்படி? அவமான நிகழ்ச்சியானது அறிவுள்ள ஒருவரின் அந்தரங்கத்தில் ஆழப்பதிந்து போய்விடுவதால், அங்கேதான் அறிவார்த்தமான திட்டங்களும், செயல் முனைப்புகளும், முயல்வேகம் புயல்வேகம் என்று புறப்பட்டுவிடும்.

அவமானங்கள் பலவிதம் என்றோமே! அவை பிறந்து பாய்ந்து வருகின்ற புற்றுகள் எங்கே உள்ளன? எப்படிப் புறப்படுகின்றன என்கிற தன்மையை இங்கே விவரமாகக் காண்போம்.

1. தன்னை பெரிய மனிதனாகப் பாவித்துக் கொண்டு வாழ்கிறவர்கள், தன்னைச் சுற்றி உள்ளவர்கள் தன்னைப் புகழ்ந்து பாராட்ட வேண்டும் என்ற மமதைக்கு தீனிபோடுவதுபோல, தன்னை நாடி வருபவர்களிடம் தாறுமாறாகப் பேசிவிடும் தகாத குணம். தன்னைத் தேடி வருபவர்கள் மனதால் எப்படி வேதனைப்படுவார்கள் என்று எண்ணிப் பாராமல், தன்னை மட்டும் பெரிய ஆளாக எண்ணி விதண்டாவாதமாகப் பேசி மகிழ்பவர்கள். இப்படி ஒரு ரகம். இது ஒரு **பெருமைப் பொறாமை.**

2. தனக்கு எல்லா தகுதியும் திறமையும் உண்டு. தனக்கு நிகர் யாருமே இல்லை என்று தானே நினைத்துக்

கொண்டிருப்பவர்கள். தான் பெற்றிருக்கும் தகுதி மற்றவர்களுக்கும் உண்டு என்று தெரிந்து கொண்டதும், மற்றவரை அடுத்தவர்கள் புகழ்வதைக் கண்டதும், பொறுத்துக் கொள்ள முடியாமல் பூகம்பமாகக் குழம்பி, புண்படப் பேசி அவமானப்படுத்தி மகிழ்கிற இரண்டாவது இனம். இது மமதைப் பொறாமை.

3. இந்தத் துறைக்கு நாம்தான் துரை, தலைவர், வழிநடத்தும் ஆசான் என்ற நிலையில் இருப்பவர்கள். தங்களைப் போல் மற்றவரும் வர முயல்கிறார்கள் என்றால், அந்த நினைவையே தாங்கிக் கொள்ள முடியாமல், அந்த சூழ்நிலையை ஏற்றுக் கொள்ள இயலாமல், அடாத சொற்களை அள்ளி வீசி அவமானப்படுத்துவது. இது **தகுதிப் பொறாமை, திறமைப் பொறாமை.**

4. தாழ்வு மனப்பான்மையால், தன் திறமையை மதிப்பிடத் தெரியாமல் மற்றவர்கள் புகழப்படுவது கண்டு பொறுக்காமல், மல்லாந்து படுத்துக் கொண்டு எச்சில் துப்புவோர் போல, வளர்பவரைக் கண்டு வைது தீர்த்து, அவமானப்படுத்த ஆர்ப்பரித்து, ஆனந்தம் காணும் **குரூரப் பொறாமை.**

5. நன்றாகப் பேசி நட்புள்ளவர்போல பழகி வந்தாலும், அவர் தம்மைவிட முன்னுக்கு வந்துவிடக் கூடாது என்பதை தன் நெஞ்சில் நிறுத்திக் கொண்டு, அவர் செய்கிற காரியத்திற்கெல்லாம் களங்கம் கற்பித்தும், குறுக்கு நெடுக்காக காரணம் சொல்லி அடிவயிற்றைக் கலங்க வைப்பதுபோல் அவமானப்படுத்தும் கொடூரப் பொறாமை.

6. மற்றவர்களை முன்னேற விடாமல் பார்த்துக் கொள்வதுடன், மறைமுகமாகவே பேசி, அவர்கள் மனதுக்குள் குழப்பமும் கலவரமும் ஏற்படுவதுபோல் செய்து, உணர்வுகளை புண்படுத்தி, நடைமுறை திட்டங்களை நாசப்படுத்துவது போல இடைஞ்சல்கள் செய்து, அவமானம் செய்து மகிழும் நயவஞ்சகப் பொறாமை.

7. இருவரும் ஒரே துறைதான். ஒரே நிலைதான் என்றாலும், இவன் வளர்ந்தால் என் மரியாதை என்ன ஆகும்

என்று எண்ணித் துடித்து, எண்ணற்ற பின்புறக் காரியங்களைப் பண்ணி மகிழும் பண்பற்ற பொறாமை. தேரை இழுத்து தெருவில் விட்டுவிட்டு ஓடிப்போய் ஒளிந்துகொண்டு வேடிக்கை பார்த்து மகிழ்கின்ற விஷமிகளின் **விஷமப் பொறாமை.**

இன்னும் பல உண்டு. பின்னர் விளக்குகிறேன். பொறாமையுள்ள தன் சித்தியின் சீற்றமிகு சொல்லால் அவமானப்பட்ட துருவன் என்ற சிறுவன், துருவ நட்சத்திரமாகத் திகழும் அளவுக்கு முன்னேறி உயர்ந்தான். வசிஷ்டரிடம் அவமானப் பட்ட விசுமாமித்திரர், பிரம்ம ரிஷி என்று பட்டம் பெற முயன்ற கதை எல்லாம் நமக்குத் தெரியும்.

தெரியாத சூழ்நிலையில் தேர்ந்தவர்கள் கதைகளைப் பற்றி எழுதுவதை விட, தேர்ந்த அனுபவங்களைத் தந்த, நான் பெற்ற பல அவமானங்களை இங்கு எழுதினால் படிப்பவர்க்கு நியாயமாகவும் இருக்கும் நன்மையும் பயக்கும் என்று நம்புகிறேன்.

தமிழில் விளையாட்டுத்துறை இலக்கியம் என்பது புதிய துறை.

2000 ஆண்டுகளாக கேட்பாரற்றுக் கிடந்த, விளையாட்டுகள் பற்றி ஒதுக்கப்பட்டுக்கிடந்த, மற்றவர்கள் எழுதவும் பேசவும் முன்வராத ஒரு துறையைப் பற்றி, என்னை சிந்திக்க வைத்து, செயல்படுகின்ற வைராக்யத்தை வளர்த்து, வாழ்க்கையையே அர்பணித்துக் கொள்கிற வைர நெஞ்சத்தை நல்கியதெல்லாம் நான் பெறற அவமானங்கள் கொடுத்த கொடைதான்.

அவற்றை உங்களுக்குச் சொல்வதில் எனக்கு மகிழ்ச்சியே தவிர அவமானங்கள் இல்லை என்பதால் உங்களுக்கு தொடர்ந்து சொல்ல இருக்கிறேன். அடுத்த பக்கத்திற்கு வாருங்கள்!

# 3. உனக்கு என்ன தெரியும்?

**வ**ல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள்.

அவமானப்படுத்த விரும்புகிற ஆசாமிகளுக்கு எதுவும் ஆயுதமாக அமையும். அவர்கள் விடுகிற அம்போ, ஆவேசமாகப் பாயும். அனலைக் கக்கும், அலறச் செய்யும். அலை புரளும் கடலாக, அச்சுறுத்தி நிலைபெயரச் செய்யும்.

அவமானமும் அப்படித்தான் கேட்போரை கிடுகிடுத்து நடுநடுங்கச் செய்கிறது. நெஞ்சத்தின் நிம்மதியைக் கொய்கிறது. ஆமாம். அவமானப்படுத்துகிறவரின் வாயிலிருந்து வருகிற வம்பு மொழி, நமது நம்பிக்கையை நாசமாக்கவே வருவதுதான்.

உங்களுக்கு தெரியும் என்று நீங்கள் நினைத்தும் நெகிழ்ந்தும் மகிழ்ந்தும் கொண்டிருக்கிற ஒன்றை, மரண அடி கொடுத்துச் சாய்க்கின்ற சமத்கார காரியத்தைத்தான் அவமானப்படுத்துகிறவர்கள் எல்லோரும் அநாயாசமாகச் செய்துவிடுகிறார்கள்.

என் வாழ்வில் எத்தனையோ அவமானங்களைச் சந்தித்திருக்கிறேன். நின்றாலும் அவமானம். நடந்தாலும் அவமானம். சென்றாலும் அவமானம். சொன்னாலும் அவமானம். அப்படித்தான் பலப்பல அவமானங்களை சந்தித்திருக்கிறேன்.

இவையெல்லாம், இப்படிப்பட்ட அவமானமெல்லாம் எனக்குத் தெரிந்தவர்கள் மூலமாக வந்தாலும் பரவாயில்லை. யாரோ ஒருவர், தெரியாத ஒருவர், நான் நம்பிக்கையோடு நினைத்து நெருங்கப் பயந்த உயர்ந்த நிலையில் இருப்பவர். இப்படி பலரக மனிதர்கள்.

அவரிடம் நான் எதிர்பார்த்துச் சென்றது சரிதான் அல்லது - சரியில்லை என்ற ஏதாவது ஒரு பதிலுக்குத்தான்.

அந்த நிகழ்ச்சியை இப்பொழுதும் இப்படித்தான் நினைத்துப் பார்க்கிறேன்.

18 வயது இளைஞன். திருச்சி ஜமால் முகமது கல்லூரி மாணவன். விளையாட்டில் வேகம் மட்டும் அல்ல. வெறியும் நிறைந்தவன். உண்பது, உறங்குவது; கல்லூரி வகுப்பில் இருக்கும் நேரம் தவிர, ஆடுகளம் ஏதாவது ஒன்றில் விளையாடிக் கொண்டு இருப்பதையே வாழ்க்கையில் சுகம் என்று நினைப்பவன். அப்படியே விளையாடி ஆனந்தம் கொள்பவன். அதிலும் கைப்பந்து விளையட்டு என்றால், அவனுக்கு அத்தனை பிரியம்.

பள்ளியில் பத்தாவது படித்தபோது தனது பள்ளி கைப்பந்துக் குழுவில் விளையாடி, மாவட்ட அளவில் வெற்றி பெற்றவன். அந்த மாவட்டத்தில் எந்த ஊரில் போட்டிகள் நடந்தாலும், அதில் கலந்து கொண்டு நல்ல விளையாட்டு வீரன் என்ற மதிப்பையும் பெற்றவன்.

அவன்தான், தன் கல்லூரி கைப்பந்து அணியில் சேர்ந்து, கல்லூரிக்காக விளையட வேண்டுமென்று விரும்புகிறான். அந்தக் கைப்பந்துக் குழுவில் சேர்வதையே கௌரவம் என்று கருதுகிறான்.

அந்தக் கல்லூரியின் உடற்கல்வி இயக்குநர் திரு. எஸ். தியாகராஜன் அவர்கள். அந்த நாளில் அவர் சொல்லுக்கு அந்தக் கல்லூரியே ஆமாம் போடும். கேட்டது கிடைக்கும். முதல்வர் அவர்களோ அவர் பேச்சை முக்கியம் என்று கேட்பார். அவருக்கு அவ்வளவு புகழ், மரியாதை.

ஏனென்றால், திருச்சி ஜமால் முகமது கல்லூரி என்றாலே விளையாட்டுக்காகவே ஏற்படுத்தப்பட்ட ஒரு கல்லூரி என்ற பெயரை, மாநில அளவிலே ஏற்படுத்தி வைத்தவர். அவரது பேச்சு இளைஞர்களைக் காந்தமாகக் கவரும் அவர் பேச்சு மகுடியாக முழங்கும். மயங்கிப் பின் செல்லாத விளையாட்டு வீரர்களே அந்த நாளில் இல்லை.

வெள்ளை பேண்ட், வெள்ளைச் சட்டை, கவர்ச்சியாகக் காட்சி தருவார். இயக்குநர் என்றாலும் எதையும் ஈசியாக எடுத்துக் கொள்பவர். ஒரு புகழ் பெற்ற ஹீரோ நடை, கிண்டலடிப்பதில் அசகாயசூரர்.

கல்லூரியில் அவரை தனியே பார்ப்பது என்பது கஷ்டம்தான். சுற்றிலும் இளைஞர்கள் கூட்டம். அவனுக்கோ கல்லூரியானது ஒரு புதிய சூழ்நிலை. கல்லூரியில் மாணவர்களிடம் பேசுவதற்குக் கூட கூச்சம். இயக்குநரிடம் பார்த்துப் பேசுவது எப்படி?

இந்த நடக்க முடியாத காரியத்தை நடத்தியாக வேண்டும் என்ற நப்பாசைக்குள்ளே ஒரு வாரமாக. அவன் தவித்துக் கொண்டிருந்தான். தைரியத்தை வரவழைத்துக் கொள்ளவே, அவன் தனிமையில் இருந்து, அந்த வாரம் முழுவதும் தன்னை தயார் செய்து கொண்டான்.

ஒருநாள் மத்தியானம் மூன்று மணி இருக்கும். உடற்கல்வி இயக்குநர் அறையை நோக்கி, கால் தரையைத் தேய்த்துக் கொண்டு செல்ல, தயங்கிப் போய்ச் சேர்ந்தான்.

உள்ளே பலர் இருப்பதாக, உரத்தக் குரலில் சிரிப்புச் சத்தம், வெளியே புயலாக வந்து வரவேற்றது. புகை மண்டலமும் கூடத்தான். உள்ளே அவர் இருப்பதை உறுதியாக்கிப் பறந்தது.

சார் என்றான். குரல் வரவில்லை. காற்றுத்தான் வந்தது. யார்ரா அவன் உள்ளே வா! உனக்கு என்ன வேண்டும்? அதிகாரம் நிறைந்த சிறிது அன்பு கலந்த குரல் அது. அங்கே அவனை யாரும் எதிர்பார்க்கவில்லை. முந்திய நாள் நடந்த ஒரு கைப்பந்தாட்டப் போட்டியைப் பற்றிய பேச்சு அது. அந்தப் போட்டியில் அவர்கள் தோற்றுப் போயிருந்த விஷயம் தெரிந்தது.

பதில் சொல்லாமல் விழித்துக் கொண்டிருந்த அவனை, மீண்டும் அதே கம்பீரக் குரலில் கொஞ்சம் அதட்டலாகவே கேட்டார் இயக்குநர்.

வாலிபால் விளையட்டுக்குப் பெயர் கொடுக்குமாறு விளம்பரப் பலகையில் இருந்தது. பெயர் கொடுக்க வந்தேன் என்று வந்த விபரத்தை அவன் கூறினான்.

இங்கே நிற்கிறவன் எல்லாம் கிழிச்சுட்டான். நீ என்ன பண்ணப்போறே! உனக்கு வாலிபால் விளையாடத் தெரியுமா?

என் தோற்றத்தைப் பார்த்து அவர் அப்படி கேவலமான ஒரு முடிவுக்கு வந்திருப்பார் போலும்.

நான் மாவட்டப் போட்டிகளில் கலந்து கொண்டிருக்கிறேன். நான் நிறைய தனியார் (Special) போட்டிகளிலும் பங்கு பெற்றிருக்கிறேன் என்றான் அவன்.

அவர் சிரித்தார். அருகில் உள்ள விளையாட்டு வீரர்கள் அதாவது மாணவர்களும் சிரித்தார்கள்.

அவன் பேச்சில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. ஒல்லியாக உயரமாக, பரமசாதுவாக ஒருவன் நிற்கிறான். இவன் மாவட்ட விளையாட்டு வீரன் என்கிறான். இவனை நாம் சேர்த்துக் கொண்டால், நமது மரியாதை என்ன ஆகும்? என்று இப்படி நினைத்துக் கொண்டார்களோ என்னவோ? அவர்கள் சத்தமாகச் சிரித்தார்கள். கைதட்டி கும்மாளத்துடன் சிரித்தபடி என்னைப் பார்த்தார்கள்? இல்லை வெறித்தார்கள்.

ஏப்பா? மாவட்ட வாலிபால் பிளேயர்னு சொல்றே! வாலிபால்ன்னா என்னான்னு தெரியுமா! ஒரு டீம்ல எத்தனை பேரு இருப்பாங்கன்னு. முதல்ல சொல்லுப் பார்ப்போம்?

இயக்குநர் இப்படிக் கேட்டதுதான் தாமதம். அந்த அறையே இடிந்து விழுவது போல சிரிப்பலைகள் சிந்திச் சிதறின. அவனை கொத்திக் குதறின.

முகம் அறியாத அந்த இளைஞர்கள் பண்ணுகிற கேலியும் கிண்டலும், அவனை முகத்திலடித்தாற்போல் மோதின.

இப்படி ஒரு அவமானமா?

ஒரு கைப்பந்தாட்டக் குழுவில் எத்தனை ஆட்டக்காரர்கள் இருந்து ஆடுவார்கள் என்ற அந்த சின்ன விவரங்கூடத் தெரியாத மூடனா நான்? முழு மூடனா நான்? என்று அவன் வெளியே வரத் தயாராக இருந்த கண்ணீரை அழுத்திக் கொண்டு, வெளியே வந்தான். கண்கள் சிவந்து கொள்ள ஆரம்பித்தன.

இவனெல்லாம் பிளேயர்ன்னு வர்றானுங்க. காலத்தின் கோலம் என்று ஒருவன் சொல்ல, கரக்ட்டுடா ராஜா என்று திரு. தியாகராஜன் பேச, காதில் வாங்கிக் கொண்டே நடந்தான் அவன்.

பலர் முன்னிலையில் என்னைப் பற்றி தப்பாகப் பேசியிருந்தாலும் பொறுத்துக் கொள்வேன். என் விளையாட்டுத் திறமையை இப்படிஇகழ்ந்து விட்டார்களே என்று அவன் இரவு முழுவதும் அழுதான். இறுதியாக ஒரு முடிவுக்கு வரும் வரை அழுதான். மனம் கசிந்து அழுதான்.

அந்த ஆசிரியரைப் போய் அவனால் திட்ட முடியாது. அங்கே கூடியிருந்த கேவலப்படுத்திய மாணவர்களை அவனால் அடிக்க முடியாது. அப்படி நினைப்பதே முட்டாள் தனம். அவர்கள் வெட்கித் தலை குனிவது போல, தன் பேச்சைக் கேட்டுப் பின்னால் நின்று விளையாடும் விளையாட்டு வீரர்களாக அவர்களை மாற்ற வேண்டும். ஆமாம் அவர்களுக்கு மேலாக உயர்ந்தாக வேண்டும்.

உனக்கு என்ன தெரியும் இந்த விளையாட்டில் என்று கேட்ட இயக்குநரே தன்னிடம் வந்து கெஞ்சிக் கேட்க வேண்டும். அந்த நிலைமைக்கு உயர்ந்து தன்னை ஆளாக்கிக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். அன்றிலிருந்து முழு நேரமும் விளையாடினான். விளையாட்டே வாழ்க்கை என்று தன்னை மாற்றிக் கொண்டான்.

அந்தக் கல்லூரியின் கைபந்தாட்டக் குழுவின் தலைவனாக வந்தான். இயக்குநர் திரு. தியாகராஜன் அவர்கள்

இவனிடம் மட்டும் ஒரு மூத்த சகோதரனைப் போல அன்பு காட்டத் தொடங்கினார். அவனை அந்தக் கல்லூரியின் செல்லப் பிள்ளையைப் போல நடத்தினார். இன்று வரை எனது இனிய நண்பர் அவர் எந்நாளும் எனக்கு உயர்வைக் காட்டிய உன்னதத் தலைவர்.

அந்த் அவன் தான் நான்.

இது ஒரு சாதாரண நிகழ்ச்சியாக இருக்கலாம். எனக்கு நேர்ந்த சிறிய பாதிப்பாகக் கூட இருக்கலாம். இது ஒரு பெரிய அவமானமா என்று கூட நீங்கள் கேட்கலாம்.

ஆனால் இந்நிகழ்ச்சி ஒரு நம்பிக்கையான மனதில் நடுவிலே குத்திய காரமுள். மனித உணர்வின் முடியைப் பிடித்து அறுத்து வீசிய ஒரு அவல சம்பவம் என்றே நான் நம்பினேன்.

நான் எதைக் கேட்டுச் சென்றேனோ, யாரிடம் போய் நின்றேனோ அவமானத்தைத்தின்றேனோ, அதையே நான் பெற்றாக வேண்டும் என்று இலட்சியத்துடன் என் இளமைக் கால கல்லூரி வாழ்க்கை முழுவதையும், விளையாட்டுப் பயிற்சிகளிலே கழித்தேன். அந்த என் முயற்சி என்னை பாழடித்து விடவில்லை.

கல்லூரியில் இயக்குநர்கூட இருந்தே, அவர் செய்கின்ற அத்தனைக் காரியங்களையும் நான் செய்தேன். கற்றுக் கொண்டேன். அந்த அவமானகரமான நிகழ்ச்சிதான் என்னை விளையாட்டுக்களில் ஆழ்ந்து பயில, தேர்ந்து திகழ ஊக்கம் தந்து, உற்சாகப்படுத்தியது. அந்த அறிவார்ந்த அனுபவங்கள் தான் எல்லா விளையாட்டுக்கள் பற்றியும் எழுதுகின்ற துணிவையும், அறிவையும் அளித்தன.

யாராவது உங்களைப் பார்த்து உனக்கு என்ன தெரியும் என்று ஏளனமாகக் கேட்டால் கிண்டலாகக் குத்திக் காட்டினால், ஏமாற்றமளித்தால், எரிச்சல் உண்டாக்கினால் கோபப்படாதீர்கள்.

உங்களுக்கு என்ன திறமை இருக்கிறது! எவ்வளவு இருக்கிறது என்று தெரிந்து கொள்ளுங்கள். ஒரு தீர்மானத்துடன் திட்டமிட்டு கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ளுங்கள். திறமைகள் வளர்வது உங்களுக்கு சிறுமை அல்ல, பெருமைதானே.

கேள்வி கேட்டவர்களே உங்களைப் பார்த்து வெட்கப்படும்படி உங்கள் திறமையை வெளிப்படுத்திக் காட்டுங்கள். நீங்களும் வெளிப்படுங்கள். புகழ் வெளிச்சத்தில் பிரபலமடையுங்கள். எல்லாம் உங்களிடம் தான் இருக்கிறது.

வருகிற அவமானங்கள் எல்லாம், வருத்தி வாட்டுகின்ற நெருப்புச் சின்னங்கள் அல்ல. அவை தன்மானத்திற்குத் தருகின்ற சன்மானங்கள்.

என்னை வழிப்படுத்தி வாழ்வை நெறிப்படுத்திய அவமானங்கள் தொடர்கின்றனர்.

# 4. விரட்டாமல் விடமாட்டோம்

இப்படி ஒரு சூழ்நிலை யாருக்கும் ஏற்படக் கூடாது. ஏனென்றால் அந்த சூழ்நிலையை விரட்டவும் முடியவில்லை. ஏற்கவும் முடியவில்லை. வெல்லவும் இயலவில்லை.

வாயில் போட்ட ஒரு கசப்பான பொருளை விழுங்கவும் முடியவில்லை. துப்பவும் முடியவில்லை. அப்படி ஒரு அவல நிலை.

'இக்கட்டான ஒரு மிருகத்தின் இரண்டு கொம்புகளுக்கிடையில் மாட்டிக் கொண்ட நிலைபோல்' என்ற ஒரு வாசகம் உண்டு.

(Between the horns of a dilemma).

இந்த ஒரு சூழ்நிலைதான். எனக்கு இன்றைய லட்சிய வாழ்வை அமைத்துத் தந்தது என்பது உண்மைதான். என்றாலும் அன்றைய நிலை? எரியும் அடுப்புமேல் அமர்ந்து கொண்டு, அக்கம்பக்கம் உள்ளவர்களுக்காக ஆனந்தப் பாட்டுப் பாடிக் கொண்டு சமாளிப்பவன் போல, சாகசம் நடத்தியிருக்கிறேன்.

அழகப்பா உடற்கல்விக் கல்லூரியில் D.P.E. பட்டம் பெறுவதற்காக மாணவனாகச் சேர்ந்தேன். அது தவறில்லை. ஜூன் மாதம் வந்து சேர்ந்து விட வேண்டும் என்பது கல்லூரியின் கட்டளை. அதுவும் தவறில்லை.

அந்தக் கல்லூரியின் சூழ்நிலையை அறிந்து கொண்டு அதற்கேற்றாற்போல, அட்ஜஸ்ட் பண்ணியதுதான், எனக்குச் சிக்கலாக மட்டுமல்ல. பெரும் சீரியஸான அவமான நிலையையும் விளைத்துவிட்டது.

கல்லூரிக்கு 150 மாணவர்கள் மொத்தம் தேவை என்றால், முதலில் 200 பேர்களைத் தேர்வு செய்து சேர்த்துக் கொள்வார்கள். மாணவர்கள் உடல்திறனை சோதிப்பதற் காக, ஒரு வாரம் கடுமையான பயிற்சிகள் நடக்கும். அதனைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இரவோடு இரவாக ஓடிப்

போய் விடுவோரும் உண்டு. சொல்லிக் கொண்டு போகுவோர் மிகவும் குறைவுதான்.

இந்த பயங்கரப் பயிற்சிகளைத் தவிர்ப்பதற்காக, கல்லூரி முதல்வர் டாக்டர் ராப்சன் அவர்களிடம் ஒரு பத்து நாள் பர்மிஷன் கேட்டு வாங்கியிருந்தேன். என்னிடம் மிகவும் பரிவும் பாசமும் கொண்டிருந்ததுடன், என்னுடைய விளையாட்டுத் திறமைகளையும் தெரிந்து வைத்திருந்ததால், ஸ்பெஷல் கேஸ் என்று சொல்லி அனுமதி அளித்திருந்தார். இதுவரை எந்தத் தவறும் நேர்ந்திடவில்லை.

ஒவ்வொரு நாளும் பயிற்சிகள் முடிந்தபின், எல்லோரும் ஓரிடத்தில் கூடும்போது முதல்வர் அவர்கள், தேவையான அறிவிப்புகளை வெளியிடுவார். அப்படி பேசுகிறபொழுது, நவராஜ் செல்லையா, என்ற யூனிவர்சிட்டி ஸ்போர்ட்ஸ்மேன், சிறந்த விளையாட்டு வீரன் நமது கல்லூரிக்கு வரப்போகிறான் என்றெல்லாம் சொல்லுவாராம்.

இப்படி என்னை புகழ்ந்து பேசுகிற பொழுது, அதை கேட்கும் மாணவர்களில் பலர் யார் இது? என்று முதலில் யோசிக்கத் தொடங்கி; யாரடா இவன்? என்று பெரிய வார்த்தைகள் போட்டு பேசும் அளவுக்குப் போய்விட்டனர்.

முதலில் அலட்சியமாகத் தெரிந்த என் பெயர். அவர்களின் அடிப்படை நம்பிக்கைகளையே தகர்க்கும்படி ஆனதாக, அவர்கள் எண்ணத் தலைப்பட்டனர். என்னைப் பார்க்காமலேயே அவர்களிடம் பொறாமையானது புயலாக வீசத் தொடங்கியது.

நம்மை விட அவன் பெரிய ஆளா? சிறந்த விளையாட்டு வீரனா? அவர்கள் உள்ளுக்குள்ளே பொருமிக் கொண்டு, என் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். நானும் கல்லூரிக்குப் போய் சேர்வதற்காக, காரைக்குடிக்கு வந்தேன்.

என்னை வரவேற்பதற்காக எனது நண்பர்கள் சிலரும் வந்திருந்தனர். என் நண்பர்களும் என்னைப் பற்றி, புகழ்ந்து அவர்களிடம் பேசியிருந்ததும், எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றியிருந்திருக்கிறது. நான் பஸ்ஸிலிருந்து இறங்கியதும் என்னை வரவேற்ற என் நண்பர்களைப்

பார்த்து, நான்தான் அவன் என்று அவர்கள் முடிவுக்கு வந்துவிட்டார்கள். அவர்களுக்குள்ளே பேசிக் கொள்வது போல, தடாலடிச் சொற்கள், தடுமாற்றமில்லாமல் என்னை நோக்கி வெளிவந்தன.

'இவன்தானே! மூஞ்சைப் பாரு! பெரிய கொம்பனாக்கும்! நம்மை ஜெயிக்க இந்த நாயால் முடியுமா? இவனை இங்கிருந்து விரட்டாமல் விடுவதில்லை என்று தொடங்கிய தூற்றும் புராணம் - காலம், நேரம் இடம் பாராமல் வகுப்பறையிலிருந்து கழிப்பறை வரை வந்து கொட்டியது. உணவு உண்ணுகிற இடத்திலும் உக்கிரமாகப் பாய்ந்தது.

அதுவும் நான் தனியனாக இருக்கும்போது, ஏச்சும் பேச்சும் எக்காளமிடும். எதிரிலிருந்து யாரும் பேசுவதில்லை. பக்கத்திலிருந்து மறைவான இடங்களிலிருந்து அசிங்கமான சொற்கள் அம்பாய் பாயும். ஆனால் அவர்களை யாரென்று அறிய முடியாது. அடையாளமும் தெரியாது.

ஒரு வாரம் இந்த நிலை. என்னைத் திட்டுகின்றார்கள். மானம் போகும்படி. மனம் நோகும்படி ஏசுகின்றார்கள் என்று புரிகிறது. ஆனால் அதற்கு காரணம் என்ன? என்பதுதான் எனக்குப் புரியவில்லை. கலக்கத்தில் புதுக்குழப்பம்.

பத்து நாட்கள் கழிந்த பிறகு தான், இது தனிப்பட்ட விரோதமில்லை. திறமைகளுக்கு இடையே எழுந்த சவால் என்று தெரிய வந்தது.

அந்தக் காலத்தில், மாவட்ட மாநில அளவில் வெற்றி பெற்றவர்கள் தான், உடற்கல்வி துறையில் சேர்வார்கள். அதனால் அவர்களுக்கு என்னை கெட்டிக்காரன் என்றதும், கேட்க சகிக்கவில்லை. பொறுக்க முடியவில்லை. என்னை இழிவுபடுத்தி சாடிவிட்டார்கள்.

அவர்கள் நினைத்தது போலவே, எனக்கும் ஓர் எண்ணம். இப்படி அவமானத்தைத் தாங்கிக் கொண்டு இரவு பகல் சகித்துக் கொண்டு இங்கே படிப்பது அவசியம்தானா? போய்விடுவோமே என்று யோசித்து முடிவுக்கு வரும்போது, கல்லூரிகளுக்கு இடையேயான ஓடுகளப் போட்டிகள் நடந்தன.

நமக்கு நேர்ந்த அவமானத்தை வெற்றிக்கொள்ள, இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். என்னை அவமானப்படுத்தியவர்களைத் தண்டிக்க ஒரே வழி! அவர்கள் வெட்கப்படும்படியாக வென்று காட்ட வேண்டும் என்பதுதான். திறமையுள்ளவர்கள் அவர்கள் என்றால், அவர்களுக்கும் மேல் நான் திறமைசாலி என்று நிரூபிக்க வேண்டும் என்று அதை லட்சியமாக ஏற்றுக் கொண்டேன்.

அவமானத்தைத் தந்த அசிங்கமான பேச்சுக்களால் புண்ணாகிப் போன, நெஞ்சுக்கு, என் லட்சிய வெறி இதமாக இருந்தது. கடுமையான பயிற்சிகளின் முன்னே, அவமானம் கால் இடறி ஓடியது. அவமானப்படுத்தியவர்கள் என் வெற்றியைப் பார்த்தார்கள். கல்லூரி சேம்பியன் ஆனேன். புது சாதனைகளைப் படைத்தேன். வேறு வழியில்லை என்று ஒரு முடிவுக்கு அவர்கள் வந்தார்கள்.

பிறகு அவர்கள் எனக்கு நண்பர்கள் ஆனார்கள். அவர்களை வெற்றி கண்ட என் முயற்சியின் விளைவு என்னவாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

பாட்டுப் போட்டியில், கட்டுரைப் போட்டியில், பேச்சுப் போட்டியில் வெற்றி, என் கட்டுரையைப் படித்து தமிழ்த்துறை பேராசிரியர் எனக்கு பின்னாளில் நண்பரானார். என் நடகத் திறமையை அறிந்து காரைக்குடி முற்போக்கு நடக மன்றத்தினர் என்னை அவர்கள் குழுவில் சேர்த்துக் கொண்டனர். அதுவே என்னை சென்னைக்கு இடம் பெயரச் செய்து, இன்று ஒரு சினிமா படம் எடுக்கும் நிலைக்கு என்னை உயர்த்தித் தந்திருக்கிறது.

என்னை அவமானப்படுத்திய தோழர்கள் எல்லாம், எனக்கு அறிமுகமே இல்லாதவர்கள். அறிமுகமே இல்லாதவர்களிடத்தில் இருந்து அவமானம் எப்படி வரும்? அதுதான் சூழ்நிலை. பொறாமை நெஞ்சுக்கு காரணம் தேவையே இல்லை.

தெரிந்து கொள்ளாதர்களிடத்திலிருந்தும், புரிந்து கொள்ளதவர்களிடத்திலிருந்தும் எதிர்ப்புகள் வரும். எதிர்ப்பை ஏளனப்படுத்துவதன் மூலம்தான், வெளிப்படுத்தி, எரிச்சல் ஊட்டுவார்கள். புண்படுத்துவார்கள்.

எரிச்சலால் நம்முகம் கடுமையாகி, கருமையாகி, மன உலைச்சல் மருகும்போதும், உருகும்போதும் அவர்கள் அதைப் பார்த்துப் பரவசப்படுவார்கள். தங்களின் படுபாதகச் செயல் என்று அவர்கள் வருந்துவதுமில்லை, திருந்துவதுமில்லை. அதுதான் அற்ப சந்தோஷமாகி, அவர்களை ஆட்டிப்படைக்கிறதே!

இந்த அவமான நிகழ்ச்சியிலிருந்து நாம் ஒன்றை மட்டும் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளலாம்.

நமக்குள்ளே இருக்கின்ற நல்ல திறமைகளை, அவமானப்படுத்துபவர்கள் துல்லியமாக தெரிந்து கொள்கிறார்கள். அவற்றை நமக்கு அவர்களுக்குரிய பண்பாடு மூலம், அதாவது அன்பை கொச்சைப் படுத்தி, குரூரமுறையில் வெளிப்படுத்தி, நமக்கு கோடிட்டுக் காட்டுகிறார்கள்.

அவர்களை நாம் புரிந்துகொண்டு, நமது திறமையின் தேரோட்டத்தைப் புரிந்து கொள்வோமானால், ஆதாயம் நமக்கு, அவமானம் அவர்களுக்கு. ஆமாம், நம்மை முன்னேற்றப்பாதையில் முன்னுக்குத் தள்ளிவிடுகிற மேன்மையாளர்கள் அல்லவா!

அன்றைய சில நண்பர்கள் ஏசிய பேச்சும் ஏச்சும்தான் விளையாட்டு பற்றி என்னை நன்றாக படிக்கத் தூண்டியது. இன்று 150 புத்தகங்களுக்குமேல் எழுதக்கூடிய அறிவினைத் தந்தது என்றால், அவர்களை நான் வணங்கும் தெய்வமாக, வழிகாட்டும் அற்புமாக அல்லவா நினைத்து மகிழத் தோன்றுகிறது. வாழ்க அவர்கள் என்று இன்றும் வாழ்த்துகின்றேன். அந்த அவமானங்கள் தாம் என் தன்மானத்தை வளர்த்து, வாழ்வித்தது என்றால் உங்களுக்கும் இது பொருந்தும் அல்லவா!

# 5. வாழ்வையே திசை திருப்பிய அவமானம்

ஒருவன் பேசும் சொல்லுக்கு மற்றொருவர் வாழ்க்கையையே மாற்றியமைக்கும் சக்தி உண்டு என்றால், அப்படிப்பட்ட ஒரு வாக்கியம் என் வாழ்க்கையில் உண்மையாயிற்று. அந்த அவமான உண்மையே நன்மையுமாயிற்று.

அந்த சொற்கள் என்னை ஏளனமாக நினைத்து சொல்லப்பட்டதா? கேவலப்படுத்த வேண்டும் என்று பேசப்பட்டதா? என்பதே இன்று வரை யோசித்துப் பார்க்கிறேன். விடை கிடைக்காமல் விழித்துக் கொண்டிருக்கிறேன்.

எனக்கு ஏற்பட்ட அன்றைய அவமானம், சந்தர்ப்பத்தால் நேர்ந்ததா? தமாஷ் பண்ண வேண்டும் என்பதால் வந்ததா? எப்படி இருந்தாலும், அந்த நாளில் நான் அதை அவமானமாகத் தான் கருதினேன். ஆவேசமாகத்தான் துள்ளினேன். அருகில் இருந்தவர்களைத் தள்ளினேன். கொதித்துக் குதித்துவிட்டேன்.

அந்த ஒரு நிகழ்ச்சிதான், இன்று விளையாட்டுத் துறைக்கு இலக்கியம் கிடைக்க வழி வகுத்தது. தமிழ் இலக்கியத்தில் ஒரு புதுத்துறை பூத்துக் குலுங்கும் புரட்சியையே உண்டு பண்ணிவிட்டது.

காரைக்குடி அழகப்பா உடற்கல்விக் கல்லூரியில் படிக்கும்போது ஏற்பட்ட அவமானம், என்னை விளையாட்டுக்களில் வேகமாகப் பயிற்சி பெற விரட்டி, வெற்றி கண்டது. உடல் திறமையை வளர்த்துக்கொள்ள, அந்த அவமானம் உதவியது.

உடற்கல்வித் தேர்வில் முதல் வகுப்பில் Distinction பெற்று வெற்றி பெற்றதால், அழகப்பா கலைக்கல்லூரியில் **உடற்கல்வி இயக்குநர்** பதவியையும் பெற்றுத் தந்தது. திரு. குழந்தைநாதன் என்பவர், தமிழ்த் துறையில் விரிவுரையாளராக இருந்தார். அவர் எனக்கு நண்பரானார். என் தமிழ் அறிவில், தமிழ் படைப்புகளில் அவருக்கு ஆழ்ந்த திருப்தி. அதனால் அவருடனே கல்லூரியில் அதிக நேரம் இருக்கின்ற சூழ்நிலையும் எனக்கு அமைந்தது.

தமிழ்த் துறையில் அப்போது பணியாற்றிய பிற விரிவுரையாளர்களுக்கும் குழந்தைநாதன் அவர்களுக்கும் பனிப்போருண்டு. வெயில் தெரிந்தும் தெரியாமலும் நீறுபூத்த நெருப்பான நிலைமை. அங்கு நிறைய இருந்தது.

குழந்தைநாதன் கூட நான், அதிக நேரம் இருந்ததால் தமிழ்க் குழுவிற்கு என்மேல் ஓர் இனம்புரியாத கோபம். வெளியில் சிரித்துப் பேசினாலும், உள்ளுக்குள்ளே ஓர் உறுத்தான எரிச்சல்.

சந்தர்ப்பம் கிடைத்தது என்னை சாடுவதற்கு அவர்கள் அதற்காக காத்திருந்தார்களா என்பதை நான் எதிர்பார்க்கவேயில்லை.

கல்லூரி மலர் ஒன்று வெளியிடப் போவதாகவும், அதற்கு கதை கட்டுரை போன்றவைகளை கொண்டு வந்து தரலாம் என்றும் ஓர் அறிவிப்பு வந்தது.

அவ்வப்போது நாடகம், கவிதை, கதைகள் எழுதிக் கொண்டிருந்த நானும், கவிதை ஒன்றை எழுதிக் கொண்டு, எனது சீனியராக இருந்த **திரு.டாட்** அவர்களுடன், அந்தத் தமிழ்த்துறை தலைவர் அவர்களின் அறைக்குள் நுழைந்தேன்.

வரவேற்ற அவர், இருக்கை தந்தார். அமர்ந்தோம். கொடுத்த கவிதையை வாங்கினார். படித்தார். முகம் சுளித்தார். இமை விரித்தார். என்னை ஏறெடுத்துப் பார்த்தார். சிறிது நேரம் யோசித்தார். ஆச்சரியக் குரலில் பேசினார்.

**கவிதை நன்றாக இருக்கிறது** என்றார். கூச்சப்பட்டபடி நெளிந்து கொண்டேன்.

என் சீனியர் என்னைப் பார்த்து பாராட்டுவது போல புன்சிரிப்பை வழங்கினார்.

அடுத்து வந்த அந்த தமிழ்த்துறை தலைவரின் வார்த்தைகள், என்னை அவமான அக்னியில் அடித்துத் தள்ளியது போல வந்தன.

**இந்தக் கவிதையை உங்களுக்கு யார் எழுதித் தந்தது?**

இந்த ஒரு வாக்கியம்தான் என் உள்ளத்திலே இருந்த, இளமை வேகம் நிறைந்த தன்மான உணர்ச்சியை, சிண்டைப் பிடித்து வெளியே இழுத்து வந்தது, சீண்டி விட்டது.

என் எழுத்துக்கு ஏளனமா? எனக்கு இந்த அவமானமா? எழுந்து நின்றேன். என்ன பேசினேன் என்று தெரியாமல் பேச ஆரம்பித்தேன். கல்லா இளமையின் கூக்குரல் அது.

உமக்கு கவிதை எழுதத் தெரியவில்லை என்றால் என்னைக் கேளுங்கள் கற்றுத் தருகிறேன். யார் உனக்கு இந்தக் கவிதையை எழுதித் தந்தது என்று கேட்க, உமக்கு என்ன அருகதை இருக்கிறது என்று பலப்பல கேள்விகள் புயலாய் பேசித் தள்ளிவிட்டேன்.

என்னை சமாதானப்படுத்தி வெளியே அழைத்துக் கொண்டு வந்தார் என் சீனியர். பெரிய சண்டையில் முடிய இருந்த அந்த நிகழ்ச்சி, பெரியவர்கள் தலையீட்டின் காரணமாக, அமைதியாக முடிந்துவிட்டது.

பிறகுதான் அந்தப் பேராசிரியரது பேச்சின் அர்த்தம் புரிந்தது. அதை அவரே சொல்லி அனுப்பிய பிறகுதான் தெரிந்தது.

உடற்கல்வித் துறையில் உள்ள ஒருவர், பி.ஏவில் பொருளாதாரம் படித்த ஒருவர், இப்படிப்பட்ட கவிதையை எழுத முடியுமா என்ற சந்தேகத்தைத்தான் நான் கேட்டேன். கேட்ட விதம் சரியில்லைதான். அந்த இளைஞரின் வேகமும் நியாயம்தான். அவரது மனதைப் புண்படுத்தியதற்காக வருந்துகிறேன் என்பதுதான் அந்தத் தமிழறிஞரின் பதிலாக தூது வந்தது.

ஆனால் என் நினைவோ வேறு விதமாக இருந்தது. அவர் கேட்ட கேள்வியைக் கேட்டுச் சிரித்தவர்கள். தமிழ்த்துறையைச் சேர்ந்தவர்கள். எப்படியிருந்தாலும் எனக்கு ஏற்பட்ட அவமானத்திற்கு சமாதானமில்லை. அதற்குரிய பரிகாரததை நான் தேடித்தான் ஆக வேண்டும் என்று அவருக்குப் பதில் சொல்லி அனுப்பினேன்.

**கவிதை எழுதத் தகுதி தமிழ்ப்படிப்புதான் என்றால் அதையும் படித்து பாஸ் எண்ணி விடுகிறேன் என்றேன்.**

அதற்காக, தமிழ் எம்.ஏ. பட்டம் பெற்றேன்.

அடுத்து அவர்கள் கேட்ட கேள்வி, தமிழ் பட்டம் பெற்றால் போதுமா? எங்களது தமிழ்த்துறை இலக்கிய நூல்கள் போல, உங்கள் துறையில் என்ன இருக்கிறது என்று கேட்டார்கள்.

கவிதை எழுதி அவர்கள் மன்தைத் தொட்டு விட்டதற்கு பரிசாகப் பெற்றுக் கொண்டது, பொறுக்க முடியாத அவமானம்.

அந்த அவமானத்தால் நான் அழுது ஒதுங்கி விடவில்லை. ஆர அமர சிந்தித்து செயல்பட முயற்சி செய்தேன்.

தமிழில் விளையாட்டுத்துறை நூல்களை 100-க்கும் குறையாமல் எழுதிவிட வேண்டும். எழுதியே தீர வேண்டும் என்று நினைத்தேன். முடிவும் எடுத்துவிட்டேன்.

அவமானத்திற்கு பதிலாக கோபப்பட்டு திட்டி விட்டால் போதும். பதிலுக்குப் பதில் ஏசிவிட்டால் போதும். சந்தர்ப்பம் பார்த்து அவமானப்படுத்தியவர்களை காலை வாரிவிட வேண்டும். மான பங்கப்படுத்திவிட வேண்டும் என்பதுதான் சராசரி மனிதர்களின் குணாதியமாகும்.

நான் அப்படி வாழ ஆசைப்படவில்லை. ஆழ்ந்து சிந்தித்தேன். அதை நினைத்த வண்ணமே வாழ்ந்தேன்.

எனக்கு ஏற்பட்ட அவமானம். என் வாழ்வை திசை திருப்பும் அற்புதமான அறை கூவலாக அமைந்துவிட்டது. இது ஒரு வித்தியாசமாக அவமானம். மாறுபட்ட அனுபவம் என்று உணர்ந்தேன். உடற்கல்வித் துறையைச் சார்ந்த ஒருவனை, தமிழ்படிக்க வைத்து, தமிழ் நூல்களை எழுத

வைத்து தமிழ் இலக்கியத்திற்கு ஒரு புதுத்துறையை ஏற்படுத்தச் செய்த அந்த அவமானப்பட்ட சூழ்நிலையை இன்றும், நினைத்துப் பார்க்கிறேன்.

அந்த மூதறிஞர், தமிழ்ப்பெரும் தலைவர் வாயிலே அந்த வார்த்தையே வரவழைத்த தமிழ்த் தாய்க்கு நன்றி சொல்கிறேன்.

தமிழ்துறை தலைவர், மதுரை பல்கலைக்கழகத் துணை வேந்தர் என்று பல பெரிய பொறுப்புகளை வகித்து தமிழ்ப்பணி செய்த டாக்டர்.வ.சு.ப. மாணிக்கம் அவர்கள்தான் என்னைக் கேள்வி கேட்டவர். கிளறிவிட்டவர். மனதைப் பதம் பார்த்தவர்.

இன்று அவரை நன்றியுடன் நினைக்கிறேன். வணங்குகிறேன்

அவர் அன்று அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கா விட்டால், என்னை பலர் முன்னே தலைகுனிய வைத்திருக்காவிட்டால், இன்று நான் ஒரு எழுத்தாளராக ஆகியிருக்க மாட்டேன்.

தமிழைப் படித்துப் படித்து சுவைத்திருக்கும் வாய்ப்பையும் இழந்திருப்பேன்.

ஓடி ஓடி, ஆங்கில விளையாட்டுகளை தேடித்தேடி படித்துப் படித்து, நினைத்து நினைத்து புதிய நூல்களை எழுதி எழுதி திளைத்திருக்கவும் மாட்டேன். குவித்திருக்கவும் மாட்டேன்.

அவமானம் என்பது ஒருவரை ஆக்கப் பூர்வமான வழியில் செலுத்தி விடும் அற்புத நிகழ்ச்சி என்பதற்கு. இந்த ஒரு நிகழ்ச்சியே சான்று.

என்னை அவமானப் படுத்தியவர்கள், என்னை அப்படி ஆளாக்க வேண்டும் என்று நினைத்து முனைந்து செயல்பட்டார்கள் என்று இன்றும் நினைத்து மகிழ்கிறேன். வாயாராப் புகழ்கிறேன்.

இன்னும் பல அவமானங்கள் இருக்கின்றன. என்னை எப்படி வழி நடத்தின என்பதையும் காண்போம்.

# 6. அவமானத்தின் கொடை - ஒரு கடை

அவமானங்கள் எப்படி ஒருவரது தன்மானங்களைத் தட்டி எழுப்பி வீராவேசம் கொள்ள வைத்து, வெற்றிப் பாதையில் ஒருவித வெறியுடன் நடக்கத் தூண்டுகின்றன என்கிற கருத்தின் அடிப்படையில்தான், எனது அவமான நிகழ்ச்சிகளை தொடர்ந்து தருகிறேன்.

மற்றவர்கள் பட்ட அவமானத்தை எழுதினால், அது அவர்களுக்கு மரியாதை குறைவாகத் தெரியும். மான உணர்ச்சியைத் தூண்டிவிடும். அவர்களும் மானபங்கப் படுத்தப் பட்டதாக நினைத்து சீறி விழுவார்கள். எகிறிக் குதிப்பார்கள்.

ஏன் அந்த வம்பு என்பதற்காக, என்னைத் துளைத்த அவமானங்கள், எப்படி என்னைத் தூண்டின? துரத்தின? உறவை மறுத்து, உலகை வெறுத்து, ஒன்றையே நினைத்து, உறுதியாக செயல்பட வைத்தன என்பதைத்தான் இங்கே எழுதுகிறேன்.

சொந்த அனுபவம் என்பதால், எழுத சுகமாக இருக்கிறது. சம்பவங்களும் கலப்பில்லாத உண்மையாக இருக்கின்றன. ஆகவே, உங்களுக்கு படிப்பதற்கு சுவையாக இருக்குமல்லவா? அதற்காக...

இதோ என்கூட வாருங்கள். சென்னையில் உள்ள பிரபல வியாபார ரீதியான ரெங்கநாதன் தெருவிற்கு.

வீதியிலே ஒரு நிமிடம் கூட நிற்க முடியாதபடி கூட்டம் அலைபாயும். அதிலே நீங்கள் மிதந்தபடி போய்விடுவீர்கள். நீங்கள் நடக்கவே வேண்டாம். கூட்டத்தின் நெருக்கடியே உங்களை அலாக்காகத் தூக்கிப் போய்விடும்.

அப்படிப்பட்ட தெருவில் உள்ள தெருவீட்டில்தான், ஒரு வீடு பிடித்து வாடகைக்கு குடியிருந்தேன். வீதியில் உள்ள

எனது வீட்டிற்குள் போக வேண்டுமானால், ஒரு செருப்புக் கடைக்குள் புகுந்துதான் போக வேண்டும்.

என்னுடைய மோட்டர் சைக்கிளை வீட்டின் முன்புறத்துக் கொண்டு செல்ல வேண்டுமானால், அவர்கள் கடையை அடைக்கிறவரை காத்துக் கொண்டிருக்க வேண்டும்.

அவர்கள் கடை திறக்கும் நேரம் காலை 6 மணி மூடும் நேரம் இரவு 11 மணி.

நான் அதற்குள்ளாக காலையில் விழித்து வண்டியை வெளியே கொண்டு வந்து விடவேண்டும். இரவு கண்விழித்திருந்து வண்டியை உள்ளே கொண்டு செல்ல வேண்டும்.

இதுபோன்ற சூழ்நிலை எனக்குக் கஷ்டம்தான். இருந்தாலும் இந்தக் கஷ்டமான சூழ்நிலைதான். எனக்கு இஷ்டமான சூழ்நிலையாகி விட்டிருந்தது.

அதாவது கடைக்காரர்களின் உழைப்பு, கடினமான உழைப்பு, முகத்தில் சோர்வு இல்லாமல் உடலில் களைப்பு தெரியாமல், ஏறத்தாழ 17 மணி நேரம் உழைக்கிற உழைப்பு என்னை உசுப்பி விட்டிருந்தது.

உத்தியோகம் பார்த்து என்ன கிழித்திருக்கிறோம்? பத்தாத சம்பளம். பட்டியல் போட்டு வரவு செலவு. பட்ஜெட்டான வாழ்க்கை முறை.

நாமும் தொழில் செய்தால் என்ன?

படித்துவிட்டு உத்தியோகம் பார்ப்பதுதானே கௌரவம். பெருமை. வியாபாரம் செய்வது வெட்கக் கேடல்லவா! யார் உங்களை மதிப்பார்கள்?

இப்படி எண்ணி எண்ணித்தான், அறிவும் திறமையும் உள்ளவர்கள்; படித்துப் பட்டமும் பெற்ற பலர், பாழாகிப் போயிருக்கிறார்கள்.

எழுதத் தெரிந்தவனுக்கு என்ன வியாபாரம் பிடிக்கும்? அதுவும் ஒழுங்காக வாழ வேண்டும் என்பதை உறுதியாகப் பற்றிக் கொண்டு, இரவு பகல் சிந்தித்து எழுதிக் கொண்டிருக்கிற எனக்கு, என்ன வியாபாரம் பிடிக்கும்?

நூறு புத்தகங்கள் எழுதி ஆக வேண்டும் என்ற வெறி பிடித்து வாழும் எனக்கு, பதிப்பகம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று முயல் வேகத்தில் தொடங்கிய ஆர்வம், மாட்டு வேகத்தில் நடந்தது. மாட்டை இழுத்தால்தான் வரும். இழுக்கும்போதே பின்னால் போகும். விட்டால் வேறுபக்கம் போகும் மிரளும்.

இப்படி செப்படி வித்தை போட்ட வியாபாரத்தை வீட்டுக்குள்ளே வைத்துக் கொண்டு ஆபிசுக்கும் வியாபாரத்திற்கும் அலைந்து திரிந்து அல்லாடிக் கொண்டிருந்த போதுதான், அந்த அவமானம் எனக்கு ஏற்பட்டது.

வீட்டிற்கு முன்புறம் உள்ள செருப்புக் கடையை ஒட்டி ஒரு தந்திக் கம்பம். அதைப் பார்த்ததும் எனக்கு ஒரு எண்ணம். ஒரு ஆசை. அபிலாஷைதான்.

இரவு பத்துமணிக்கு மேலாக, **ராஜ்மோகன் பதிப்பகம்** என்று ஒரு 2 அடி நீளம், 6 அங்குல அகலம் உள்ள ஒரு அட்டையில் எழுதி, பார்ப்பவர்களுக்குத் தெரிகிற உயரத்தில் கம்பத்தில் கட்டிவிட்டு, உறங்கப்போனேன்.

“உங்கள் பதிப்பகம் தெரியாமல் தவிக்கிறோம். ஒரு சின்ன போர்டாவது எழுதிப் போடக்கூடாதா?” என்று கேட்ட பலரின் கேள்விக்குப் பதிலாக, அந்த அட்டையைக் கட்டித் தொங்கவிட்டு, பூரிப்புடன் தொங்கும் அட்டையில் பார்த்த அந்த அற்ப சந்தோஷத்தில், உறங்கப் போனேன்.

காலையில் ஏதோ பெரிய சத்தம் கேட்டு, திடுக்கிட்டு எழுந்தேன். கடைக்காரனின் குரல்தான் அது.

வண்டியை வெளியே எடுத்து வையுங்கள் என்று சத்தமாக சொல்லிக் கொண்டிருக்கிறாரா என்று நான் நினைப்பதற்குள், அவரது பேச்சில் ஆவேசம் தெரிந்தது.

இந்த விளம்பர அட்டையை யார் தொங்கவிட்டது? என்ற கேள்விக்கு எழுந்துபோய், நான்தான் என்றேன்.

இங்கே ஏன் கட்டினீர்கள் என்றார்.

கார்ப்பரேஷன் தந்திக்கம்பம் தானே! அதுதான் கட்டி வைத்தேன் என்றேன்.

என் கடை முன்னே அப்படி கட்டக்கூடாது என்றார். குரல் ஓங்கியது.

எங்கள் வீட்டு வாசலில் நீங்கள் கடை வைத்திருக்கிறீர்களே என்றேன்.

அது வீட்டுக்காரர் இஷ்டம். என் கடைக்கு முன்னே விளம்பரம் ஒன்றை கட்டி வைக்க நான் அனுமதிக்க மாட்டேன்.

என் பதிப்பகத்துக்கு ஒரு விலாசம் வேண்டுமே? விளம்பரம் வேண்டுமே என்றேன்!

**விலாசமே இல்லாத உங்களுக்கு விளம்பரம் எதற்கு? அவசியம் விளம்பரம் வேண்டுமென்றால், ரெங்கநாதன் தெருவில், ஒரு கடையை வாங்கி, அதிலே உங்கள் போர்டை எழுதி வையுங்கள்.** முடிந்தால் செய்யுங்கள். இல்லையேல் பேசாமல் போங்கள் என்று பேசியபடி, அந்த அட்டையைப் பிய்த்து வந்து, என் கையில் தந்துவிட்டுப் போனார்.

தெருவில் பத்துபேர் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். கடை வாங்க கையாலாகதாவன் என்பது போல் அவர் பேசியதைப் பார்த்து, நிலை குலைந்து போனேன்.

ஹலோ Mr. இங்கே வாங்க. ரெங்கநாதன் தெருவுல கடை வாங்கி, அதுலதானே போர்டு வைக்கச் சொன்னீங்க...

ஸஹீ... உங்க சவாலை ஏத்துக்கறேன். கடைய வேற எங்கயும் வாங்கப் போறதில்லே. உங்கக் கடைக்கு எதுத்த மாதிரியே ஒரு கடையை வாங்கி, நீங்க தினம் பார்க்குற மாதிரியே பெரிய பெரிய சைஸ்ல பத்து போர்டு வைக்குல நான்... பிறக்குல என்று கத்தினேன். **மானத்தின் ஓலம் அது.**

கௌரவமே வாழ்க்கை என்று கருதிக் கொண்டு வாழ்ந்த என் கௌரவம், சுற்றி நின்று வேடிக்கைப் பார்த்தவர்கள் முன்னே சுக்குநூறாகிப் போனதால், சுருண்டு போனேன்.

எப்படி ஒரு கடை வாங்குவது? ரெங்கநாதன் தெருவில ரோட்டில் உள்ள ஒரு 5 அடிக்கு 5 அடி இருக்கும் இடத்திற்கே அந்தக் காலத்தில் 5000, 10000 ரூபாய் என்பது பகடி. அதை Goodwill என்பார்கள். அனாமத்தாகத் தரப்படும் பணம் அது. அப்புறம் அட்வான்ஸ், வாடகை.

சவால் விட்டு வந்து உட்கார்ந்த என் சரீரம் முழுவதும் வியர்வை வெள்ளமாக ஓடியது. மனதோ புயலாக சாடியது.

எப்படி சவாலுக்கு பதில் சொல்ல முடியும்! ஏழ்மை என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தது.

உழைப்பு, உழைப்பு, உழைப்புதான். அதற்கு பதில் கௌரவம் கத்திப் பார்த்தது.

புத்தகங்கள் எழுதி, பதிப்பித்தால்தான் பணம் சம்பாதிக்க முடியும்.

கடையில் உள்ள படிக்காத அந்த இளைஞர்கள், பதினேழு மணி நேரமும் உழைக்கிற போது, உடற்பயிற்சியும் உள்ள முயற்சியும் உள்ள என்னால் உழைக்க முடியாதா? உழைக்கத் தொடங்கினேன்.

இரவு முழுவதும் எழுத்தும் படிப்பும், பகல் முழுவதும் புத்தகம் விற்க அலைச்சல். அதற்கிடையில் பாடி TVS கம்பெனியில் விளையாட்டு அலுவலர் உத்தியோகம்.

பணம் திரட்டுவதற்கு முன்பு, எந்தக் கடை காலியாகும்? யார் விற்பதற்கு தாயராக இருக்கிறார்கள் என்று கடை கடையாய் அலைந்து, வேண்டியவர்களை விசாரித்து, புரோக்கர்களுக்கு தீனி போட்டுப் போட்டு, சல்லடையாய் சலித்தேன்.

ஒரு பள்ளியில் டிராயிங் மாஸ்டர். அவர் போட்டோ ஸ்டுடியோ ஒன்று வைத்திருந்தார். அவர் வெளிநாடு போகத் திட்டமிட்டிருந்தார் என்ற ஒரு தகவல். அவரிடம் தொடர்பு கொள்ள ஒரு மாதம். அறிமுகம் ஆகி அந்தக் கடையில் போய் உட்கார்ந்து பேச ஒரு மாதம். அவரோடு நட்பை ஏற்படுத்திக் கொள்ள இரண்டு மாதம்.

அவரது முயற்சிக்கு ஒத்தாசையாக அலைந்த இரண்டு மாதம். இப்படி நன்கு பழகிய பிறகு, என்மேல் நம்பிக்கை ஏற்பட்ட பிறகு, விஷயத்தை வெளிப்படுத்தி வியாபாரத்தைப் பற்றிப் பேச இரண்டு மாதம். ஒரு வழியாய் எல்லாம் நடந்தது.

முதலில் கடைக்கு ரூ.6000/- என்று பேசி முடித்தோம். பணம் கொஞ்சம் குறைந்தது. ஒரு மாதம் கழித்துப் போய் பணம் தந்தால், 9000 ரூபாய் என்று ரேட் உயர்ந்து போனது.

அதிகம்தான் என்றாலும், கடை கிடைக்கிறதே! சவால் முடிகிறதே என்ற சந்தோஷம். கேட்டதைக் கொடுத்தேன். பத்திரத்தை முடித்தேன். சாவியை கையில் எடுத்தேன். வேகமாக நடந்தேன்! எங்கே? வீட்டிற்கோ? இல்லை.

விளம்பரப் பலகை எழுதும் கடைக்கு. 10 போர்டுக்கு ஆர்டர் தந்துவிட்டுதான் வீட்டுக்கு வந்தேன்.

அந்தக் கடைதான் NC Sports கடை என்னும் பெயரில் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது.

அந்தக் கடைக்கார நண்பரின் தயவால் ஏற்பட்ட அவமானம். இன்று ஒரு கடையை விலைக்கு வாங்குகிற வேகத்தை அளித்ததல்லவா என் திறமையை வெளிப்படுத்த உதவியதல்லவா?

அவமானத்திற்கு நான் நன்றி சொல்கிறேன். அவமானப் படுத்திய அந்த இனிய நண்பருக்கு வணக்கம் சொல்கிறேன். கடைக்குரிய ரேட்டை அதிகப்படுத்திய பிறகும், கடையை விட்டுக் கொடுத்தாரே, அவருக்கு என் பணிவான வணக்கத்தைச் சொல்கிறேன்.

அவமானம் எழுப்பிய தன்மானம் நல்ல முடிவைத் தானே தந்திருக்கிறது. பின் ஏன் அவமானத்தைக் கண்டு சங்கடப்பட வேண்டும். விரும்பி ஏற்கலாமல்லவா?

# 7. இச்சகமும் அச்சகமும்

ஆண்டவனை உண்டு என்பார்கள் பலர். இல்லை என்பார் பலர். உண்டு என்றாலும் உண்டுதான். இல்லை என்றாலும் இல்லை தான். இதை எடுத்துக் கொள்வோர் பண்பைப் பொருத்தே பதில் அமையும்.

அதுபோலவே அவமானத்தையும், உணர்வோடு ஏற்றுக் கொள்பவர்கள் சிலர். உதறிவிட்டுப் போவோர் பலர். அந்த அவமானத்தின் சூழ்நலையை, சூட்சமத்தை, சூட்டினை உணர்ந்து சுதாரித்துக் கொண்டு செயல்படுபவர் ஒரு சிலர் தான்.

அழுவதால் அவமானத்தைக் கழுவிட முடியாது. ஆத்திரப்பட்டுத் திட்டுவதால், அவமானத்தை துடைத்துவிட முடியாது. அடுத்தவர் யாரும் பார்க்கவில்லையே என்று விளைந்த வேதனையை, வெட்கத்தைக் களைந்துவிடவும் முடியாது.

ஏன் அந்த அவமானம் ஏற்பட்டது? நம்மை கேவலமாகப் பரிதாபப் பட வைத்த அவமானத்திற்குரிய பரிமானம் என்ன? பரிகாரம் என்ன என்று சிந்திப்பதும், திட்டங்களை வந்திப்பதும், காரியங்களை சந்திப்பதும் மிகவும் முக்கியமானதாகும்.

அப்போதுதான் அவமானப்பட்டவரின் முழுத் திறமையும் வெளிப்படும். பெருமையும் பிறருக்குப் புரியும். பிரதாபமும் தெரியவரும்.

என் விளையாட்டு நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதற்கு நான் ஒரு அச்சகத்தையே ஆரம்பித்திருக்கிறேன். ஆர்வம் குறையாமல் இன்னல்கள் பல சேர்ந்தாலும் நடத்திக் கொண்டு வருகிறேன் என்றால், நான் அச்சகத்தை ஆசைப்பட்டுக் கொண்டு ஆரம்பிக்கவில்லை.

நிறைய வருமானம் கிடைக்கும் என்ற நப்பாசையில் கூட ஆரம்பிக்கவில்லை, நடத்தவில்லை. எனக்கு ஏற்பட்ட அவமானம்தான், இந்த எண்ணத்தைத் தூண்டியது.

விளையாட்டுத் துறைக்கான நூல்களை எழுதத் தொடங்கிய காலக்கட்டத்தில், நான் பல அச்சகங்களைத் தேடி அலைய நேர்ந்தது. அப்படி அச்சகம் கிடைத்தாலும், ஆர்வமுள்ள உரிமையாளர் கிடைக்கவில்லை. ஆர்வமுள்ள உரிமையாளர் கிடைத்தாலும், தவறுகள் நிறைய வராமல் செய்கிற 'கம்பாசிட்டர்கள்' கிடைக்கவில்லை.

விளையாட்டுத்துறை நூல்களை கம்போஸ் செய்ய, வேலைக்காரர்கள் வேம்பாக வெறுத்தது. எனக்குத் தீம்பாக அமைந்தது. அதனால் அடிக்கடி அச்சகத்தை மாற்ற வேண்டியதாயிற்று.

கடைசியில், **நண்பர்கள் அச்சகம்** என்பதின் உரிமையாளர் மணி என்பவர் அறிமுகமானார். நல்ல உற்சாகம் கொடுத்து, எனக்குப் பல உதவிகளைச் செய்து, நண்பராகவும் ஆகிவிட்டார். அதிக எண்ணிக்கையில் அவரிடம்தான் நூல்கள் அச்சாகின. அந்த அமரரை மானசீகமாக வணங்குகிறேன்.

காலத்தின் கோலம் அவருக்கு மது குடிக்க யாரோ ஒரு பாவி கற்றுக் கொடுத்ததின் காரணமாக, அவரது வாழ்க்கைப் பாதையே, வழிமாறி, திசைமாறி, புயல்பட்ட வாழைத் தோப்பு போல ஆயிற்று. அவரை மாற்றவும் முடியவில்லை. அவர் அதற்கு 'சிஷ்யராகி' விட்டார். சின்னச் சின்ன குளறுபடிகள்.

ஒரு நாள், நான் வாங்கிப் போட்டிருந்த பிரிண்டிங் பேப்பர் ரீம்கள் குறைந்தபோது, அதை அவர் விற்றுவிட்டார் என்று தெரியவந்தது. ஏன் எடுத்தீர்கள் என்று கேட்டபோது, 'நான் விற்றது குற்றமில்லை', உங்களை யார் முன் கூட்டியே கொண்டு வந்து இங்கு வைக்கச் சொன்னது? என்று அவர் கேட்க, நான் பேச, நட்பில் கொஞ்சம் விரிசல் ஏற்பட்டது.

அதற்குள், குடியால் அவரது உடல் நலம் கெட்டது. மூன்று பேர் பாகஸ்தராக இருந்த அந்த அச்சகமும் பிளவுபட்டது.

மணியின் மரணத்திற்குப் பிறகு, அச்சகமும் விற்கப்பட்டு விட்டது. மீண்டும் எனது அச்சகப் படையெடுப்பு முயற்சிகள் ஆரம்பமானது.

ஒருவரைத் தேடிப் பிடித்தேன். ஒரு புத்தகம் அச்சிட்டுத் தரவே ஓராண்டுக்கும் மேல் ஆக்கிவிட்டார். ஒருநாள் கோபத்துடன் போய், எனது புத்தகத்தை வேகமாக செய்து தர முடியுமா, முடியாதா என்று பரிதாபமாகக் கேட்டேன்.

அவரோ ஏற இறங்க என்னை அலட்சியமாகப் பார்த்தார். அவசரம் என்றால், நீங்களே ஒரு அச்சகத்தை ஆரம்பித்துக் கொள்ள வேண்டியதுதானே! உங்கள் வேகத்திற்கு என்னால் ஓடி வர முடியாது என்னிடம் வேலை தருவது என்றால், பத்து தடவை வந்து போவதைப் பார்க்கக் கூடாது. பிறகு உங்கள் சௌகரியம் என்றார், பேச்சிலே பரிகாசம்.

வாயடைத்துப் போய் நின்றேன்.

**சார், உங்களால பிரஸ் ஆரம்பிக்க முடியாது. அதுல ஆயிரத்தெட்டு அவஸ்தை. நானே திண்டாடுறேன் நீங்கள்லாம் எம்மாத்திரம்? உங்களால் பிரசை நடத்த முடியாது**. என்று பேசிக் கொண்டே போனார். பார்வையில் அகங்காரம்.

படிக்காத பிரஸ் உரிமையாளர் படித்து பட்டம் பெற்று புத்தகம் எழுதுகிற அளவுக்கு அறிவு பெற்ற ஒருவரைப் பார்த்து **என்னால் முடியும், உன்னால் முடியாது** என்பது போல, பேசிய பேச்சுதான், என்னை வெட்கத்துள் வீழ்த்தியது.

காசைக் கொடுத்துவிட்டு கேட்ட அவமானப் பேச்சு பல.

படிக்காத பாமரனுக்கு முடிகிற காரியம், படித்த என்னால் ஏன் முடியாது? பார்த்து விடுவோமே அதையும் என்று வெடித்து வெளி வந்த முக வேர்வையை, அவலமாகத் துடைத்து விட்டு வெளியே வந்தேன்.

அவமானப் படுவதற்கும் ஓர் அளவில்லையா?

சீக்கிரம் வேலையை செய்து கொடு என்றால், உனக்கென்ன யோக்கிதை இருக்கிறது என்று அவர் பேசிய பேச்சு எனக்குள் ஆத்திரமூட்டியது. தனியே வந்து தவித்தேன், துடித்தேன். வாய்க்கு வந்ததையெல்லாம் திட்டினேன்.

புத்தகத்தை பொது நூலகத்திற்கு சப்ளை செய்ய வேண்டும் என்ற அவசரத்துக்கு ஏற்பட்டதுதான் அந்த அவமானம்.

என்ன இழப்பு நேர்ந்தாலும் சரி. இனிமேல் எந்த பிரஸ்க்கும் போவதில்லை என்று சத்தியம் செய்து மனதை சமாதானப் படுத்தியபடி, ஓர் உறுதியுடன் புறப்பட்டேன்.

நேரே போய், ஒரு வீட்டுப் புரோக்கரைப் பார்த்தேன். அச்சாபீஸ் திறக்க ஒரு வீடு வேண்டும் என்றேன். வீடு எதுவும் இல்லை. ஒரே ஒரு ரூம் இருக்கிறது. போதுமா என்று பார்த்தால், இப்போதே முடித்துவிடலாம் என்றார்.

போனோம் பார்த்தோம். இடம் போதாது என்றாலும், சம்மதம். வீட்டுக்காரரைப் பார்த்தோம். கையில் இருந்த 200 ரூ. அட்வான்ஸ், புரேக்கருக்கு 100 ரூபாய்.

வீட்டுக்காரர் வீட்டில் இருந்த ஒரு அட்டையை எடுத்து கிரேஸ் பிரிண்டர்ஸ் என்று எழுதி, அந்த புது இடத்தின் வாசலில் கட்டுகிறபோது, இரவு 10 மணி.

வீட்டிற்கு வந்து, உட்கார்ந்த போதுதான்; மனதுக்கு ஒரு ஆறுதல். வெறும் அறைக்கு முன்னே கிரேஸ் பிரிண்டர்ஸ் என்று எழுதி வைத்ததினால் ஏற்பட்ட வெற்றியா என்றால், அது வெற்றியின் ஆரம்பம். அவமானத்தை விரட்டி அடிக்க, கொடுத்த முதல் உதையின் முனைப்பான முயற்சி அது.

அடுத்த நாள் காலை. ஆவடிக்குப் போய், பிரஸ் சாமான்கள் வாங்கி வந்தது. மாஜிஸ்ட்ரேட் அவர்களிடம் பிரஸ் நடத்த அங்கீகாரம் பெற்றது. பிரஸ் ஆரம்பித்த இடத்தில் ஏற்பட்ட மின்சாரப் பிரச்சனை. பக்கத்து கடைக்காரர்களிடம் போட்ட சண்டை, மூண்ட பிரச்சனை எல்லாம் பெரிய கதைதான். ஒரு நாவலே எழுதலாம்.

நினைத்தாலே நெஞ்சம் நின்று, பிறகுதான் துடிக்கும். அப்படிப்பட்ட அவலங்கள், ஆக்ரோஷமான தாக்குதல்கள். பிறகு, அச்சகத்தை விரிவுபடுத்துவதற்கு ஏற்பட்ட இன்னல்கள். இடைஞ்சல்கள்.

இவையெல்லாம் சகஜம்தான். எதிர்நீச்சல் போடுகிற போது, கைகள் வலிக்காமல், கால்கள் அயராமல் இருக்குமா!

எல்லா சோதனைகளுக்கும் மேலே எனக்கு ஏற்பட்டது மனமகிழ்ச்சியல்ல. மனதிருப்தி. ஒரு ஆத்ம திருப்தி.

உன்னால் முடியாது என்று உறுமிய ஒரு மனிதனுக்கு முன்னே, என்னால் முடியும் என்று நம்பிக்கை கொண்டு, ஒரு அச்சகத்தை உருவாக்கியதுடன், எனது விளையாட்டுத் துறை நூல்களை வெளியிடும், ஒரு வாய்ப்பு ஏற்பட்டதே! என்று அந்த அற்புத மனிதரின் வாய்க்கு சர்க்கரையை அள்ளிப் போட்டு வணங்கித்தானே, நமது நன்றியைக் கூற வேண்டும்.

இச்சகம் பேசுவோர் முன்பு உருவாகிய என்னுடைய அச்சகத்தைப் பார்க்கும் போதெல்லாம், இன்னும் எனக்கு அவமானம் பல நேரிட வேண்டும் என்று ஆசைப்பட்டேன். இன்னும் அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. வேண்டாம் என்றாலும் அவமானங்கள் என்னை விரட்டிக் கொண்டே வருகின்றன.

# 8. வீடு தந்த பாடு

ஒருவரது அறிவை அழித்துப் போடுவது பொறாமைதான். ஒருவரது முன்னேற்றத்தைத் தடுத்து மடக்குவதும் பொறாமைதான். ஒருவரது வாழ்வையே நாசமாக்கி விடுவதும், எப்போதும் ஒடிப்பதும், உடைப்பதும் பொறாமைதான்.

பொறாமை என்பது மனப்புழுக்கத்தை அதிகமாக்கி, மன அமைதியை முடமாக்கி, யோசிக்கும் நல்ல சிந்தனையையே தரைமட்டமாக்கியும் விடுவதால், பொறாமை கொண்டவர் வீழ்வதும், பொறாமையில் பாதிக்கப்பட்டவர்கள் சிறப்பாக வாழ்வதும் சகஜமாக ஆகிவிடுகிறது. சில சமயங்களில் சரித்திரமும் ஆகிவிடுகிறது.

என்னுடைய ஜாதகமும் இப்படிப்பட்டதாகவே இருக்கிறது என்றால், அது உண்மைதான். மிகையானதல்ல

என்மேல் பொறாமை கொண்டவர்களின் பேரன்புதான் என் வளர்ச்சிக்கும் காரணம்.

என்னை தூவெனத் துப்பித் தூற்றி, சீயென ஏசிப் பேசி: என் முயற்சிகளுக்கு முனை முறியும்படியான வதந்திகளைப் பரப்பி விட்டாலும் கூட, நான் அந்த வழுக்கலில் விழாமல், தடைகளில் இடறிவிழாமல், முன்னேறி வந்திருக்கிறேன் என்றால், பொறாமைக்காரர்களின் போர்க்குணமும், அதனால் ஏற்பட்ட அவமானமும்தான் அடிப்படைக் காரணம். நான் ஒருவருக்கு உதவி செய்யப் போனாலும், அவர் எனது உதவியைப் பெற்றுக் கொண்டு, அதற்குப் பரிசாக அநியாயமான குற்றச்சாட்டுகளைக் கூறுவார். அதுவே என்னை தன்மானமுள்ளவனாக மாற்றிவிடும்.

ஒரு புழுவைக் கொட்டிக் கொட்டிக் குளவியாக்கிவிடும் விஷயத்தை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். அதுபோல்தான் என் வாழ்வும்.

ஒன்று முடிந்தது என்று நான் ஓய்வெடுக்க ஆசைப்படுகிற போது, ஒரு அவமானம் ஏற்படும். அதை சரிகட்ட, அந்த அவமானத்தைத் துடைத்துக் கொள்ள முயற்சிப்பதுதான், தொடர்ச்சியாக என் வாழ்க்கையின் வாடிக்கையாகிவிட்டது.

விளையாட்டு நூல்கள் 100 எழுதியாக வேண்டும். அதிகமான பட்டங்களை வாங்க வேண்டும். அச்சகம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும். விளையாட்டு பொருட்கள் விற்கும் கடை ஒன்றைத் தொடங்க வேண்டும் என்ற என் எல்லா முயற்சிகளுக்கும், நான் காரணமல்ல. காரணமே அல்ல!

என்மேல் அன்பு கொண்ட பொறாமைக்காரர்களின் பேருதவிதான் காரணம். அவர்கள் அறிவு சான்ற உதவிக்கும் ஆக்கப் பூர்வமான அறிவுரைகளுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னால் முடியாது என்று முடிவெடுத்துவிட்ட காரியங்கள் எல்லாம், எனக்கு நேர்ந்த அவமானங்கள்தான் ஆர்ப்பரித்து எழவைத்தன என்பதற்கு இன்னும் ஒரு சூழ்நிலையைத் தான் இங்கே விளக்க இருக்கின்றேன்.

1965-ம் ஆண்டிலிருந்து 1986-ம் ஆண்டு வரை வாடகை வீடுகளிலேயே வாழ்ந்தாகிவிட்டது.

நான் வாங்குகிற சம்பளத்தில், வீடு வாங்க முடியும்? அல்லது இடம் வாங்கி வீடு கட்டவா முடியும்? என்று யோசித்து நம்பிக்கை இழந்துவிட்ட நிலையில் ஒருநாள், என் வாடகை வீட்டு உரிமையாளர் என்னிடம் வந்தார். நீங்கள் உடனே வீட்டைக் காலி செய்தாக வேண்டும் என்றார். அவரது திடீர் அறிவிப்பு, என்னை திக்குமுக்காடச் செய்துவிட்டது.

காரணம் கேட்டேன். உண்மையைச் சொல்லவில்லை. பொய்யாக பல காரணங்களைக் கூறினார். நான் குடிவரப்போகிறேன் என்றார். அவர் ஏற்கனவே வசதியாக பெரிய வீட்டில்தான் வசிக்கிறார்.

அவர் கூறிவந்த பல காரண்கள் பொருந்தாமல் இருந்தாலும், அதற்கான உள்நோக்கம் பற்றி அறிய முடியவில்லை. அந்த வீட்டில் நானிருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. காரணம் என்மேல் அவருக்கு ஏற்பட்ட பொறாமை உணர்வுதான்.

அந்த வீட்டுக்காரர் புதிதாகக் கட்டிய அந்த வீட்டுக்கு, பலர் வந்து பார்த்துவிட்டுப் போனாலும், வரத் தயங்கினார்கள். வந்து குடியேறிவிட்டால் பெயர் பாழாகிவிடுமோ என்றும் பயந்தார்கள். காரணம்,

புதிய வீட்டைக் கட்டிவிட்டு, அதற்கொரு வாட்ச்மேனை வைத்தார் அவர். அந்த வாட்ச்மேனோ, வீட்டைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தார். இரவில், குறைந்த வாடகையில், தவறுகள் நடப்பதற்கு உதவிக் கொண்டிருந்தார்.

சுற்றுப்புறமெல்லாம், அது ஒரு மாதிரிப்பட்ட வீடு என்ற புகழைப் பெற்றுவிட்டது. இந்த விஷயம் எனக்குத் தெரியாது. ஏற்கனவே குடியிருந்த வீட்டில், அந்த வீட்டுக்காரர் தந்த பிடுங்கலால், வீட்டைக் காலி பண்ணுவதாகக் கூறிவிட்டு, நான்கு நாட்கள் தவணை கேட்டுவிட்டு அலைந்த போதுதான், இந்த வீடு எனக்குத் தென்பட்டது. நான்கே நாட்களில் குடிவந்துவிட்டேன். அக்கம் பக்கம் உள்ளவர்கள் எங்களை ஒரு மாதிரியாகப் பார்த்த போதுதான், விஷயம் புரிந்தது. என்னையும் ஒரு 'தொழில்' செய்பவனாகத்தான் நினைத்தார்கள். பல நாட்கள் ஆன பிறகுதான், நிதானமாக உண்மை புரிந்தது.

பிறகு, அந்த வீட்டின் பழியைப் போக்க நான் பல முயற்சிகள் மேற்கொண்டேன். படித்தவர்கள், டாக்டர்கள், வக்கீல்கள் என்று பலரைத் தேடிப்பிடித்து, 8 குடும்பங்களைக் குடியமர்த்தினேன்.

அந்த வீட்டிற்கு ஒரு புதிய மரியாதை கிடைத்தது. அந்த வீட்டைப் பற்றிய எல்லாவற்றிற்கும் என்னிடம் வந்துதான் கேட்பார்கள். நானும் பொறுப்போடு கவனித்துக்

கொண்டேன். அதுதான் எனக்குப் பொல்லாங்காய் அமைந்துவிட்டது.

அந்த வீட்டுக்கு நான்தான் சொந்தக்காரன் என்று எல்லோரும் நினைத்துவிட்டார்கள் என்று அந்த வீட்டின் உரிமையாளர் நினைத்துவிட்டார். என்னைத் தங்கவிட்டால், அந்த வீடு பறிபோய்விடும் என்றும் தவறாக வேறு நினைத்துவிட்டார்.

என் பணியை அவர் தவறாக நினைத்ததுமே, தகராறு அவர் மனதுக்குள் தலை தூக்கிக் கொண்டது. என்னிடம் பேசிய பேச்சுக்களில் அன்பு குறைந்தது. ஆணவம் கொடி கட்டிப் பறந்தது. நான் வாடகைக் குடித்தனக்காரன் என்று அவரது வசனம் வாய்வழியே வழிந்தது.

யாராவது வந்தவர்கள் என்னைப் பற்றி பேசினால், அதுவே அவருக்குப் பற்றிக் கொண்டு வந்தது. என்னைப் பார்க்கவும் விரும்பாதவராய், தன் மனைவி வாயிலாக வீட்டைக் காலி செய்துவிடும்படி வற்புறுத்தத் தொடங்கினார்.

நான் சரி என்று சொன்ன பிறகும், என்னைப் பற்றி தவறுதலாக மற்றவர்களிடம் பேச ஆரம்பித்தார். அந்தப் பேச்சுக்களை சகித்துக் கொண்டு ஒரு சபதம் செய்தேன்.

இந்த வீட்டைக் காலி செய்துவிட்டு வேறொரு வாடகை வீட்டுக்குப் போகிறேன். அந்த வீட்டையும் காலி செய்கிறபோது, போகிற வீடு என் சொந்த வீடாக இருக்க வேண்டும். அதற்குக் கடுமையாக உழைப்பேன் என்று என்னையறியாமல் எடுத்துக்கொண்ட சபதம் என்னை படுத்திய பாடுகளை இங்கே எழுதுகிறேன்.

அவமானத்திற்கு ஆளாகிற போதுதான் ஆக்ரோஷமானது அணையை உடைத்துக் கொண்டு குதிக்கிறது.

தன்னை மறந்து, தனக்குரிய சூழ்நிலையை மறந்து தாண்டிக் குதிக்க வைக்கிறது. சபதம் போடச் செய்கிறது.

அந்த அவமானமடைந்த நேரத்தில், அது மன அமைதிக்குத் தரும் மருந்தாக அமைந்துவிட்டாலும், அதுவே மனத்தைக் குத்திக்காட்டுகின்ற மாபெரும் அங்குசமாகவும் மாறிவிடுகின்றது.

அவமானத்தில் பேசிவிட்டு, பேசாமல் படுத்துக் கொள்வோர் அதிகம். அந்த நேரம் போய்விட்டாலே, ஆனந்தமாகத் தூங்கிக் காலம் கழிக்கும் அதிக சக்தி படைத்தவர்களும் அதிகம்.

சொல்லியதை செய்து காட்டிட வேண்டும் என்று சுய கௌரவம் பார்த்து, சுறுசுறுப்பாக வேலை செய்பவர்கள் சிலர்தான். அவர்கள்தான் பொறியில் சிக்கிய எலியாக போராட்டத்தில் ஈடுபட்டு, சாதிக்க முயற்சிக்கின்றார்கள்.

**நாம் எவ்வளவு சாதித்தோம் என்பதில்லை முக்கியம். நாம் எவ்வளவு முயற்சித்தோம் என்பதுதான் முக்கியம்.**

முயற்சிகள் எல்லாம் பலனளித்து விடுவதில்லை. ஆனால் முயற்சித்தோம் என்கிற மன திருப்தி இருக்கிறதே! அதற்கு விலையே இல்லை. அதுதான் வாழ்வை மேம்படுத்தும் வசீகரத்தூண்டுகோலாக இருந்து, ஒளியேற்றுகிறது, வழிகாட்டுகிறது.

நானும் இப்படித்தான் எலியாக சிக்கினேன். மலிவாகப் பலியாகிவிடக்கூடிய நிலைகளுக்கும் ஆளானேன். அந்தக் கதையைக் கேட்டால் ஏனிந்த வம்பு என்று நீங்களே கேட்பீர்கள்.

என்ன செய்வது? அவமானம் தந்த தன்மானம் ஆட்டிப்படைத்து விட்டது.

இருந்த வாடகை வீட்டிலிருந்து வெளியே வருகிற போது, சொந்த வீட்டில்தான் குடியேறுவேன் என்று சூளுரைத்து, சுற்றியிருந்து வேடிக்கைப் பார்த்தவர்கள் முன்னே கத்தி தீர்த்த பிறகுதான், கதையே தொடங்குகிறது. சென்னை ரெங்கநாதன் தெருவில் ஸ்போர்ட்ஸ் கடை

இருக்கிறது. அந்தக் கடையை மையமாக வைத்து நூறு மீட்டர் தூரத்திற்குள்ளாக, ஒரு இடம் வாங்கி வீடுகட்டுவேன் என்று அல்லது ஒரு வீட்டை வாங்குவேன் என்று என் மனைவியிடம், சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் என்னையும் மீறி உற்சாகத்துடன் சொல்லிக் கொண்டேயிருப்பேன். இது ஒரு 20 வருடப் பேச்சு. "இந்த மாதம் ரேஷன் வாங்குங்கள். பிறகு வீடு வாங்குவதைப் பார்த்துக் கொள்ளலாம்" என்பது என் மனைவியின் பதில் அன்றைய வாழ்க்கை நிலை அப்படி!

இப்படி கிண்டலுக்காக் கூறினாலும், வீட்டு நிலைமை அதுதான். மாதச் சம்பளக்காரனுக்கு வயிறும் குடும்பமும் முயல் வேகத்தில் பெருகும். சம்பளமோ ஆமை வேகத்தில் நகரும். மனைவியின் தமாஷ் பேச்சை, நான் சாதாரணமாக வெளிப்பார்வைக்கு எடுத்துக் கொண்டாலும், உள் மனதிலே விழுகிற சவுக்கடியாக ஏற்றுக் கொண்டு, வாங்குகிறேன் பார் என்று சவாலாகச் சொல்லிக் கொள்வேன். அதற்காக இரவு பகல் பாராது எழுதத் தொடங்கினேன். விளையாட்டுப் புத்தகத்தை யார் அச்சிடுவார்? யார் புத்தகம் போடுவார்? விற்றுத் தருவார்?

ஆனாலும் நானே முயற்சித்தேன். அதாவது I have tried என்ற வாக்கியத்தை உளமாரப் பின்பற்றிக் கொண்டேன். விளையாட்டுத்துறை எழுத்தாளராக ஆனதுடன், அச்சகத்தாராகப் பதிப்பிக்க, விற்பனையாளராக, முழு நேரப் பணி செய்தேன். இதற்காக, TVS கம்பெனியில் பார்த்த நல்ல ஆபீசர் உத்தியோகத்தையும் ராஜினாமா செய்துவிட்டேன். நிலைமை கொஞ்சம் சரியானபோது, வீடு தேடும் படலம் தொடங்கியது.

ரெங்கநாதன் தெருவில் இருந்து 100 மீட்டருக்குள்ளாக ஒரு இடம் இருப்பது தெரிந்தது. காலி இடம். காண்பதற்கு கண்கோடி போதாது. அதாவது கழிவிடம் தோற்றுப் போவது போலக் காணப்பட்ட இடம்.

நல்ல ஏரியாதான் அதைப் பழக்கத்தில் வைத்திருந்தவர்கள், அப்படி அசிங்கமாக ஆக்கிவிட்டு பயன்படுத்தி வந்தார்கள். நாற்பது ஆண்டுகளாக அந்த காலி மனையை விற்பதற்கு உரிமையாளர் முயற்சிக்கிறார். விற்க முடியவில்லை என்பது ஒரு விந்தையான வரலாறு. அதையும் கேள்விப்பட்டேன். அந்த நில உரிமையாளரை சந்தித்து, நான் வாங்கிக் கொள்கிறேன் என்றேன். ஆச்சரியப்பட்ட அவர், அதிலுள்ள சிக்கல்கள், சிரமங்கள் பற்றியெல்லாம் விவரித்தார். நான் எடுத்த முடிவுதான். மளமளவென்று பத்திர வேலைகள் நடந்தன. நடந்து முடிந்தன.

அதற்குள் பலர் என்னிடம் வரத் தொடங்கினார்கள். முன்பின் பார்த்திராத அவர்கள், அந்த இடத்தை வாங்கக் கூடாது என்று அறிவுரை தந்தார்கள். சிலர் எச்சரிக்கை விட்டார்கள். ஒரு சிலர் வந்து, சென்டிமெண்டாக அந்த சனியனை வாங்காதீர்கள் என்று ஆருடம் கணித்தார்கள்.

எல்லாவற்றையும் விரட்டிவிட்டு, இடத்தை பத்திரப் பதிவு செய்தும் விட்டேன். கட்டிட வேலைகள் ஆரம்பமான போதுதான், கஷ்டங்கள் ஒவ்வொன்றாக தலை நீட்டின.

நான் வாங்கிய இடத்திற்குப் பக்கத்தில் உள்ள ஒருவரின் மனையை, 40 ஆண்டுகளுக்கு மேலாக, ஆக்கிரமித்துக் கொண்டு வாழ்ந்த 11 குடும்பங்கள்தான், எனக்குப் பெரிய பிரச்சனையாக எழுந்தன.

உங்கள் இடம் நாங்கள் ரோட்டுக்கு வரும் வழி. அதனால் இடத்தை வாங்காதே என்றனர். இடத்தை வாங்கிய பிறகு, வீடு கட்டாதே என்று வம்புக்கு வந்தனர்.

என் இடத்திற்கு காம்பவுண்ட் சுவர் போடுவதற்குள் காசும், நிறைய செலவானது. கஷ்டம் தருபவர்களின் மனப்பாங்கும் புரிந்தது. **ஓடினால் விரட்டுவார்கள். எதிர்த்தால் பின் வாங்குவார்கள்** என்ற சூட்சமத்தைப் புரிந்துகொண்டேன்.

வீடு கட்டத் தொடங்கியதும் எங்களுக்கு வழி வேண்டும் என்று கேட்டு வந்தார்கள். வீட்டிற்குள்ளே மற்றவர்கள் போய்வர வழிவிட முடியுமா என்ன? இருந்தாலும் கேட்டார்கள். ஆட்கள் கூட்டத்துடன் வந்து 'ஆ ஓ' வென ஆர்ப்பரிப்பார்கள். கடைசியில் காசு கேட்பார்கள். ஒருவருக்கும் தெரியாமல் காசு வாங்கிக் கொண்டு ஒதுங்கிவிடுவார்கள்.

ஒவ்வொரு கட்சிக்காரராக வரத் தொடங்கினார்கள். எழைகளுக்குப் பாதை இல்லையா என்று பக்கத்து காலனியில் உள்ளவர்களும் பரிவோடு சேர்ந்து கொள்ள, **நான் ஒருவன், எதிரே ஆயிரம் பேர்** என்ற கொடுமையான நிலைமை ஏற்பட்டுவிட்டது. சப்போர்ட்டுக்கு கூட்டம் கூடியவுடன் அவர்கள் கோஷத்தில் ஒரு மாற்றம், வீட்டு முன்னாள் ஆர்ப்பாட்டம்.

4 அடி வழி வேண்டும் என்று முதலில் கேட்டவர்கள், என்னை இந்த இடத்தை விட்டு விரட்டும் வரை ஓயப்போவதில்லை என்று அவர்கள் 'தாய் பாஷையில்' பேசிக் கலைந்தனர்.

இதற்கிடையில் வீட்டையும் கட்டி கிரஹப் பிரவேசமும் நடத்தி விட்டேன். என்ன எதற்கு என்று புரியாமலேயே, அவர்கள் என்னை எதிர்த்து, திட்டிக் கொண்டிருந்தனர், அதற்குத் தீனி போடுவது போல, சில உருப்படாத குட்டித் தலைவர்களும் ஒத்தூதினர்.

4 அடி வழி விட்டிருந்த எனக்கு, அவர்கள் நடைபாதையாகப் பயன்படுத்துகிறபோது ஏற்பட்ட இடைஞ்சல்களைப் பார்த்து, கொஞ்சம் பணம் செலவு செய்து, சில குட்டித் தலைவர்களை சரிப்படுத்தி, ஒருநாள் வழியை அடைத்துவிட்டேன்.

அன்று பல பெண்கள் வந்து போட்ட சத்தம், இன்று அந்த வார்த்தைகளை நினைத்தாலும் வாந்தியும் குமட்டலும் வருகிறது.

திடீரென்று இரவு 1 மணிக்கு, என் காம்பவுண்டு சுவரை அவர்கள் இடித்துவிட்டு, வீட்டின் பக்கத்துப் பாதையில் நடக்க ஆரம்பித்தனர். அதற்குப் பிறகு வீட்டைச் சுற்றிப் போலீஸ் காவல்.

இப்படியாக சிவில் கோர்ட்டுக்குப் போய் வழக்கு தொடுத்தேன். சைதாப்பேட்டை கோர்ட்டில் கிரிமினல் வழக்குத் தொடுத்தேன்.

நானிருக்கும் அந்த ஏரியா பயங்கரமான ஏரியா என்பதாக போலீஸ் ரெக்கார்டு குறித்திருப்பதும் எனக்குத் தெரியும். அவர்களோடு சண்டை போட்டு ஜெயிக்க முடியாது என்று, என் வீட்டிற்கு எதிரே உள்ள இன்ஸ்பெக்டர் குடியிருப்பில் குடியிருப்பவர்களும் அடிக்கடி கூறுவார்கள். அதுவும் புரியும்.

முதலையை விரட்ட முடிவு செய்து போராட்டம் தொடங்கிய பிறகு, ஒன்று முதலையை ஜெயிக்க வேண்டும் அல்லது மடிய வேண்டும். அப்படிப்பட்ட ஜீவ மரணப் போராட்டம் பல மாதங்கள் நடைபெற்றது.

அடிக்கடி டெம்போ ஒன்றை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு அரசியல் கட்சித் தலைவரிடமும் அவர்கள் போவார்கள். அன்றைய முதல்வரிடமும் (1987) போனார்கள். அவர்களுக்கு அவையெல்லாம் தோல்வியாக முடிந்தன.

பணம் பெறுவதில்தான் அவர்களுக்கு சந்தோஷம். பணம் செலவழிப்பது என்றால் ஒன்றுக்கு ஆயிரம் தடவை யோசிப்பவர்கள். அவர்களை கொஞ்ச காலம் ஆட்டம் காட்டிவிட்டு, பிறகு சமாதானம் என்ற பெயரில் பணம் கொடுத்து, பக்குவப்படுத்திவிட்டேன்.

தங்கள் தவறை அவர்கள் உணர்ந்தார்கள். சுயநலக்காரன் ஒருவனின் தூண்டுதலால் மோசம் போய்விட்டோம் என்றார்கள். நாங்கள் சமாதானமாகி விடுகிறோம் என்றார்கள், இனி, மாரியம்மன் சத்தியமாக உங்கள் பக்கம் வரவே மாட்டாம் என்று உறுதி கூறிவிட்டு ஒதுங்கிக் கொண்டார்கள்.

பல மாதம் போராட்டம், போலீஸ், கோர்ட், வழக்கு சண்டை இப்படி ஏற்பட்டது. இன்று ஒரு சாதனை சரித்திரமாக ஆகிவிட்ட வீடு தந்த பாடுகள் பயங்கரம் தான்.

வீடு கட்ட வேண்டும் என்று ஒரு அவமானம் விரட்ட, வீட்டைக் கட்டி முடித்தே ஆக வேண்டும் என்று பல அவமானங்கள் என்னை விரட்டி விரட்டி அடிக்க; வந்த வேதனைகளிலும் சோதனைகளிலும் வெற்றி பெற்றது வெறும் வைராக்கியத்தால்தான்.

அவமானம் வரும். தன்மானத்தை தட்டி எழுப்பும் ஆனால், அதை விவேகமாக எதிர் கொண்டால் வெற்றி நிச்சயம் என்பது நான் வாழ்வில் பெற்ற அனுபவம்.

சுருக்கமாக சொல்ல வேண்டும் என்பதற்காக இந்த நிகழ்ச்சியை உங்களுக்கு எழுதினேன். வாயைத் திறக்காமல் சாப்பிட முடியாது. அது போலவே அவமானம் கிடைக்காமல், வாழ்வானது முன்னேற்றம் பெறாது. ஆகவே, அவமானத்தை ராஜமரியாதையுடன் சந்தியுங்கள். வெற்றி நிச்சயம் வந்தே தீரும். ஆமாம் சேரும்!

என் வாழ்க்கையில் நடந்தவைதான் உங்கள் வாழ்க்கையிலும் நிகழும். சோர்ந்து போகாதீர்கள் என்று சொல்லிவிட்டு, உங்களைப் பின்பற்றி புரிந்து கொள்ளும். சில உண்மை நிலைகளை தொடர்ந்து தருகிறேன். இது ஒரு ஆய்வான அறிவுரை அவ்வளவுதான்.

இளமையில் ஏற்படுகின்ற அனுபவங்களில், அதிகமாக ஏற்படுவது அவமானங்களாகத்தான் இருக்கும்.

வாழ்ந்து கொண்டிருக்கும் நடுத்தர வயதினரைவிட, வாழத்துடிக்கும் இளைஞர்களுக்குத்தான் வழிகாட்டுதல்கள் வேண்டும்.

அவற்றையெல்லாம் சந்திப்பது எப்படி என்பதை இனிவரும் தலைப்புகளில் காண்போம்.

# 9. என்ன செய்யலாம்?

இளைய தலைமுறையின் எழில் தீபங்களே! இனிய சிந்து பாடிடும், இதம் சுமந்து ஓடிடும் சிந்தனைகளுடன் உங்களைச் சந்திக்கிறேன்.

ஐந்தறிவுத்தனத்திலிருந்து கம்பீரமாக வளர்ந்து, கட்டழகு மொட்டு விரிந்து கவர்ச்சியாகக் காட்சியளிக்கிற கன்னிமைப் பருவம் உங்களுக்கு.

இஷ்டப்பட்டதெல்லாம் வேண்டும் என்று ஆசைப்படுகிற, அடம் பிடிக்கிற, ஆரவாரிக்கிற, அனுபவப் படாத பருவம் உங்களுடையது.

இந்த உலகமே எனக்குதான். எல்லோருமே என்னிடம் வந்தாக வேண்டும் என்று எண்ணுகிற எடுப்பான சிந்தனைகள் சிலிர்த்துக் கொண்டு சீறிப்பாய்கிற தற்பெருமைகளும் உண்டு.

எல்லாம் சரிதான். எதுவும் தவறில்லை.

எங்கேயும் குறையில்லை.

எதிரே தெரிகிறது என்னவென்று பாருங்கள்.

எதுவும் இல்லை எண்பீர்கள்

ஆனால் அதுவல்ல உண்மை.

**எதிரே தெரியாதது. ஆனால் எதிரே நிற்பது உங்கள் எதிர்காலம்தான்.**

எல்லோருக்கும் அந்தக் கவலைகள்தான் அதிகம்.

இனம் புரியாத கவலையும் ஏராளம்தான்.

நீரலைகள் போல நினைவுக் குளத்தில் புரள்பவை. காதுகளுக்குக் கேட்டும் கேட்காமலும் ஒலித்துக் கொண்டிருக்கும் ரீங்காரச் சத்தம். ம்ஹூம். ஓங்காரச் சத்தம்.

ஓங்கார சத்தம் கூவுவது என்ன?

நாம் என்னவாக இப்போது இருக்கிறோம்?

நாம் என்னவாக ஆகப் போகிறோம்?

நமக்கு அந்த வாய்ப்பு வருமா? கிடைக்குமா?

வந்தாலும் நிலைக்குமா? குலைக்குமா?

இப்படியெல்லாம் தப்படி போடுகிற கனவுக்குதிரைகள் கவண்கல்லைபோல வேகம் கொண்ட கலக்கப் புதிர்கள் நெஞ்சுக்குள்ளே!

ஆமாம்! இதுதான் நமது வாழ்க்கை. மனித வாழ்க்கையின் மாறாத குரல். மறையாத நிரல்.

எங்கே போகிறோம் என்று தெரியாமலே ஒரு நீண்ட பயணம். அதற்குப் பெயர்தான் வாழ்க்கை.

எதுவரை தொடரும்? எங்கே நிற்கும்? என்று தெரியாமல், தெரிந்து கொள்ள முயலாமல், தேடிப் போகும் முயற்சிக்குப் பெயர்தான் வாழ்க்கை.

கரையைத் தொடமுடியாத அலைகள் போல, கனிவதற்கு முன்பே விழுந்து விடுகிற காய்கள் போல, இசையை பழகிக் கொள்வதற்கு முன்னேயே எழுகிற அபசுபரம் போல, வாழ்க்கை வந்து போகிறது.

இதுதான் வாழ்க்கையா என புரிந்து கொள்வதற்கு முன்பே எல்லாமே முடிந்து போகிறது.

வாழ்க்கையை ஒரு பழைய ஆடைக்கு ஒப்பிட்டுப் பேசுவார்கள்.

கிழிந்த ஆடையை ஒருபுறம் தைக்கிற போதே மறுபுறம் கிழிந்து போவது போல...

ஒரு துன்பம் வந்து தீர்வதற்குள், அடுத்தடுத்து அனலாய் புனலாய் ஆட்டம் போடுவதுதான் வாழ்க்கை.

இன்று எனக்கு மகிழ்ச்சியான நாள் என்று மகிழ்வதற்குள் மற்றெரு அவலச் செய்தி.

மாய்மாலமான வாழ்க்கை என்று மனிதர்கள் பேசிக் கொள்வது உங்கள் காதில் விழுந்திருக்குமே!

ஆமாம்!

**அர்த்தமில்லாத ஒரு அர்த்தம் உள்ளதுதான் இந்த மனித வாழ்க்கை.**

அதில் ஆனந்தமாக வாழ்வதென்பது முடியும் என்பது சிலர் கருத்து.

முடியவே முடியாது என்பது பலர் கருத்து.

பலரது கருத்தை நாம் பொய்யென்று புறத்தே தள்ளிவிடவும் முடியாது, ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

தொட்டும் தொடாமலும், விட்டு விடாமலும், பட்டும் படாமலும், தொடர்ந்தும் தொடராமலும் துல்லியமாக வருவதுதான் அந்த எண்ணங்கள்.

அவைகளை அப்புறப்படுத்தவும் முடியாது. அப்பாலே போகவும் முடியாது.

முடியாது என்று முடிவுக்கு வந்து முனக வேண்டாம்.

முடியும் என்று நினைக்கிற போதே முடியாது என்ற வார்த்தை ஒடிந்து போகும். மடிந்து போகும். நமக்குள் நினைவுக்குள், துணிவுகள்தாம் வந்து நிமிர்த்தும், உயர்த்தும்.

நம்மில் எழுகின்ற காரியங்கள்தான் வீரியங்கள்தான் நம்மை எழுப்பும், செலுத்தும்.

நமக்கு நாமே துணை.

மற்றவர்கள் எல்லாம் பார்வையாளர்கள், பாசத்திற்குரிய தீர்வையாளர்கள்.

இப்படி எண்ணுகிற போதே உங்களுக்குள் ஒரு தெளிவு ஏற்படுகிறதல்லவா? ஏன் எப்படி என்பதை காண்போம்.

உங்கள் எதிர்காலம் உங்கள் கையில்.

உங்கள் புகழ் காலம் உங்கள் செயலில்.

# 10. டீன் ஏஜ் என்றால் என்ன?

முடியும் என்று முயற்சிப்பவன், மனிதன் என்ற பெயருக்கும் மரியாதைக்கும் உரியவன்.

முடியாது என்று மயங்குகிறவன், ஓரம்போய் ஒதுங்குகிறவன். இயலாத முடம். இயற்கையில் ஜடம்.

உங்களை தீபம் என்று தெளிவுடன்தான் அழைக்கிறேன். இளைஞர்களை தீபம் என்று அழைப்பதில் ஓர் அற்புதமான அத்தம் இருக்கிறது.

தீ, தீச்சுடர், தீப்பந்தம், தீக்கதிர் என்று பல சொற்கள்.

அக்கினிக் குஞ்சு என்று அழகாகப் பாடுவார் பாரதியார்.

தீச்சுடருக்கும் தீப்பந்தத்திற்கும் நிறைய வேற்றுமை உண்டு.

தீச்சடரை ரசிப்பார்கள். தீப்பந்தம் என்றால் அது, தீமை பயக்கும் என்று வெறுப்பார்கள். விலகுவார்கள்.

விளக்கு என்றால், வெளிச்சம் தருவதால் வரவேற்பார்கள். ஏற்றி வைக்க இசைவார்கள். பயன்படுத்திக் கொள்வார்கள்.

இருக்கின்ற இருளை அகற்றிவிட, அகல் விளக்கு என்று மாடத்தில் கூடத்தில், வைப்பார்கள்.

தீபம் என்று கூறியவுடன் மனதிலே ஒரு சிலிர்ப்பு. சிந்தனையில் ஒரு புத்துணர்வு, சிரம் தாழ்த்த விழையும் மன உணர்வு. கரம் குவித்து, கண்மூடி நின்று தியானித்து, திவ்யமாக வணங்கும் காரியங்கள்.

தீபம் என்பதற்கு மட்டும் ஏன் இந்த தெய்வீக வரவேற்பு கிடைக்கிறது?

தீபாவளி என்கிறார்கள். அதையே தீப வரிசை என்கிறார்கள். தீப விமோசனம் என்கிறார்கள்.

ஆலயத்தில் ஆண்டவன் திருமுகத்தைத் தெளிவுறக் காட்சி தந்திட தீபாரதனை காட்டுகின்றார்கள். அப்படி என்றால் தீபம் என்பதற்கு என்னதான் பொருள்? ஏன் அந்த மகத்துவம் அதற்கு?

தெய்வத்தின் சன்னதியில் வீற்றிருப்பதாலா?

பக்திகரமாக விளங்குவதற்குரிய சுற்றுப்புறச் சூழ்நிலையை பிரகடனப் படுத்திக் கொண்டிருப்பதாலா?

தீபம் என்ற சொல், எந்த மொழிச் சொல்லாக இருந்தாலும், அதன் மரியாதையே தனிதான்.

தீபம் என்றால் அது இராஜ சின்னத்தில் ஒன்று என்று சிறப்புற பேசுவார்கள்.

அதை நாம் இரண்டு சொற்களாகப் பிரித்துப் பார்ப்போமே! இன்னும் அதன் பெயரில் உள்ள தெளிவு தெரியும்.

தீ + பம் = என்றால் என்ன? நமக்கே தெரியாதே, புரியாத பொருட்கள் கொண்டதாக இருக்குமோ?

தீ என்றால் நெருப்பு என்பார். தீமை என்பார். கோபம் என்பார். விஷம் என்பார். கொடுமை என்பார்.

ஆனால், அறிவு என்று ஓர் அர்த்தம். இனிமை, எளிமை, தித்திப்பு, விளக்கு என்றும் அர்த்தம் உண்டு.

பம் என்றால், விண்மீன் என்று அர்த்தம்.

ஆக தீபம் என்றால் அறிவில் விண்மீன், இனிமைக்கு ஒரு விண்மீன் என்றும் ஒரு அர்த்தம் வருகிறதல்லவா?

இளைய நெஞ்சங்களே! இனிய வாலிபர்களே!

தீபமாய் இருங்கள் என்றால் புரிகிறதல்லவா?

துருவ நட்சத்திரம் இளமைக்கு எடுத்துக்காட்டு அல்லவா!

சிறு வயதில் ஒரு லட்சியம்!

சிற்றன்னையிடம் பட்ட அவமானம், அந்தச் சிறுவனின் சிந்தையிலே ஒரு வைராக்கியத்தை விதைத்தது.

உலகுக்கு நான் யார் என்று காட்டுவேன். உயர்ந்து காட்டுவேன் என்று திமிறி எழுந்தான். செய்து காட்டினான்.

அந்தத் தினவும் தீரமும் உங்களிடமும் உண்டு.

அப்படிப்பட்ட அறிவும் செறிவும், ஆற்றலும் ஆக்கமும் உங்களிடமும் நிறைய உண்டு.

இளைஞர்களைப் பார்த்து கொட்டிக் கிடக்கும் செங்கல் என்றும், முதிர்ந்தவர்களைப் பார்த்து கட்டி முடித்த கட்டிடம் என்றும் ஓர் அறிஞர் கூறினார்.

கொட்டிக் கிடக்கும் செங்கல்லைக் கொண்டு கோயிலும் கட்டலாம் கழிவறையும் கட்டலாம்.

கட்டுவதற்காக விரும்பி செயல்படுவோரின் செய்கை தான் அவரை கம்பீரமாக நடத்திச் செல்கிறது.

கட்டுவதற்காக விரும்பி முயல்பவரின் கொள்கைதான் அவரை கூட்டி நடத்திச் செல்கிறது.

சோம்பேறியாக இருந்தால், சுரணை இல்லாதவராக இருந்தால், சோர்ந்து கிடப்பார்கள். எது எளிதோ அதைச் செய்து சந்தோஷப்படுவார்கள். அஸ்திவாரத்திலேயே ஆழ்ந்து போவார்கள்.

முயற்சியும் முனைப்பும் உள்ளவர்கள் மற்றவர்கள் மனதிலே இடம் பிடிப்பார்கள். முடிப்பார்கள்.

இளமை என்பது எங்கே தொடங்குகிறது என்று உங்களுக்கே தெரியும்.

Teen Age என்பார்கள். Teen Age 13-ல் 13 என்பது நல்ல எண் அல்ல என்பது பலரின் நம்பிக்கை. 13ஆம் நம்பர் எல்லோரையும் பயமுறுத்தும் ஒன்று.

Ghost அதை ஆங்கிலத்தில் Number என்பார்கள். ஆமாம். பேய் எண் என்பார்கள்.

அந்த 13-ம் நம்பரின் குணாதிசயம் என்று ஒரு ஒப்பற்ற ரகசியத்தையும் விளக்கிக் காட்டுவார்கள் சோதிட வல்லுநர்கள்.

13-ம் நம்பரைக் கூட்டினால் 4 வருகிறது. ஆக அதை இரண்டு மடங்காக ஆக்குகிறபோது 8 ஆகிறது. இந்த 4ம் 8ம் தான் பேய் நம்பர் என்கிறார்கள்.

இந்த எண்ணுக்குரியவர்கள் நல்ல காரியங்களைச் செய்கிறபோது நன்மை கிடைக்கும். புகழ் கிடைக்கும். உடல் நலம் மிகுதியாக கிடைக்கும். மகிழ்ச்சியும் சந்தோஷமும் மானாவாரியாகக் கிடைக்கும்.

இந்த பேய் எண்ணுக்குரியவர்கள் இஷ்டம் போல் நடந்தால், தீய காரியங்களைச் செய்தால், தடுமாற்றமான சமுதாயத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்தால், பணம் கிடைக்கும். உயர்வும் கிடைக்கும்.

ஆனால் உயரே போன வேகத்தில் 'சர்ரென்று' கீழே விழுவார்கள். சங்கடங்கள் தலை தூக்கும். தண்டனைகளும் வந்து குவியும். முடிவு பேரழிவுதான். பேரிழவுதான்.

எதற்கு இந்த முன்னோட்டம் என்றால்?

இளைஞர்களே! உங்கள் இளைய காலம் வயது 13-ல் தான் ஆரம்பிக்கிறது.

13 வயதிலிருந்து 19 வயது வரை Teen Age தொடர்கிறது. ஆக இந்த ஏழு ஆண்டுகளுக்குள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்ற நினைப்பு, துடிப்பு, இறுமாப்பு, பூரிப்பு, சிலிர்ப்பு, சில்லரைத்தனமான நடிப்பு எல்லோரிடமும் இருக்கிறது.

சொன்னால் கேட்க மாட்டார்கள். தன்னால் சிந்திக்க மாட்டார்கள். பின்னரல் வருத்தப்படுவார்கள் என்று இளமை கடந்த பெரியவர்கள் புலம்புவது உண்டு.

இளையவர்கள் ஒழுக்கமற்ற காரியங்களில் இறங்கி சீரழிவதும் நிறைய நடக்கிறது.

ஏன் அப்படி என்றால், Teen என்பதற்குரிய பொருள் அப்படித்தான் இருக்கிறது.

Teen என்ற ஆங்கிலச் சொல்லுக்கு வருத்தம், துன்பம், இடையூறு, கேடு என்று பல அர்த்தங்கள் உண்டு.

இந்த Teen Age-ல் பெரியவர்கள் புத்திமதிகளைக் கேட்காதவர்கள். கேவலப்படுத்துபவர்கள், கீழே போட்டு மிதிப்பவர்கள் எல்லோரும், இருபத்துக்குள்ளேயே ஒரு முதுமை தனத்தை அடைந்து விடுகிறார்கள்.

உடலில் நோய், உள்ளத்தில் கவலை, உணர்வுகளில் நம்பிக்கையின்மை, வாழ்விலே கசப்பு, வழியிலே துன்ப நெருப்பு.

இப்படி வதைப்பட்டு வாழ்விழந்து வீழ்கிறார்கள். ஆக, இளமை என்பது இனிய பொக்கிஷம். வலிமையை வரவழைக்கும் மந்திரப் பெட்டி, புதுப்புது சக்திகளை பொதிந்து வைத்திருக்கும் புதையல்.

அப்படிப்பட்ட இளமையை நீங்கள் எப்படி பயன்படுத்த வேண்டும் தெரியுமா?

**கொக்கு போல, கோழி போல, உப்பு போல, 'உம்' போல.**

விளக்கம் தொடர்கிறது.

இளைஞர்களே! உங்கள் எதிர்காலம் உங்கள் கையில் தான்.

# 11. கொக்கும் கோழியும்

கிளர்ச்சியூட்டும் இளமைக்குள் கிடைத்து விடுகின்ற சக்திகளை, வளர்ச்சிக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வதுதான் அறிவுடையோர்க்கு அழகு.

அப்படி இல்லாமல், இருக்கின்ற சக்தியை இறைக்கின்ற சபல புத்தி உடையவர்களை என்ன சொல்ல? அவர்களை எதிர்ப்பவர்களும் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகிப் போகின்றார்கள். நோகின்றார்கள்.

இளைஞர்களுக்கு அறிவுரை கூறுவதை, குரங்குக்கும் புத்தி சொன்ன குருவியின் கதையாய்ப் போய்விடும் என்று பயப்படுவோர் நிறைய பேர் உண்டு.

வாலிபர்களுக்கு வழிகாட்ட முயல்கின்ற காரியம் தேன்கூட்டைத் தட்டிவிட்டு, தேனீக்கள் கொட்டுகளுக்கு இரையாவதற்குச் சமம் என்பாரும் உண்டு.

சாக்கடை ஓரத்தில் நின்று கொண்டு சாக்லெட் சாப்பிடுவது தவறு என்றால், அதில் நான் தொட்டுக்கொண்டு சாப்பிடுவேன். உனக்கென்ன வந்தது என்று எதிர்வாதம் பேசும் இளைஞர்கள்தான், இன்றைய தலைமுறை எண்ணிக்கையில் அதிகம் என்பாரும் உண்டு.

சொல்வதுபோல் அவர்களுக்குச் சொன்னால், கேட்பவர்களும் உண்டு என்பது நிரூபணமாகிப் போயிருக்கும் பேச்சும் நியாயமே!

இதனால் இங்கே நியாயத்தைக் கூறாமல், நிதர்சனமான நிலைமையைக் கூற வருகின்றேன்.

இஷ்டம் போல் வாழ்கிறவர்கள் இளைஞர்கள் அல்ல.

இப்படித்தான் வாழ வேண்டும் என்று திட்டமாக செயல்படுகின்றவர்கள் இளைஞர்கள் அல்ல. தீர்க்கதரிசிகள்.

எப்படியும் வாழலாம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் எப்படி வாழ்வது என்பதில்தான் சிக்கல்கள், விக்கல்கள், முக்கல்கள், முனகல்கள்.

இதோ! இளைஞர்கள் இப்படித்தான் வாழவேண்டும் என்று வற்புறுத்துகிற வழிகாட்டல்கள். இவற்றை...

இளைஞர்கள் எல்லோரும் பின்பற்றலாம். கொக்காக வாழ வேண்டும். கோழியாக வாழ வேண்டும். உப்பாக வாழ வேண்டும் 'உம்'மாக வாழ வேண்டும்.

என்ன சொல்கிறீர்கள்.

எங்களை இளக்காரமாகவா எண்ணிவிட்டீர்கள்?

ஆடு மாடு என்று திட்டுவார்கள். நீங்கள் கொக்கு கோழி என்று திட்டுகிறீர்களா என்று கேட்பது புரிகிறது.

ஆடு மாடு என்பது திட்டமல்ல. தீர்க்க தரிசனமான வாழ்த்துக்கள்.

ஆடாக வாழுங்கள், மாடாக வாழுங்கள் என்றால் அது வசையல்ல. வாயாராக்கூறும் வாழ்த்துக்கள்.

ஆடு என்றால் வெற்றி என்று அர்த்தம்.

மாடு என்றால் செல்வம் என்று அர்த்தம்.

இப்போது கூறுங்கள் ஆடு மாடு என்பது தவறா? அதுபோலத்தான் கொக்கும் கோழியும்.

குளக்கரையிலே ஒற்றைக் காலில் நின்றுக் கொண்டு, கண் கொட்டாமல், கவனமாக காத்துக் கொண்டிருக்கும் கொக்கின் நினைவு, இந்நேரம் உங்கள் கண்முன்னே வந்திருக்க வேண்டுமே!

ஏன் இப்படி கவனமாக நிற்கிறது? தவம் செய்வது போல, ஏன் தனித்து நிலைத்து நின்று கொண்டிருக்கிறது?

ஓடு மீன் ஓட, உறு மீன் வரும் அளவும் வாடி நிற்குமாம் கொக்கு என்பது ஒரு பாட்டு.

தண்ணீரிலே துள்ளித் துள்ளி ஓடி வருகின்ற மீன்களையெல்லாம், கண்கொட்டாமல் பார்த்துக் கெண்டிருக்கிறது.. பசியோடுதான். பசிந்திருந்தாலும், பக்கிபோல பாய்ந்துவிடவில்லை. பரபரப்படையாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது. பெரிய மீனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது என்றுதானே நீங்கள் நினைக்கிறீர்கள்?

அல்ல. பெரிய மீன் என்று அதற்கு அர்த்தமல்ல. தனக்கு உரிய மீன் என்றுதான் அர்த்தம்.

தனது வாய் கொள்ளுகின்ற அளவுக்கு பெரிய மீன் தனக்குத் தேவைதான்.

பசியைப் போக்கும் உணவுதான் ஆனால் சிறியது வேண்டாம் என்று பெரிய மீனைப் பிடித்தால் வாயடங்காது. பசியும் தீராது. பெரியதைப் பிடித்தால் பிரச்சனைகள் வரும் என்று அது தெரிந்து வைத்திருக்கிறது.

இளைஞர்களுக்கும் கொக்குக்கும் எப்படி சம்பந்தம் என்று புரியவில்லையா? என்று கேட்பது புரிகிறது.

பசித்த கொக்கு பதறாமல், வெளியில் மழை என்று பாராமல் நிற்கிறது. காலம் கனியட்டும் என்று பொறுமை காக்கிறது. விலகாமல் பார்க்கிறது.

வேண்டிய இரை வரட்டும் என்று பொறுமை காக்கிறது. விரும்பி நிற்கிறது.

அற்ப இரைக்காக ஆசைப்படவில்லை.

அளவுக்கு அதிகமான பெரியது வந்தாலும் அவசரப்படவில்லை.

தன்னால் கவ்வ முடியும். தன்னால் சிரமமின்றி உண்ண முடியும். தன்னால் சந்தோஷப்பட முடியும் என்று எந்த மீனுக்காக காத்திருந்ததோ, அது வந்ததும் - அடைந்ததும் ஆனந்தமாகப் பறந்துவிடுகிறது.

இதுதான் கொக்கின் குணாதிசயம்.

இளைஞர்களே! ஆசைகள் வருவது இயற்கைதான். சலனங்கள் சபலங்கள் எழுவது சகஜந்தான். தேவைகள் வந்து திணறடிப்பதும் வாழ்க்கைதான். அவற்றை அடைவதற்காக நீங்கள் அவசரப்படக்கூடாது. சின்னச் சின்ன பொருள்களை நயந்து விரும்பி உங்கள் கவனத்தைச் சிதற விடக்கூடாது.

பெரியவற்றை அடைய முடியும் என்று உரிய நிலை வரும்வரை, முயற்சிகளின் முனைப்பும் குறையக்கூடாது. எடுத்துக் கொண்ட முயற்சியில் பின்வாங்கவும் கூடாது.

ஆசைகளை அடக்கிக் கொண்டு, அறிவை கூராக்கிக் கொண்டு, அடுத்தது என்ன என்று தொடுத்துக் கொண்டே உங்கள் முயறசியைத் தொடர வேண்டும்.

கொக்கின் வெள்ளை நிறம் இளைஞர்களின் கள்ளங்கபடமற்ற எண்ணங்களைக் குறிக்கின்றன. பறக்க உதவும் இரு புறத்து இறகுகள் மனிதனின் வாழ்வுக்கு உதவும் இரண்டு வித ஞானங்கள்.

1. அறிவு ஞானம்.

2. செயல் ஞானம்

அதாவது ஒன்று தெளிவான அறிவு. இரண்டாவது தேர்ந்த செயல் அதாவது, திகைப்பில்லாத நீரோட்டமான செயல்.

ஒற்றைக் காலில் நிற்கும் கொக்கின் தவம். அது இளைஞர்களது வலிமையான விடாமுயற்சி. விருப்பத்தை உறுதிப்படுத்தி வெற்றிக்கு இட்டுச் செல்லும் வேட்கையை, வைராக்கியத்தைப் போன்றது.

ஆகவே, தனக்குத் தேவையானதை மட்டும் தேடிப் பெறுவதும், பெறுவனவற்றிலும் பிரச்சனைகள் நேராத வாழ்க்கை லட்சியத்திற்கு ஊறு தராத உயர்ந்த பண்புகளடங்கியவற்றைப் பெறுவதற்கே, கொக்கு வாழ்க்கையானது நமக்குக் கோடிட்டுக் காட்டுகிறது.

எப்படி அவற்றைப் பெற முடியும் என்று இப்போது குழப்பம் வந்து குவிந்திருக்குமே! வாழ்க்கை என்பது

பிரச்சனைகளின் பெரிய குன்று என்பார்கள். அப்படி அல்ல. வாழ்க்கையே பிரச்சனை என்பவர்களும் உண்டு.

சுற்றுப்புறச் சூழல்களில் தூசியும், அழுக்கும், பிசுக்கும், கசடும் நிறைந்து இருப்பது போல வாழ்க்கைக்குள்ளே கவனங்கள், கலக்கங்கள், குழப்பங்கள், குமுறல்கள், குமட்டல்கள் எல்லாமே இருக்கும். அதாவது குப்பையாகக் கிடக்கும்.

அந்தக் குப்பைகளுக்கு உள்ளேதான் குண்டுமணி போல, கற்கண்டுக் கருத்துகளும், பொன்வண்டு பூரிப்புகளும் கிடைக்கும். கோழிகள் எல்லாம் குப்பையைக் கிளறிக் கொண்டிருப்பது பொழுது போக்கிற்காக அல்ல.

தங்களுக்குத் தேவையான தீனிகளை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொண்டு, தேவையைத் தீர்த்துக் கொள்ளவே!

எத்தனைக் குப்பைகள் கிடந்தாலும், அதிலே தனக்குத் தேவையான இரையைத்தான் தேடும். குப்பைகள் ஏன் என்று கேட்பதுமில்லை. முறைப்பதும் இல்லை. அவற்றைக் கிளறுவதற்கு அஞ்சுவதுமில்லை.

குப்பை என்பது இயற்கை.

அதுபோலவே, நமது இளைஞர்களுக்கு எதிரானவை எல்லாம் குப்பைகளே, தடுமாறச் செய்யும் தடைகள், தகுந்த விளக்கமிளக்காத விடைகள். தேவைக்கு உதவாத முடைகள் எல்லாம் குப்பைகளே.

கோழிகள் குப்பைகளைக் கிளறித் தள்ளுவதுபோல, இளைஞர்கள் சிக்கல்களை ஆராய வேண்டும். சிக்கல்களை புறம் தள்ள வேண்டும்.

தனது முன்னேற்றத்திற்கு உதவுகிற கருத்துக்களை, ஞானத்தை மட்டும் தேடி தெளிவாகப் பெற வேண்டும். குப்பையைக் கோழி உண்ணாது. அதுபோலவே கெட்ட செயல்களான குப்பைகளை இளைஞர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

# 12. உப்பாக இருங்கள், உம்மாக வாழுங்கள்

வாழ்க்கையில் வெற்றிபெற கொக்காக வாழ வேண்டும் கோழிபோல் வாழ வேண்டும் என்று கூறினோம்.

வலிமையான முயற்சிக்கும் வைராக்கியம் நிறைந்த உறுதிக்கும் கொக்கின் நிற்கும் நிலை ஒரு எடுத்துக்காட்டு.

கொக்கு தான் பிடிக்கின்ற மீனுக்கான உபாய முறை அதுபோலவே கோழியும்.

குப்பைகளைக் கிளறிக் கொண்டிருந்தாலும் கொண்டிருக்கும் இரைதேடும் முயற்சி குன்றாதது போலத்தான் நாம் நமது முயற்சிக்கு முனைப்புதர வேண்டும்.

இனி மூன்றாவது நான்காவது குறிப்பைப் பார்ப்போம்.

உப்பாக இருக்க வேண்டும்.

உம்ஆக இருக்க வேண்டும்.

உப்பின் தன்மை என்ன? நீரில் கரைந்து போவது. நீருள் கரைந்தாலும் தன்னுடைய நிலையில் மாறிப் போகாமல் இருப்பது. சுவை கொடுப்பது. சுகம் அளிப்பதும் உப்பின் குணம்.

மனிதன் ஒரு காரியத்தில் இறங்கி கடமையாற்றுகிற போது, பணியாற்றுகிறபோது, அதனில் ஒன்றிப் போய்விட வேண்டும் என்பதுதான் இதில் உள்ள சிறப்புக் குறிப்பு.

'ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால்' என்பது போல செயல்படாமல், ஏனோதானோ என்று நினைக்காமல் உள்ளம் ஒன்றிப்போக உடல் ஒருமித்து செயல்பட வேண்டும்.

உப்பின் குணம் இன்னும் ஒன்று இருக்கிறது.

உணவிலே உப்பின் அளவு குறைந்தால் சப்பென்று போய்விடும் ருசி இருக்காது.

அதுபோலவே உணவில் உப்பின் அளவு மிகுதியாகப் போய் விட்டால் உணவின் ருசி பாழாகிவிடும்.

ஆகவே, அளவான உப்பின் அளவு அமிர்தமான ருசியைப் படைக்கும் என்பது, அனைவரும் பெற்ற அனுபவம்தான். அதனால்தான் உப்புக்கு இனிமை என்று ஒரு பொருள் உண்டு.

நீங்கள் எப்போதும் உப்பாக, அதாவது இனிமையானவராக இருக்க வேண்டும்.

இங்கே இனிமை என்றால், சர்க்கரையைத் தடவிக் கொண்டு நிற்பதா என்று கேலி கூடப் பேசலாம்.

அதாவது நடுநிலையாளராக நிற்க வேண்டும். இன்பம் என்றதும் 'ஒகோ' என்று தன்னை மறந்து குதிப்பதும், பறப்பதும்; துன்பம். என்றதும் 'ஐயோ' என்று அலறுவதும் அழுவதும்; இரண்டுமே முன்னேற்றம் பெற விரும்புவோருக்கு அழகல்ல.

அது எப்படிப்பட்ட நடுநிலை என்று கேட்கலாம்.

கிராமத்து இளைஞர்கள் பெரியவர்கள், சிறுவர்கள் எல்லாம் காலை நேரத்தில் தீ மூட்டிவிட்டு குளிர்காய்வார்கள். தங்களை வெப்பப்படுத்திக் கொள்ள.

தீக்கு அருகில் போனால் சுட்டு விடும். தீயை விட்டுத் தள்ளி இருந்தால் குளிரும்.

சுட்டும் விடாமல், குளிரும் இல்லாமல், ஓரிடமாக, பொருத்தமான இடம் பார்த்து அமர்ந்து குளிர் காய்ந்து மகிழ்வார்கள். அதுதான் நடுநிலை.

அகலாது அணுகாது தீக் காய்வார்கள் போல என்று வள்ளுவர் இதை மிக அழகாகக் குறிப்பிடுவார்.

உப்பு குறைந்தாலும், மிகுந்தாலும் உதவாததுபோல, உங்கள் நினைப்பும் உழைப்பும் சீராக சிறப்பாக அமைய வேண்டும்.

உப்புக்கு ஒப்பாக நீங்கள் உங்களை உருவாக்கிக் கொண்டால், உங்கள் எதிர்காலம் உங்கள் கையில்தான்.

**'உம்** என்று இருப்பது நல்லது என்றோம். எப்படி உம்மென்று இருப்பது?'

எதுவும் பேசாமல் இருப்பவர்களை 'உம்மணா மூஞ்சி' என்று செல்லப் பெயர் இட்டு அழைப்பது நம் வழக்கம். இங்கே உம் என்று இரு என்றால் அப்படித்தானா?

இதற்கு பலவாறாக நாம் பொருள் கொள்ளலாம்.

அதிகமாகப் பேசுவதை அநாவசியம் என்பார்கள். சொல்ல விரும்புவதற்கு மேலே பேசிக் கொண்டிருந்தால் பொருளில்லாத வீண் வார்த்தை ஆகிவிடும்.

அதைத்தான் வழ வழா, கொழ கொழா பேச்சு என்பார்கள். அறுவை என்பார்கள். ரீல் என்பார்கள்.

அப்படிப் பேசுபவரை விட்டு அகலப்பார்ப் பார்கள். கேட்பவர்கள் அல்லது அகற்றப் பார்ப்பார்கள்.

அதிகம் பேசினால் அதுவே துன்பம் என்று பெரியவர்கள் சொல்வது உண்மைதான். அதிகமாகப் பேசுவோருக்கும் துன்பம், அதைக் கேட்பவர்களுக்கும் துன்பம்.

கொஞ்சமாகப் பேசி நிறைய கேட்க வேண்டும் என்பதுதான் இங்கே நம் மேற்கொள்ள வேண்டிய முக்கிய விஷயமாகும்.

அதிகம் பேசுபவர்கள் வாயை கொடுத்து மாட்டிக் கொள்வார்கள். அமைதியாகக் கேட்பவர்கள் எதிலும் சிக்கிக் கொள்ளாமல் தப்பித்துக் கொள்கின்றார்கள்.

அமைதியாகக் கேட்கும் போதும், பேசும் போதும் வெளிப்படுத்துகிற வார்த்தைகளில் நிதானம் இருக்கும். நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்கிற திறமை ஜொலிக்கும். இந்த 'உம்' இப்படித்தான் பயன்படுகிறது.

இன்னொரு 'ம்' இருக்கிறதே!

அது வார்த்தையின் கடைசியில்தான் வரும். மொழிக்கு முதலில் வராது. வரவும் வராது. கூடாது.

சொல்லின் இறுதியிலே வருகிறபோது, அதற்கு ஒரு அர்த்தம் உண்டு.

பயனில்லாத இறுதியிலே வருகிறபோது, அதற்கு ஓர் அர்த்தம் உண்டு.

அந்த 'ம்' மைப்போல நீங்கள் இருக்க வேண்டும். எந்த இடத்திற்குப் போனாலும் அங்கே கடைசி ஆளாக அமர்ந்து கொண்டு நடப்பதை பார்த்துக் கொண்டிருங்கள்.

நீங்கள் வேண்டுமென்றால் கட்டாயம் உங்களை வந்து அழைப்பார்கள். மதிப்பார்கள், மரியாதை செய்வார்கள். மேடையில் அமர்த்துவார்கள். மேன்மை பலவும் தருவார்கள்.

நீங்களாகப் போய் முன்னே நிற்கிறபோது உங்களின் வருகை. அங்கே சிலருக்குத் தேவையில்லாமல் இருக்கலாம். பலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். உங்களை ஒரு தொல்லையாகக் கூடக் கருதலாம். அப்படி ஒரு சூழ்நிலை எழும்போது, உங்களைத் தவிர்த்துவிட முயற்சிப்பார்கள். அகற்றிவிட முனைவார்கள். அவமானகரமான சந்தர்ப்பம் கூட அங்கே உண்டாகலாம்.

அதனால்தான் 'ம்' போல இருங்கள். கடைசியாக இருங்கள். ஆனால் காரியம் கை கூடும் வண்ணம் நீங்கள் இருக்கிறபோது, உங்களுக்கு அழைப்பு வரும். அப்படிப்பட்ட உயர்நிலையை நீங்கள் உருவாக்கிக் கொள்ள உழைக்க வேண்டும். உயர்ந்திட வேண்டும்.

தன்னைத்தான் தாழ்த்திக் கொள்கிறவன் உயர்த்தப் படுவான். தன்னைத்தான் உயர்த்திக் கொள்கிறவன் தாழ்த்தப்படுவான்.

தன்னைத்தான் தாழ்த்திக் கொள்ளுதல் என்றால் அது தாழ்வு மனப்பான்மையைத் தான் உண்டாக்கும்?

இங்கே நாம் சொல்ல வருவது மனப்பான்மையை அல்ல. மனத் திண்மையை.

நமது திறமையை, பெருமையை, அறிவுக் கூர்மையை வெளிப்படுத்த விரும்புவதும் முயற்சிப்பதும் தவறானதல்ல.

வெளிப்படுத்துகிற விதத்தில் வித்தியாசம் இருக்கிறது. மற்றவர்கள் முணுமுணுக்காமல், முறைக்கமல், மாற்றுக் கருத்தினைக் கூறாமல், மரியாதையுடன் ஏற்றுக் கொள்ளச் செய்வதில்தான் செயலாண்மை இருக்கிறது.

மற்றவர்களை நம் வழிக்குக் கொண்டுவர நாம் கொஞ்சம் அடக்கி வாசிக்க வேண்டும். அதற்குத்தான் அடக்கம் என்று பெயர்.

ஒரு கூட்டத்தில் போய் நாம் கடைசி வரிசையில் உட்கார்ந்து விடுகிறபோது நமது, மதிப்பு குன்றி குறைந்து போய்விடாது.

முன்வரிசையில் போய் உட்கார்ந்து விடுவதினாலேயே பெருமையும் புகழும் வந்து குவிந்துவிடாது.

முன்வரிசையில் அமர்ந்திருக்கிறபோது, நமக்கும் மேலே பெயர் பெற்ற ஒருவர் வந்து, அவருக்கு இடம் தருவதற்காக நம்மை எழுப்பிவிட நேர்கிறபோது, நமக்கு நேர்கிற அவமானத்தை நினைத்துப் பாருங்கள்.

கடைசி வரிசையில் அமர்ந்திருக்கும் உங்களை, பலர் பார்க்கும்போது கூப்பிட்டுக் கொண்டுபோய் முன் வரிசையில் அமர்த்தினால், அப்பொழுது உங்கள் பெருமை எப்படி இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்.

மற்றவர் உங்களை உயர்த்தாமல், நீங்களே உயர்வாக எண்ணி உயர்த்திக் கொள்கிறபோது பெருமை, தற்பெருமை தற்போதம் என்றே நினைக்கப்படுகிறது.

உங்களை நீங்களே தாழ்த்துகிறபோது பிறர் தாழ்த்த வாய்ப்பில்லை. ஒரு அங்குலம் உயர்ந்தாலும் அது உயர்வுதானே!

1. பொற்காலம் 2. நற்காலம் 3. கற்காலம் 4. பிற்காலம் 5. முற்காலம் 6. மற்காலம் 7. வற்காலம்.

ஒவ்வொருவரும் இந்த ஏழு காலங்களில்தான் வாழ்ந்ததாக வேண்டும். எப்படி என்பதைத் தொடர்ந்து காண்போம்.

# 13. காலங்கள் ஏழு

மனித இனத்திற்கு வாழ்கின்ற உரிமை நிறைய உண்டு. கண்டதையெல்லாம் கொண்டு குவிக்க, பிறர் பார்க்காமல் பதுக்கி இஷ்டப்பட்ட பொருள்களை அடைவதற்காக ஏய்க்க, மாய்க்க, உய்க்க என்று எல்லா வாய்ப்புகளும் வசதிகளும் வாழ்க்கையில் உண்டு.

ஆனால், நிரந்தரமாக வாழத்தான் முடியவில்லை. அதற்குள் ஆசையில் ஆளாய் பயந்து அலைந்து திரிந்து பேராசைக்காரர்கள் கணத்தில் பிணமாகிக் காணாமல் போனதையும் நாம் காணுகிறோம். அதுதான் மனித ராசி

ஒருவர் எவ்வளவு காலம் வாழ்கிறார் என்பது கணக்கல்ல. எப்படி வாழ்ந்தார் அல்லது எத்தனை காலம் அமைதியாக வாழ்ந்தார்?

இந்தக் கேள்விக்கு கிடைக்கிற பதிலைப் பொறுத்துத் தான், ஒருவரின் வாழ்வு கணிக்கப்படுகிறது. புகழப்படுகின்றது.

காலம் வந்தது. காலனும் வந்தான். கொண்டு போனான் என்ற கதைதான். எழுதாத கதையாக, தொடர் கதையாக தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஆகவேதான், சிறப்பாக வாழ விரும்புகிற ஒருவர், காலத்தைப் பற்றி குறிப்பாகவும் பொறுப்பாகவும் புரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**இங்கே காலம் என்றோம்!**

**காலம் என்றால் என்ன?**

காற்று உண்டாக்குகிற பருவம்தான் காலம் என்பதாகும். கால் என்றால் காற்று. அம் என்றால் அழகு.

அடித்துக் கொண்டிருக்கும் காற்று. அழகாக இயற்கையை மாற்றி அமைத்து, பரவசத்தை உண்டாக்கி,

பலவிதமான காலத்தையும் கோலத்தையும் படைத்து விடுகின்றது.

அந்த இயற்கைக் காலம்போலவே, மனித தேகத்திற்குள்ளும் செயற்கைக் காலம் புகுந்து, தேகத்தின் கோலத்தைக் கூட்டி விடுகிறது. ஒட்டி விடுகிறது.

எனவே மனிதருக்கான காலம் பற்றி முதலில் தெரிந்து கொள்வோம்.

**1. பொற்காலம்: (பொன் + காலம்)**

மக்களுக்குப் பொற்காலம் என்பது ஒவ்வொருவரின் மனோநிலைக்கேற்ப மாறுபடும். அவரவர் அறிவுக்கேற்ப, ஆற்றுகின்ற செயலுக்கேற்ப, கூறுகின்ற கொள்கைக்கேற்ப மாறுபடும்.

அவையெல்லாம் வாதத்திற்கு உதவாது. வாக்கு வாதமும் பிடிவாதமும் வாழ்க்கையை சீரழிக்கும் கொடிய வியாதிகள்.

துன்பமும், துயரமும், நலிவும், மெலிவும், ஏக்கமும், தாக்கமும், வரவும், செலவும், பதட்டமும், படபடப்பும் அற்ற ஒரு வாழ்க்கை எங்கே இருக்கிறதோ அங்கேதான் பொற்காலம் இருக்கும், சிரிக்கும்.

மண்ணில் பிறந்த எந்த மனிதருக்கும் இந்த நிலை அமைய வாய்ப்பில்லை. அமைந்திருக்கிறது என்று யாராவது சொன்னால், அவர்கள் மனமறிந்து பொய் சொல்கிற மயக்குப் பேர்வழிகள் ஆவர்.

எந்த அரட்டலுக்கும் மிரட்டலுக்கும் பணியாத ஓரிடம். எந்த பஞ்சத்திற்கும் பசித்தாக்குதலுக்கும் பயப்படாத ஓரிடம். இடி மழை என்றோ, நோய் நொடி என்றோ கலங்காமல் அமைதியாகக் கழிக்கும் ஒரு சொர்க்க பூமி உண்டு. அது எது தெரியுமா?

**அதுதான் தாயின் கர்ப்பப்பையாகும்.**

அங்கே குடியிருக்கிற பத்து மாதங்களும் ஒருவருக்குப் பொற்காலம். பெண் வயிற்றுக்குள் இருக்கும்வரை தான் இந்தப் பொற்காலம் நீடிக்கிறது.

மண் மடிக்கு வந்து விழுந்துவிட்ட உடனேயே, பொற்காலம் புறப்பட்டுப் போய்விடுகிறது. இனி, கருப்பை ஊருக்குப் போகும் காலம்தான் பொற்காலம். (பத்துமாத காலம் மட்டும்).

**2. நற்காலம்: (நல் + காலம்)**

பொற்கால உலகிலிருந்து பூமியைப் பார்த்துவிட்ட குழந்தைக்கு ஏற்படுகிற காலம்தான் நற்காலம்.

இன்றைய காலத்துப் பெண் குழந்தைகள் சிலருக்கு இந்த நற்காலம் கூட அமையவில்லை என்பது உண்மைதான் என்றாலும், பொதுவாக, குழந்தைகள் எல்லோருக்கும் வாழ்க்கையில் நற்காலம் பிறப்பதும் உண்மைதான்.

குழந்தைகள் யார் பார்த்தாலும் கொஞ்சி மகிழ்வதும், பாராட்டிப் பேசுவதும், ஒவ்வொரு செயற்கையை ரசிப்பதும் நற்காலம்தானே!

நடக்கத் தெரிகிற வரையிலும், நான்கு வார்த்தை பேச இயலுகிற வரையிலும் குழந்தைகளுக்கு கொண்டாட்டம் தான். கடவுளுக்கு இணையாகப் பேசப்படும் உயர்ந்த நிலை. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்பது பழமொழி அல்லவா? பிறந்தது முதல் 6 வயது வரை).

**3. கற்காலம்: (கல் + காலம்)**

நற்காலம் முடிகிற வயதில் கற்காலம் வந்துவிடுகிறது. கல் + காலம் = கற்காலம்.

கற்களை வீசி மகிழும் வயது. கண்டதையெல்லாம் எடுத்தெறிந்து இன்பம் காணுகிற மனது. அதோடு பள்ளிக் கூடத்தில் கொண்டு போய் தள்ளி விடுவதால், கற்கின்ற காலமாகவும் ஆகிவிடுகிறது.

விளையாட்டே கல்வி. விளையாட்டே உணவு. விளையாட்டே ' வாழ்க்கை என்று வசந்த காலத்தை வரவழைத்துக் காட்டுவது கற்காலம் (6 முதல் 15 வயது வரை).

**4. பிற்காலம்: (பின் + காலம்)**

(பின் + காலம்) பின் செல்லுகின்ற காலம். ஆணாக இருந்தால் பெண் பின்னேயும், பெண்ணாக இருந்தால் ஆண் பின்னேயும் செல்வதில் பெருமைப்படுகிற காலம்.

தான் விரும்புகிற ஒருவருக்கே தன்னையே தந்துவிடுகிற, தத்தம் செய்து விடுகிற அசாத்திய துணிவு நிறைந்த காலம். எதிர்காலம் பற்றிய சிறு சிந்தனைகூட இல்லாமல், இன்றே வாழ்ந்து முடித்துவிடவேண்டும் என்ற வேகமும் வெறியும் வேட்கையும் விளையாடுகிற வெகுளித்தனமான பருவம்.

இந்தக் காலக்கட்டத்தை காதல் காலம் என்றே பலர் நினைக்கிறார்கள். காதல் செய்யாத வாழ்வு ஒரு வாழ்வா என்ற கேள்வியிலேயே. தங்களை தொலைத்து விட்டிருப்பவர்கள், தொலைந்து போனவர்கள். நலிந்து போனவர்களின் நடமாடும் கூடாரம்போல் இருக்கிறது. இந்த பிற்காலம். (15 வயது முதல் 30 வரை).

**5. மற்காலம்: (மல் + காலம்)**

திருமணம் நடந்து குடும்பஸ்தர் ஆகிவிடுகிற காலம். குடும்பப் பொறுப்பானது கொஞ்சங் கொஞ்சமாகப் பெரும் சுமையாகி வருகிற காலம். திருமணம் ஆகாதவர்கள், திருமணத்திற்கு முயன்றும் நடைபெறாமல் அதில் தோற்றவர்கள், தங்கள் குடும்ப அங்கத்தினர்களைக் காக்கின்ற பொறுப்பை கடமையாக்கிக் கொண்டு, தங்களையே தேய்த்துக் கொண்டு மாய்த்துக் கொள்கிற வகையில் போராடுகிற காலம் இது. மல் யுத்தம் போடுகிறது போல போராடி, சோதனைகளிலும் வேதனைகளிலும் மல்லாடி அல்லாடி வாழ்கிற காலம். (30 முதல் 50 வரை).

*6. முற்காலம் : (முன் + காலம்)*

வாழ்க்கைப் போராட்டத்தில் வளமையை இழந்தவர்கள். இளமையைத் தொலைத்தவர்கள். இன்பத்தைத் தேடி அலுத்தவர்கள். எதிர்பாராத நிகழ்ச்சிகளால், விபத்துக்களால் தடம்மாறி சலித்தவர்கள், மனம் புண்ணாக்கி உடல் சல்லடைக் கண்ணாகிவிடுகின்ற காலம் இது.

வடிவிழந்து போகின்ற உறுப்புக்கள். வனப்பிழந்து மாறுகின்ற அங்கங்கள், வறுமை வற்றிப் போய் கிடக்கும் அவயங்களை நோய்கள் நொறுக்கிவிட, மன இறுக்கமும், உடல் கிறக்கமும் பெற்றிருக்கும் பலப்பல உடல்வாதைகள். பார்வையிழக்கின்ற கண்கள். பலமிழந்து ஆடுகிற பற்கள். கேட்க மறுக்கும் காதுகள். இயல்பான ஓட்டத்தை இழக்கும் இதயம். இப்படியெல்லாம் பலப்பல விதங்களில் உடல் கிழத்தன்மை ஏற்பட, முள்காலத்தை நோக்கி (முள் + காலம்) எண்ணங்கள் நெருப்பாக நினைக்க, வாழ்க்கையுடன் வாதாடுகின்ற காலம். முன்னர் குழந்தையாக வாழ்ந்தபோது இருந்த அறிவு நிலை உணர்வு நிலைக்கு உள்ளாகும் காலம். (50 முதல் 70 வரை).

**7. வற்காலம்: (வன் + காலம்)**

அதாவது வறண்ட காலம். திரட்சியுடன் தேஜசாக இருந்த தேகத்தில் வறட்சி. திண்மையை உறுதியைக் காட்டிய மனதில் மிரட்சி. எண்ணங்களுக்கிடையே பய உணர்ச்சி. இறப்பு எப்போதும் ஏற்பட்டு விடும் என்று கிளர்ச்சிகள் கொடுக்கிற தளர்ச்சி.

உடலிலே குறைகள். மனதிலே கவலைகள். சுற்றுப்புற சூழல்களில் தொல்லைகள். குடும்பத்திலே சுமைகள், பிறருக்குப் பயன்படாததால் மற்றவர்களிடம் பிறக்கும் ஏச்சுக்கள், பேச்சுக்கள்.

வன்காலமாகிய வற்காலத்தில் வில்லாக வளைந்து, கூடாகத் திரிந்து, 'கொடுமையடா வாழ்வு, போதுமடா சாமி' என்று புலம்புகிற காலம் இது.

அன்பு இளைஞர்களே!

இங்கே நாம் எடுத்துக் காட்டிய ஏழு காலங்களிலும் உங்கள் இதயத்தை ஏற்று நிலைநிறுத்தப் பார்த்துக் கொள்ளுங்கள்.

கருவானபோதே கர்ப்பச் சிதைவில் போயிருக்கலாம். மற்றும் பிறந்த உடனே பெருந்தீங்குகளில் சிக்கி விட்டிருக்கலாம்.

ஆனால் ஒன்று. மனித உடலெடுத்து, உயிர் பெற்று விட்டாலே மாபெரும் கஷ்டங்களும் நஷ்டங்களும்தான் வந்து சேரும். ஆமாம், வந்தே தீரும்.

எந்தக் காலமாக இருந்தாலும், அந்தக் காலத்தில் எதிர்பாராதவைகள் நடந்து நடந்து, நம்பிக்கையை ஒடித்துவிடும். இஷ்டப்பட்டவைகள் எதுவும் நடக்காமல் இருந்து, மனச் சமாதானத்தை அழித்தேவிடும்.

பின் எதற்காக இந்த வாழ்வு வாழ வேண்டும் என்றால், அங்கேதான் மனிதத்தன்மை மலர்ந்த முகம் காட்டி அழைக்கிறது.

மனிதன் வாழ்வில் மூன்று நிலைகள் உண்டு.

**ஒன்று மனிதன்.** இரண்டு **புனிதன்.** மூன்று **கினிதன்.**

நீங்கள் எப்படி வாழ்வீர்கள்? எப்படி வாழ வேண்டும் என்ற இந்த மூன்று சொற்கள் தாம் உங்களை வாழ்வித்து வழிகாட்டுகின்றன. வழிகாட்டப் போகின்றன.

எப்படி? எப்படி?

# 14. மூன்று வகை மனிதர்கள்

மனிதர்களை மிருகங்கள் என்று சமூக சாஸ்திரம் சமத்காரமாகக் கூறிவருகின்றது.

அதாவது சமுதாயம் என்னும் காட்டில், சந்தர்ப்பத்திற்கேற்ப கூடி வாழும் மிருகங்கள் என்பது சமூக வல்லுநர் கருத்தாகும்.

மிருகங்கள் ஏன் ஒன்று சேர்ந்து வாழ்கின்றன என்றால், தங்களுக்கு வரும் ஆபத்துக்களை தடுத்துக்கொள்ள, தவிர்த்துக்கொள்ள.

தாக்க வரும் பிற இன விலங்குகளை பயமுறுத்தி விரட்ட, பயமில்லாமல் கூடி வாழ, இப்படி கூட்டமாக சேர்ந்து மிருகங்கள் வாழ்கின்றன.

அப்படித்தான் மனிதர்களும் ஒன்று சேர்ந்தார்கள். பத்திரமாக வாழத்தான் ஒற்றுமை தேவை என்று கூடினார்கள், ஒருவரை ஒருவர் நாடினார்கள். தேடினார்கள்.

அதற்கு சமுதாயம் என்ற பெயர் சூட்டிக் கொண்டனர்.

முதலில் தனித்தனியாக வனாந்தரங்களிலே வதிந்தவர்கள். பிறகு கூட்டமாகச் சேர்ந்தார்கள். ஒருவரை ஒருவர் நம்ப வேண்டும். உதவ வேண்டும் என்று எழுதா உடன்படிக்கை ஒன்றையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். சமாதானம் ஒன்றே குறிக்கோள் என்பதாகச் சத்தியம் செய்து ஒலித்தார்கள். களித்தார்கள்

சமுதாயம் என்ற சொல்லுக்கு கூட்டம், சங்கம், மக்களின்திரள், உடன்படிக்கை, சமாதானம் என்று அர்த்தங்கள் இருக்கின்றன.

தாயம் என்று முதலில் ஒரு சொல்லை உருவாக்கிக் கொண்டனர். தாயம் என்றால் உரிமை கொண்ட சுற்றம்

என்று அர்த்தம். முதலில் சம + தாயமாகத்தான் அமைந்திருந்தது.

ஏற்றத்தாழ்வு இல்லாத நீதி, நியாயம் நிலைத்திருக்கிற மனிதர்களின் சங்கமமாகத்தான் சமுதாயம் அமைக்கப் பட்டது. அடுத்தடுத்து தோன்றிவந்த சந்ததிகளுக்குள்ளே, ஆசைகள் பொறாமைகள் பிறந்த போது. சமுதாயத்தின் அர்த்தமே மாறிப்போயிற்று, கொள்கையும் குழம்பிப் போயிற்று.

ஆரம்ப நாட்களில் பொருள் தேவைப்பட்டது. நாளாக நாளாக அதில் ஆர்வம் ஏறிவிட்டது. அப்புறம் அதுவே ஆசையாகி பேராசையாகி வாழ்வின் வேட்கையாகி வெறியாகிவிட்டது.

ஆங்கில விஞ்ஞானி ஒருவர், "இதயம் இயங்குகிறபோது ஒருவித சத்தம் கேட்கிறது. அந்த சப்தம் 'லப்டப்' என்று இருக்கிறது" என்று கண்டு பிடித்தார்.

டப் (Dub) என்பது ஒருவித சத்தம்தான். நமது ஆட்கள் அதை டப்பு என்று எடுத்துக் கொண்டனர். டப்பு என்றால் பணம் என்று தெலுங்கில் சொல்லுவார்கள். இதயம் கூட டப்பு டப்பு என்றுதான் அடித்துக் கொள்கிறது. இதயம் பணம், பணம் என்று துடித்தால் இரத்த ஓட்டமும் அப்படித்தானே ஆரவாரிக்கும்

அப்படிப்பட்ட மனோநிலைதான் இன்று மக்களிடையே புதராய் மண்டிக் கிடக்கிறது

அதனால் மனிதர்கள் எல்லாம், மனத்தாலும் குணத்தாலும் மாறிப் போய்விட்டனர்.

படிக்காதவர்களுக்குத்தான் பகுத்தறியும் அறிவு போதாது பண ஆசை பீறிட்டுக் கொண்டு வரும் என்பார்கள்.

இந்த மொழியெல்லாம் பொய்யாகிப் போய் நமது நாட்டில் வெகுகாலமாகிவிட்டது. படித்தவர்கள்தான் பயங்கர திட்டங்களைப் போட்டு, சட்டத்தை வளைத்து,

முறித்து, அதன் கழுத்தை நெறித்துக் கொண்டிருக் கின்றார்கள்.

அவர்கள் பெற்ற அறிவு. ஆசைகளுக்குத் தூபம் போடுகின்றன. தூண்டிலைப் போடுகின்றன. துரத்தி துரத்தி அடிக்கின்றன. அதனால் அவர்கள் மேலும் மேலும் கீழ்த்தரமாகிக் கொண்டே வருகின்றனர். அந்த நிலைமை ஏற்படுகிறபோது, மனிதன் நிலையில் மாறுகிறான். தடுமாறுகிறான். தத்தளிக்கிறான். பித்தனாகிறான், பேயனாகிறான்.

பேராசையின் காரணமாக அவனுக்கு அமைந்திருக்கின்ற பெயரும் வாழ்வுமே, அருவருப்புக்கு உள்ளாகின்றதாக மாறுகிறது.

மனிதன் கினிதன் புனிதன் என்ற இந்தப் பெயர்கள். நீங்கள் அறிந்த ஒன்று தான்.

**மனிதன்** என்றால் சிந்திக்கின்றவன். அழகாயிருப்பவன். நிதமும் அப்படியே வாழ்பவன். பிறரைக் கவர்கின்ற மன்மதன். இப்படியெல்லாம் பெருமைக்குரிய அர்த்தம் பொதிந்தவன் மனிதன்.

**கினிதன்** என்றால் பீடை பிடித்தவன். நோய் பிடித்தவன், கீழ்த்தரமான குணாதிசயங்களைக் கொண்டவன்.

**புனிதன்** என்றால், மனிதனுக்குள்ள இயற்கையான குணங்களில் செம்மையும் செழுமையும் உண்மையும் உயர்வும் திண்மையும் தேர்ந்த பண்பாளனாகவும் உள்ளவன்.

இப்பொழுது புரிந்திருக்குமே!

மனிதன் புனிதனாவதும், கினிதனாவதும் அவனவன் கையில்தான் இருக்கிறது

**கை** என்றால் ஒழுக்கம். அதாவது அவனவன் ஒழுக்கத்திலும் பழக்கதிலும் வழக்கத்திலும்தான் வாழ்க்கை அமைந்திருக்கிறது.

இளைஞர்கள் எப்படி வாழ வேண்டும்?

தன் மனதில் தோன்றுகிற எதிர்கால கனவுகளை நனவுகளாக்க, எண்ணங்களில் உண்மையானவற்றை மட்டுமே தெரிந்தெடுத்துப் பதித்துக் கொள்ள வேண்டும்.

சமுதாயத்திற்குள் வாழ்கின்ற கடமையால் சமுதாயத்திற்காக வாழ வேண்டும் என்பதைவிட, சமுதாயம் மதித்து வணங்குகின்ற முறையில் நீங்கள் சமத்காரமாக வாழ்வதையே முக்கியமாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

பொய்மையெனும் புழுதியிலும் புரள்வது எளிது தர்மத்தின் தலையில் அடித்து சாய்க்கின்ற சண்டித்தனத்துடன் வாழவதும் மிக எளிது. வாழ்க்கை மரபுகளை வெட்டி வீழ்த்துகின்ற மாபாதக பாவங்களை பண்ணுவது இன்னும் எளிது.

இந்தச் சமுதாயத்தில் இப்படி நடப்பது இப்போது சர்வ சாதாரணமாகிவிட்டது.

மனிதர்களில் பல முக்கியத் தலைவர்கள், கினிதர்களாகப் போய் வெகுகாலம் ஆகிவிட்ட. பண ஆசையும் பதவி மோகமும் பச்சைத் துரோக காரியங்களும் கூடிவிட பேய் பிடித்து அலைவதும் கண் கொள்ளாக் காட்சி, கன்றாவிக் காட்சி.

பணம்தான் வாழ்க்கையென்ற ஒரு பொய் நம்பிக்கையில் புரள்கின்றனர்.

அந்தப் பேய்த்தனமும், நாய்க்குணமும் அவர்கள் கடமை நிறைந்த மனதைக் கெடுத்து, நோய்களைக் கொடுத்து, மன உலைச்சலும் எரிச்சலும் ஊட்டி, தினமும் மரண வேதனைக்குள்ளே சாகடித்துக் கொண்டிருக்கின்றன. அவர்களும் செத்து செத்துப் பிழைக்கின்றனர்.

இனிமையான எதிர்காலத்திற்கு இன்று நாம் வாழ்கின்ற பண்பான வாழ்க்கையே 'பதினெட்டாம் படிகளாக' இருக்கின்றன.

நல்ல பண்புகள் என்பவை பலன் கொடுக்கும் விளை பயிர்கள். அந்தப் பயிர்களை வளர்க்க நல்ல நிலம் வேண்டும்.

சத்தான வித்துக்கள் வேண்டும். வரப்பு வேண்டும். வேலி வேண்டும். உரம் வேண்டும். தினம் தினம் பாதுகாப்பு வேண்டும்.

கெட்ட பண்புகள் என்பவை வயலில் உள்ள களைகள் போல. முள் மரமான காட்டுவேலி மரம் போல. அவைகள் எங்கு வேண்டுமானாலும் முளைக்கும். யார் பாதுகாப்பும் இல்லாமல் பயங்கரமாக வளரும். இவற்றால் மக்களுக்குத் துன்பங்கள் தாம்.

மனிதன் கெட்டவனாக மாறுவதற்கு எந்தத் துணையோ பயிற்சியோ, வழிகாட்டியோ தேவையில்லை. கெட்டவனாக மாறவேண்டும் என்று ஆசைப் பட்டவுடனே, கூப்பிடாமலே ஓடி வந்து குரல் கொடுத்து, கை கொடுத்து, சகலத்தையும் கற்றுத் தந்திட ஒரு கூட்டமே கூடி விடும்.

நல்லவனாக மாற, உனக்குத் சோதனைகள் வரும். வேதனைகள் வரும். ஆனால் ஆதரிக்க யாருமே வரமாட்டார்கள்..

நல்லவர்களாக புகழ்பெறுவது வேறு. கெட்டவர்களாக பெயர் பெறுவது வேறு. இரண்டுக்கும் விளம்பரம் உண்டு. ஆனால் கெட்டவனை முகத்துக்கு நேராகப் பொய்யாய் புகழ்ந்து, அவன் போனதும் காறி உமிழ்வார்கள். முகஸ்துதியான புகழ் என்பது சாப்பாட்டுத் தட்டில் சாணம் படைக்கப்படுவது போல. எப்படி வாழ்ந்தாலும் அதற்குப் பெயர் வாழ்க்கையல்ல.

மனிதனாக வாழ்கிறபோது, அதற்குப் பெயர் வாழ்க்கை.

புனிதனாக வாழ்கிறபோது அதற்குப் பெயர் மேல்கை.

கினிதனாக வாழ்கிறபோது அதற்குப் பெயர் கீழ்க்கை.

ஆகவேதான் ஒருவன் மேல்கையில் வாழ்கிற வாழ்வைப் பெற வேண்டும். அந்த வாழ்க்கைப் பெயர்தான் சொர்க்கம். கீழான வாழ்க்கைக்குரியதற்குப் பெயர் நரகம்.

ஏனென்றால், கேடு கெட்ட வாழ்வு வாழ்பவர்களின் உடல் கெட்டுப் போவதால், இன்பத்திற்குப் பதிலாக துன்பமும், அருளுக்குப் பதிலாக இருளும், சுகிப்பதற்குப் பதிலாக மயக்கமும் வரும். இப்படி வாழ்வதும் ஒரு வாழ்வா

நமது வாழ்க்கையின் இலட்சியம் என்ன?

சுகமாக வாழவேண்டும். மகிழ்வோடு வாழ வேண்டும்.

சுகம் என்பது உடலால் கிடைப்பது. மகிழ்ச்சி என்பது உடல் கெடுகிறபோது எப்படி கிடைக்கும்?

கோடி கோடியாக பொருள் இருந்து என்ன பயன்? ஆயிரம் பேர் மதிக்கத்தக்க அந்தஸ்து, அதிகாரம் இருந்து என்ன பயன்?

கேவலமான, கீழ்த்தரமான கேடுகெட்ட, பார்த்தவர்கள முகம் சுளிக்க வாழ்கிற முறை எளிதான முறை. அதைச் செய்ய ஆயிரம் பேர்கள், கோடி பேர்கள் உண்டு. அந்தப் பெயரை ஒரு நொடியில் பெற்றவிடலாம் முடியும்.

நல்லவன் என்ற பெயரெடுக்க நாளாகும். உழைக்க வேண்டும். உழைப்பைத் தொடர வேண்டும்.

இதனால் என்ன பயன்? உடல் நலமாக, மனம் தெளிவாக இருக்கிறது. அதனால் சுகமும் சொர்க்கமும் கிடைக்கிறது.

உங்களுக்கு எப்படிப்பட்ட எதிர்காலம் அமைய வேண்டும் என்பதை நீங்களே சிந்தியுங்கள். நிதானமாக ஒரு முடிவுக்கு வாருங்கள். நினைத்ததை உறுதியோடு செயல்படுங்கள், செயல்படுத்துங்கள்.

அந்த எதிர்காலம், அற்புதமான காலமாக அமையும். சூரிய ஒளி பார்த்து உயிரினங்கள் உற்சாகம் அடைவதைப் போல, உங்களைப் பார்த்து பல முகங்கள் மலர்வதைக் காணமுடியும்.

அந்த இன்பத்தைவிட கோடிப் பணமா பெரிது?

# 15. தேடுங்கள் தெரியும்

பெற்றிருக்கும் மனிதப் பிறவி, பெரும் பேறுக்கு உரியது. நீங்கள் அதை பெருமையாகக் கருத வேண்டும். பிரச்சனைகள் நிறைந்த வாழ்வை, புன்முறுவல் காட்டி எதிர்க்க வேண்டும். போராட வேண்டும்.

புதிரான பிரச்சனைகளைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்ய வேண்டும். அதற்குத் தேவை பொறுமையான தேடல்கள். திறமையான செயல்கள்!

எதைத் தேட வேண்டும் யாரைத் தேட வேண்டும்? எப்படித் தேட வேண்டும்? எதற்காகத் தேட வேண்டும்?

கிளம்பியுள்ள கேள்விகளுக்கு கிடைக்கக் கூடிய பதில்தான், உங்கள் எதிர்காலத்தை வடிவமைக்கும் சிற்பியாகும். வளமாக வாழ்விக்கும் அற்புதமாகும்.

மனித வம்சத்துக்கே ஒரு மகத்தான குணம் உண்டு. மற்றவர்களைப் பற்றியே சதாகாலமும் நினைத்துக் கொண்டிருப்பதில், பேசுவதில் இன்பம். மற்றவர்களை வேடிக்கை பார்க்கும் போதோ மகா இன்பம். மற்றவர்களை மட்டமாக விமர்சிக்கிறபோது மகா திருப்தி. மற்றவர்கள் கஷ்டப்படுவதைக் காணும்போது பேரின்பம்.

இப்படி மற்றவர்களைப் பற்றியே கஷ்டப்பட்டு செய்திகளைத் திரட்டி, மனப்பாடம் செய்து, மனம் போலப்பேசி மகிழ்ச்சி அடைகிற கூட்டம் நமது மாண்புமிகு மனிதக் கூட்டம்தான்.

மற்றவர்கள் நினைப்பிலேயே தங்களைப் பற்றிய நினைவில்லாமல், தங்கள் மீது மண்ணைப் போட்டு மூடிக்கொண்டு, மண்ணுக்குள் மண்ணாய் போகிற மனிதர்களைப் பற்றி என்ன சொல்ல?

நான் யார்? என்று கேள்வி கேட்க வைத்து, உங்களை வேதாந்தியாக ஆக்கவில்லை. அது ஆத்ம சிந்தனை. ஆன்மீகக் கலையாகிவிடுகிறது. நம்மை பிறக்க வைத்திருக்கும் பெற்றோரின் நிலைமை. சுற்றியிருக்கிற சூழலின் நிலைமை.

உனக்கிருக்கிற தகுதி, திறமை என்ன என்பதைத்தான் புரிந்துகொள்ள வேண்டும். தெரிந்து கொண்டாக வேண்டும். அதுதான் தேடுதற்குரிய விஷயம்.

தன்னைத் தெரிந்துகொள்வதுதான் உண்மையான உண்மை. உயர்வுக்கு மேன்மை தரும் மேன்மை.

இதைத்தான் நான் தேடல் என்று சொல்கிறேன்.

தேடுதல் என்பது இரண்டு வகைப்படுகிறது. ஒன்று, **அகத் தேடல்** (Internal Search) இரண்டு **புறத்தேடல்** (External Search).

எனக்கு என்ன திறமை இருக்கிறது? எவ்வளவு ஈடுபாடு இதில் இருக்கிறது? இன்னும் கொஞ்சம் வளர்த்துக் கொள்ள முடியுமா? இதனால் என் வாழ்வு வளம் பெறுமா? வரலாறும் இடம் தருமா? என்று சிந்திப்பது அகத்தேடல்.

என் திறமையை வளர்த்துக்கொள்ள என் குடும்பம் உதவுமா? பிறந்த குலத்திற்கு பெருமை தருமா? திறமையை வளர்த்துக்கொள்ள சுற்றுப்புறச் சூழ்நிலை உதவுமா? தடைகளை எழுப்புமா? தங்கு தடையின்றி முன்னேறும் வாய்ப்புகள் கை கூடுமா? என்று இடம் பார்த்து, தடம் பார்த்துக்கொள்வது புறத்தேடல்.

'எனக்கு எப்படி இதெல்லாம் தெரியும். எப்படி கண்டு பிடிக்க முடியும்' என்று நீங்கள் என்னைக் கேட்டால், அதற்குப் பெயர் **தன்னம்பிக்கையில்லாத கோழைத்தனம்** என்று அர்த்தம்.

என்னால் முடியுமா? என்று உங்களை நீங்களே கேட்டுக்கொண்டால், அதற்குப் பெயர் தன்னம்பிக்கையுள்ள தலைமைத்தனம் என்று அர்த்தம்.

உங்களை நீங்களே கேட்டுக்கொள்கிற வேகத்தில்தான் விவேகம் பிறக்கிறது.

விவேகம் பிறக்கப் பிறக்க, அதில் பல நுணுக்கங்கள் பிறக்கப் பிறக்க, உங்கள் மனதிலே ஒரு வியூகம் பிறக்கிறது.

வியூகம் என்கிற திட்டமிடும் மனோபாவம் சிறக்கச் சிறக்க, உங்கள் மனதிலே ஒரு எழுச்சியும், செயலிலே பல திரட்சியும் ஏற்படுகிறது.

இப்படி பல வடிவங்களில் உங்களை வழி நடத்துகிற தேடல்தான், தலையான அம்சம் என்பதை நீங்கள் நெஞ்சிலே, கொஞ்சமும் அச்சமின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

என் பிறப்பு இப்படி இருக்கிறதே? என் குடும்பத்தில் வறுமை கூத்தாடுகிறதே? கூடியிருப்பவர்களின் கோபம் கொப்பளிக்கிறதே என்று நீங்கள் கூறலாம். உண்மைதான்.

கடல் என்றால் அலைகள் வந்து கொண்டேதான் இருக்கும். அதற்காகப் பயணிக்காமல் இருக்க முடியுமா?

உடல் என்றால் நோய்கள் பிறந்துகொண்டேதான் இருக்கும். அதற்காக வாழ்வையே வெறுத்துத் தள்ளிவிட முடியுமா?

வாழ்க்கையில் வெற்றிகரமாக வாழ, விரும்பியதை சாதிக்க, வேண்டியதை அடையும் ஒரு ரகசியத்தை இங்கே உங்களுக்குச் சொல்லித் தருகிறேன்.

அந்த சூட்சமம் மிக எளிது. ஆனால், பின்பற்றிக் கொள்ள மலைபோல உறுதியான மனமும், மலர்போல அசைந்து கொடுக்கும் தெளிவும் சுளிவான உடலமைப்பும் வேண்டும். இதோ!

ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு ஆறு ஓடுவதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

சலசலவென்று கம்பீரமாக ஓடிக்கொண்டிருக்கிற அந்தச் சிற்றாறு, தங்கு தடையில்லாமல் எங்கும் பசுமையை படைப்பித்துக் கொண்டு பயணம் போய்க் கொண்டிருக்கிறது.

ஓடுகிற பாதையில் ஒரு மேடு உருவாகியிருக்கிறது. ஆறு என்ன செய்யும்? ஓட்டத்தை நிறுத்திவிடுமா? கலங்கிப் போய் குளமாகி குட்டையாகித் தேங்கிவிடுமா?

இல்லையே! அது பயணத்தை நிறுத்தாமல், பத்திரமாகப் போய்க் கொண்டிருக்கிறது. எப்படித் தெரியுமா? அதுதான் ஆற்றின் அறிவான வியூகம்.

எதிரே ஏற்பட்டுவிட்ட அந்த மேட்டைப் பார்க்கிறது. தன்னால் கடந்து போக முடியும் என்றால், மேட்டின் மேல் ஏறிக் கடந்துவிடுகிறது.

ஏற இயலாத மேடு என்றால், அதற்காக அது களைத்து விடுவதில்லை. மேட்டைச் சுற்றி ஒதுங்கிப்போய் விடுகிறது. அதன் நோக்கம் கடலுக்குப் போய் கலந்து விடுவது. இடையில் ஏற்படும் வழித் தடங்கலைக் கண்டு, அரண்டுவிடாமல் மிரண்டு போகாமல், வழி கண்டு பிடிக்கிறதே. அதுதான் ஆற்றின் சக்தி. அதுதான் நீரோட்டம் என்ற பெயரைப் பெறுகிறது.

நீரோட்டமாக உங்கள் நெஞ்சத்தின் நினைவும், நிதம் நடத்துகிற செயல்களும் அமைந்துவிட வேண்டும்.

ஆனால், மக்கள் எப்படி இருக்கிறார்கள் தெரியுமா?

1. எதைப் பார்த்தாலும் நின்று வேடிக்கைப் பார்ப்பது போய் முடிக்க வேண்டிய வேலையை மறந்துவிட்டு வாய் பிளந்து பார்த்தபடி நின்றுவிட்டு, வேடிக்கை முடிந்த பிறகு, புறப்பட்டுப் போவது. இது மிருக ஜாதியைச் சேர்ந்த கூட்டம்.

2. வேடிக்கை நடக்கிற இடத்தில் என்ன நடக்கிறது என்று பார்த்துவிட்டு, அதை 'வியாக்யானம்' செய்வது. விவரம் தெரிந்தது போல விலாவாரியாக விளக்கம் அளிப்பது, பிதற்றலாகப் பேசி, பெருமை பொங்க, தற்பெருமை தலை தூக்குவதுபோல, மற்றவர்களை ஒரு பார்வையால் கம்பீரமாகப் பார்த்துவிட்டுக் கலைவது. இது மிருகத்திற்கும் மனிதர்களுக்கும் இடைப்பட்ட உளறல் ஜாதி.

3. மற்றவர்களைக் கூட்டி வேடிக்கை பார்க்க வைக்கிற, மதியூக வேலைகளைச் செய்து வைக்கிற ஒரு கூட்டம். அந்தக் கூட்டம் மனிதர்களில் திறமையுள்ள ஜாதி.

இதில் நீங்கள் எந்த இனம் என்று தேடிப் பாருங்கள். விவரமில்லாமல் வேடிக்கை பார்ப்பவரா? பேசிப்பேசி பொழுதை போக்குபவரா? மற்றவர்கள் கவனத்தை ஈர்ப்பவர்களா?

மற்றவர்கள் கவனத்தை உங்கள் பக்கம் இழுக்க முடியும் என்றால், உங்களிடம் ஒரு தனிப்பட்ட (சக்தி) திறமை ஒன்று இருக்கிறது என்றுதானே அர்த்தம்.

அந்தத் திறமை என்ன என்று தேடித் தெரிந்து கொள்வதே ஒரு திறமைதான். அந்தத் திறமை ஒன்றைத்

தெரிந்து கொண்டு விட்டால், உங்களின் உண்மை சுயரூபம் புரிந்துவிடும்.

உண்மைத் திறமையை தெரிந்துகொண்ட பிறகு, தொடர்ச்சியாக ஒருவர் செய்ய வேண்டியது என்ன? அதை வளர்த்துக் கொள்ளும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதுதானே!

அதுதான் இல்லை. இங்கேதான் மக்கள் ஒருவருக்கொருவர் மாறுபட்டு, வேறுபட்டு நிற்கின்றார்கள்.

1. ஒரு காரியத்தை செய்துவிட ஒருவர் நினைக்கிறார். அந்தக் காரியத்தைச் செய்தால், தடைகள் வந்து தாக்குமோ? இடையிலே நின்று போகுமோ? பின்னால் நமக்கு கஷ்டங்கள் ஏற்படுமோ? மற்றவர்கள் கேலி செய்வார்களோ? மானம் போய்விடுமோ என்று பலவாறாகத் தங்களுக்குள் யோசித்து, பயந்து, தன்னம்பிக்கை இழந்து, தடுமாறித் தத்தளித்து பின்வாங்கி விடுவது. இவர்கள் எதையுமே செய்ய முடியாத அளவுக்கு கையாலாகாதவர்கள். ஆரம்பிக்கவே அஞ்சும், ஆற்றல் அற்றவர்கள். பயந்தாங்கொள்ளிகள், கோழைகள்.

2. இரண்டாவது தரத்தினர், ஒரு காரியத்தை ஆரம்பித்துவிடுவார்கள். தைரியமாகவே தொடங்கி விடுவார்கள். தடையில்லாமல் காரியம் நடக்கிறவரை, தொடர்ந்து வருவார்கள். ஏதாவது இடையூறுகள் எழுந்தால், அவற்றை எதிர்கொள்ள இயலாமல், தாக்குப் பிடிக்க முடியாமல், பாதியிலே விட்டுவிட்டுப் பறந்து விடுவார்கள். வேலையும் அநாதையாகிவிடும். இப்படிப்பட்டவர்கள் இரண்டாந்தர மக்களாகிவிடுகிறார்கள்.

அதற்குக் காரணம், தங்களின் விதிதான். போதாத காலம், சனி பிடித்த ஜாதகம் என்றெல்லாம் மற்றதன் பேரில் பழியைப் போட்டுவிட்டு, மறைந்து கொள்வார்கள்.

3. மூன்றாவது தரத்தினம் முதல் தரமாந்தர்கள் ஆவார்கள். எடுத்த காரியத்தை முடித்துவிடுகிறவரை, முயற்சிப்பார்கள். முடிவில் தோல்வியோ, வெற்றியோ என்பதைப் பற்றிக் கவலையில்லாமல் காரியத்தை செய்து கொண்டே இருப்பார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கு இயற்கையும் துணை நிற்கும். இதயம் இருப்பவர்களும் உதவிக்கு வருவார்கள். இறைவனது ஆசிர்வாதமும் இருக்கும்.

இளைஞர்களே இங்கு பலதரமக்களின் பண்பாட்டு முறைகளைப் பற்றி தெரிந்து கொண்டிருப்பீர்கள்?

**நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ, அதை சதாநேரமும் எண்ணத்தால் வாசிக்கின்றீர்களோ, இதய பூர்வமாக சுவாசிக்கின்றீர்களோ அப்படியே நீங்கள் ஆகின்றீர்கள்.**

நான் எங்கே உருப்படப் போகிறேன் என்று நீங்கள் நினைத்தபடியே வாழ்ந்தால், அப்படியே ஆகின்றீர்கள்.

நான் உயர்வேன். மற்றவர்களுக்கு ஒரு சான்றாக இருப்பேன். வாழ்க்கையில் சிறந்து காட்டுவேன் என்று நினைத்தால், அந்த எண்ணமே, உங்களை அற்புதமாக வழி நடத்தும், வாழ்விக்கும்.

அந்த உறுதியான எண்ணத்திற்கு இரண்டு கண்களாக இருந்து, கைகளாக மாறி, கால்களாக விரைந்து உதவுவன **1. விவேகம், 2. வைராக்கியம்.**

உண்மையான லட்சியத்திற்கு உதவும் விவேகம். அதை விட்டுவிடாமல், கட்டுக்குலையாமல் வைத்து வளர்க்கும் வைராக்கியம் இரண்டும், உங்களுக்குள் ஊற்றாகிவிடும்.

அப்படிப்பட்ட தேடலைத் தொடருங்கள். தெரிந்து கொண்ட தேடலுக்குள் தெளிவான வழி முறைகளையும் தொடர்ந்து காண்போம்.

# 16. ஆவலும் கூவலும்

"என்னை நான் தேடித்தேடி உன்னிடம் கண்டு கொண்டேன்" என்ற ஒரு சினிமாப் பாடலை பாடியே இளைஞர்கள் தங்களை மறந்துவிட்டார்கள். இழந்து விட்டார்கள்.

தன்னைத் தேட வேண்டும் என்று இங்கே கூறுகிறோம். இன்னொருவர் இடத்திலே அது இருக்கிறது என்றால் கேட்பதற்கே கேவலமாக இல்லையா!

**தன் ஆயுதமும் தன்கைப் பொருளும்**
**பிறர்கை கொடுக்கும் பேதையும் பதரே!**

என்ற பாட்டையும் இப்போது நாம் பாடியாக வேண்டும்.

தன்னுடைய ஆயுதத்தை பொருளை, பிறர் கையில் கொடுத்துவிட்டு பேதலித்து நிற்பவர் பேதை என்றால், தன் இதயத்தை எண்ணும் சக்தியை இன்னொருவரிடம் தந்துவிட்டு ஏமாந்த இளிச்சவாயர்களாக வாழ்வது, எத்தனை ஏமாளித்தனமாக இருக்கிறது!

உன்னை எதற்குத் தேடுவது?

நீ நீயாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தேடல், தெளிதல்.

ஆனால் உனது ஆவல் அடுத்தவர் பற்றியே இருக்கிறது. உன் வாயிலிருந்து வருவது வார்த்தையாக இல்லாமல், கூவலாக இருக்கிறது. கூச்சலாக இருக்கிறது என்றால் நீ எந்த இனம் என்றுதானே கேட்கத் தோன்றும்.

ஒவ்வொரு மிருகமும் தனி இனம் என்பார்கள். ஏனென்றால் அதற்கெல்லாம் தனிக்குணம் இருப்பதால்தான். எறும்புக்கு உழைப்பு, காக்கைக்கு உறவு, கழுதைக்கு சுமை, நாய்க்கு நன்றி. புறாவுக்கு ஒழுக்கம், யானைக்கு வலிமை. ஆனால் மனிதனுக்கு எது என்றால் அது கலவையான சங்கதிகள்தான்.

நேரத்திற்கு நேரம் நிமிடத்திற்கு நிமிடம் தனது குணத்தை மாற்றிக் கொண்டு திரிகிற கூட்டம்தான் மனிதக்கூட்டம்.

தனக்குத் தேவையென்றால் யாசிப்பார்கள். பூஜிப்பார்கள். தனக்குத் தேவையில்லை என்றால் யோசிப்பார்கள். வீசிப் போடுவார்கள். வேசித்தனமான குணாதிசயங்கள் கொண்ட வாழ்க்கை. வெட்கங்கெட்ட வாழ்க்கை.

அதுவல்ல நாம் தேடுவது?

மனிதன். தெய்வ சாயலாகப் படைக்கப்பட்டான் என்று வேதங்கள் விவரிக்கின்றன. மதங்கள் போதிக்கின்றன.

தெய்வ சாயலைத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். தெய்வத்திற்குரிய பண்புகள் நம்மிடம் என்ன இருக்கிறது என்பதைத் தேட வேண்டும். தெளிய வேண்டும்.

இதற்கு உங்கள் மனம்தான் ஒத்துழைக்க வேண்டும்.

**வெள்ளத்தின் இயல்பு பள்ளத்தை நோக்கி ஓடுவது. உள்ளத்தின் இயல்பு கள்ளத்தில் உறவு கொள்வது** என்று சித்தர்கள் சொல்வார்கள்.

ஓடுகிற நீரில் மிதந்து கொண்டு போவதும் தும்பும் செய்யும். தூசியும் செய்யும். செத்து மிதக்கும் சடலங்களும் செய்யும்.

போகிற போக்கில் போய்க் கொண்டேயிருப்பது வாழ்க்கை இல்லை. எங்கே போக வேண்டும்? எப்படிப் போக வேண்டும்? அந்தத் தேடலைத்தான் அறிவுத் தேடல் என்கிறோம்.

**உன்னை நீ அறிந்தாயாகில் உனக்கொரு கேடும் இல்லை** என்கிறது கைவல்ய நவநீதம்.

உன்னிடம் உன்னைத் தேடுவது என்பது உயர்ந்த குணம் உயர்ந்தவர்களின் குணம்.

அந்த ஆவல்தான் உங்களுக்கு வேண்டும். அந்த ஆவலை ஏவிவிடும் உள்ளம் இருக்கிறதே அதைப் பக்குவப்படுத்திக் கொள்வதுதான் தெய்வீக மனிதரின் தேர்ந்த ஞானமாக இருக்க வேண்டும்.

தேர்ந்த ஞானம் என்பது எப்பொழுது தென்படும்? அதற்காக நாம் நமது வாழ்க்கையை நான்கு பகுதியாகப் பிரித்துப் பார்க்கலாம். ஒன்று **வேகம்**. இரண்டு **விவேகம்**. மூன்று **யோகம்**. நான்கு **வியோகம்.**

வேகம் என்பது இளமையின் எழுச்சி நிலை ஆகும். எப்பொழுதும் துறுதுறு என்று சுறுசுறுப்புடன் சுற்றுலா வரும் காலம். அருவியாக ஆர்ப்பரித்து குதிக்கின்ற எண்ணங்களின் வேகம். காட்டாறாய் கரைகளை உடைத்து கவலை இல்லாமல் கதைகள் பண்ணிக் கொண்டு இருக்கிற காலம்.

கற்பனைகளின் வேகம் மேடு பள்ளம் பாராமல் ஏற்றம் இறக்கம் பாராமல் மானம் அவமானம் பாராமல் மனதில் பட்டதை செயலில் செய்து பார்க்க வேண்டும் என்று சிலர்ப்பின் வேகம். எதிலும் வேகம். இந்த இளமைக் காலத்தின் எடுப்பான வேகத்தில்தான் எல்லா இளைஞர்களும் எரிந்து கொண்டிருக்கிறார்கள்.

வெறும் வேகம் மட்டும் வெற்றிக்குப் பரிகாரம் ஆகாது. வேகத்திற்குக் கொஞ்சம் அறிவு வேண்டும். அறிவான வேகத்திற்குப் பெயர்தான் விவேகம். வி என்றால் அறிவு என்று அர்த்தம். அறிவின் நாயகத்திற்குப் பெயர்தான் விநாயகர். அறிவுக்கான வினாக்களை எழுப்புகின்ற அகம்தான் விநாயகம்.

வெற்றிகரமாக ஒரு வேலையை செய்ய வேண்டும் என்றால் வேகத்துடன் கூடிய விவேகம் வேண்டும். வேகமும் விவேகமும் உங்களுக்கு நிறைய வேண்டும் என்றால் மூன்றாவது நிலையான யோகம் வேண்டும். யோகம் என்றால் உடலையும் மனத்தையும் ஒருமுகப்படுத்தி ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாகும்.

இப்பொழுது நாம் ஒரு முடிவுக்கு வருவோம். வேகம், விவேகம், யோகம் இந்த மூன்றும் உங்களிடம்தான் இருக்கிறது என்பதை முதலில் உணரவேண்டும். எங்களிடம் இது இல்லை என்று நீங்கள் சொன்னால் அது உண்மைக்குப் புறம்பான ஒரு ஏமாற்றும் பொய் ஆகும்.

உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளுகின்ற மெய் ஆகும். ஏன் என்றால் நீங்கள் மனிதராக இருப்பதற்கு இந்த மூன்றும்தான் முக்கிய காரணமாக இருக்கிறது. இந்த மூன்றும் இல்லை என்றால் நீங்கள் மனிதராகவே இருக்க முடியாது.

எதையும் செய்தவற்குப் பெயர்தான் உடல். உடலுக்கு நிச்சயம் வேகம் உண்டு. இப்படி செய்ய வேண்டும் என்று நுட்பமாக திட்பமாக கட்டளை இடுவதற்குப் பெயர்தான் மூளை. எப்பொழுதுமே மூளைக்கு விவேகம் உண்டு. அந்த உடலின் வேகத்தையும் மூளையின் விவேகத்தையும் ஆற்றுப்படுத்துகிற அகத்திலே உள்ள பெரிய சக்திதான் ஆத்மா என்பது. அந்த ஆத்மா இருக்கிறவரை உங்களுக்கு யோகம் நிறைய உண்டு.

இதை நீங்கள் எவ்வளவு உயரம் வளர்த்துக் கொள்ள முடியும் என்று தெரிந்து கொள்ளும் முயற்சிக்குப் பெயர்தான் தேடல். தெரிந்து கொண்டதில் பெறுகிற தெளிவுக்குப் பெயர்தான் ஞானம்.

இந்த ஞானத்தைக் காட்டுக்கு ஓடியோ, கட்டைப் பிரம்மச்சாரியாக மாறியோ, தியாகம் செய்தால்தான் பெற முடியும் என்பது தவறு. இதை வீட்டிலும் பெறலாம். வேறு எந்த நிலையிலும் பெறலாம். வேண்டியது ஒன்றே ஒன்றுதான் அதுதான் உள்ளத்திலே உருவாகின்ற வேட்கை. இந்த வேட்கையில் வேகமும் விவேகமும் யோகமும் கொண்டு இருந்தவர்கள்தான், வாழ்க்கையில் புகழ் பெற்றவர்களாக விளங்கி இருக்கிறார்கள்.

ஆடுகளை மேய்த்துக் கொண்டு இருந்த குருஷேவ் ரஷ்யாவை ஆண்டார். செருப்பு தைத்து வேலை செய்த ஆபிரகாம்லிங்கன் அமெரிக்காவை ஆண்டார். பெயிண்ட் அடித்துக்கொண்டு இருந்த ஹிட்லர் ஜெர்மனியை ஆண்டார். ஆக வேறு எந்த நிலையில் இருந்தாலும் எல்லோரும் வாழ்த்தும்படியாக உயரலாம். உயர்த்திக் காட்டவும் முடியும். இதுதான் வரலாறு காட்டும் வாழ்க்கை.

# 17. அவமானம் அவர்களுக்குத்தான், நமக்கல்ல!

தன் சட்டைப் பையில் என்ன இருக்கிறது என்று தெரியாது. ஆனால் அடுத்தவர் வீட்டில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன என்று பட்டியல் போட்டுக் காட்டுகின்ற எமகாதகத் திறமை எல்லா மக்களிடம் இருக்கின்றன.

தனக்குரிய திறமை என்ன? தகுதி என்ன? நிலைமை என்ன என்று தெரிந்து கொள்வதில் இல்லாத ஞானம், மற்றவர்களைப் பற்றிய முழு விவரங்களையும், மனப்படம் செய்து வைத்திருக்கும் மடத்தனமான மாண்பு, எல்லா மக்களிடமும் நிறைய இருக்கிறது.

என்ன செய்தால், எப்படி முயற்சித்தால் நாம் உயரலாம்! நம் வாழ்வு மேம்படலாம் என்று சிந்திப்பதை விட, என்ன செய்தால் அவன் வீழ்வான், தாழ்வான், தினம் தினம் சாவான் என்று திட்டம் போடுகிற ஜகஜால புரட்டர்கள், நிறைய பேர்கள் நாட்டிலே நடமாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

மனித வடிவிலே, பல விஷ ஜந்துகளின் மொத்த உருவமாக, பல மனிதர்கள் பவனி வந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களை இனம் கண்டு கொண்டால், மனம் இந்தப் பாடு படாது என்பது நிச்சயம்.

**ஏனென்றால், அவர்கள் வேலை அவமானத்திற்கு நம்மை ஆளாக்குவது. நமது வேலை, தப்பித்துக் கொண்டு தேர்ச்சியுடன் முன்னேறுவது.** இப்படியாக உங்கள் சிந்தனையும் செயலும் அற்புதமாக வெளிவரவேண்டும்.

புடம் போட்டு எடுத்த பொன்னுக்கு எத்தனை வேதனை?

சிலையாகிப் போன கல்லுக்கு எத்தனை அடி? கொத்து?

கலை வடிவம் பெற்ற மரத்திற்கு எத்தனை தேய்ப்பு? உடைப்பு?

மனிதர்களில் முன்னேறிய அனைவருமே இப்படி அடிவாங்கி அழுதவர்கள்தான். உதை வாங்கி உதிர்ந்தவர்கள்தான். வாழ்வை முடித்துக் கொள்வோமா என்று ஏங்கி வதங்கியவர்கள்தாம்.

இப்படி ஒரு வாழ்வு வாழத்தான் வேண்டுமா என்ற ஒரு கேள்வியைக் கேட்டு, இதற்குப் பரிகாரமாக வாழ்ந்து காட்டுகின்றேன் பார் என்று உழைத்தவர்கள் தாம்: தாழ்வு மனப்பான்மையை உதைத்தவர்கள் தாம், இன்று செயற்கரியனவற்றை செய்து காட்டிய சரித்திர சாதனையாளர்களாகத் திகழ்கின்றார்கள்.

ஆடு மேய்த்தவர்கள் நாட்டின் ஜனாதிபதி ஆனார்கள். செருப்புத் தைத்தவர்கள் ஒரு நாட்டின் சர்வதிகாரியாய் ஆனார்கள். விளம்பரத்தட்டி எழுதியவர்கள் கூட, வரலாற்று நாயகர்களாய் மாறி வந்திருக்கின்றார்கள்.

எப்படி?

அவர்கள் பட்ட அவமானங்கள்தான். அவர்களது அடிமனத்தை உரசிப் பார்த்து, ஆற்றலை வெளிப்படுத்தி வைத்தன.

புத்தனை மகான் என்று போற்றுகிறோம். வணங்கு கிறோம். ஏசுவை இறைமகனே என்று இறைஞ்சுகிறோம். அவர்கள் படாத அவமானங்களா நாம் படப்போகிறோம்?

ஒருவன் புத்தரிடம் வந்தான். அவரை அவமானப் படுத்த ஆசைப்பட்டான். கெட்ட வார்த்தைகளால் திட்டித் தீர்த்தான். கேவலமான பாஷையால், கீழ்த்தமான பாணியில் கொட்டித்தீர்த்தான். திட்டியவன் நாவுக்கும் சோர்வு வந்ததும். வாய்க்கோ வலியும் வேதனையும் வந்தது. ஆனால், கேட்ட புத்தரின் முகத்தில் கொஞ்சம்கூட கோபமும் இல்லை. தாபமும் இல்லை.

திட்டியவனைப் பார்த்து, தீர்ந்ததா உன் வார்த்தைகள்? தணிந்ததா உன் ஆத்திரங்கள் என்று கேட்டார். அவனும் ஆவேசமாக, இல்லை. இன்னும் இருக்கிறது என்றான். நான்

ஒன்று சொல்கிறேன். கேட்டு உன்னால் பதில் சொல்ல முடியுமா என்று கேட்டார்.

முடியுமா? எந்தக் கேள்விக்கும் என்னிடம் பதில் உண்டு. கேட்டால், கிடைக்கும். என் பதிலைப் பார்த்து, நீங்கள்தான் கேவலப்படுவீர்கள் என்று கேலியாகப் பதிலுரைத்தான்.

புத்தர் இப்படிப் பேச ஆரம்பித்தார்.

"உன்னிடம் விலை உயர்ந்த பொருள் ஒன்று இருக்கிறது. அதைக் கொண்டு வந்து, நீ எனக்குப் பரிசாக அளிக்கிறாய் நான் அதை வேண்டாம் என்று மறுத்து விடுகிறேன். அப்போது நீ என்ன செய்வாய்" என்று கேட்டார்.

இதென்ன பெரிய கேள்வி. நீங்கள் மறுத்துவிட்டால், அதை நானே திரும்பவும் எடுத்துக் கொள்வேன் என்றான் அந்தத் தீயவன்.

நல்லது. நான் மறுத்ததை நீ எடுத்துக் கொள்வாய் அல்லவா! இப்போது இதுவரை நீ திட்டிய கெட்ட வார்த்தைகளை பேசிய இழிமொழிகளை எல்லாம் பரிசாக எனக்குத் தந்தாய். ஏற்றுக் கொள்ளப் பிரியமில்லாத நான், உனக்கே பரிசாகத் திரும்பவும் தந்துவிட்டேன். எல்லாம் உனக்கே வந்துவிட்டது, ஏற்றுக்கொள் என்றார்.

வீணான வார்த்தைகள் வீசி அவமானப்படுத்திய வம்பன், இதைக் கேட்டு வெட்கித் தலைகுனிந்தான்.

இந்த இனிய முறையைத் தான் நாம் பின்பற்ற வேண்டும். ஏசிப்பேசி அவமானப்படுத்துபவர்களுக்கே, அவற்றை நாம் சமர்ப்பணம் செய்துவிடும் சாகசக்கலையை, நம்மிடையே வளர்த்துக் கொள்வோமானால் வளர்ச்சி நமக்கு. வீழ்ச்சி அவர்களுக்கு.

என்ன செய்கிறோம் என்று தெரியாமலேயே இவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை மன்னியுங்கள் பிதாவே என்று ஏசுநாதர், எதிர்த்தவர்களை வெட்கப்பட வைத்தாரே! அதையும் நம் நினைவில் ஏற்றுக்கொள்வோம்.

வீதியில் போகும்போது விளையாடும் சிறுவர்கள் வீசுகிற கல், நம்மேல் படும்போது அதற்காக நாம் நின்று சண்டை போடுவதில்லை. வம்படி வழக்கும் செய்வதில்லை. சற்று நேரம் சலனப்பட்டுப்போய், மீண்டும் சமாதானமாகி

நமது காரியத்தை, மேற்கொண்ட பயணத்தைத் தொடர்வது போல, நாமும் அவமானப்படுத்துபவர்களை நாசூக்காக ஒதுக்கித் தள்ளிவிடுவோம்.

குப்பையைப் புறம் தள்ளிவிட்டால், இடம் சுத்தமாகிவிடும். அதுபோல குப்பை மதி கொண்டவர்களை, நமது அட்டவணையில் சேர்க்காமல் அடித்துத் திருத்தி அப்புறப்படுத்திவிட வேண்டும்.

அதைவிட்டுவிட்டு, குப்பைகளைக் கொண்டு வந்து நடு வீட்டில் கொட்டிவிட்டால், நாறுவது நம் வீடுதானே! அதுபோல் அவமானப்படுத்தும் அயோக்கியர்களை, நம் நெஞ்சுக்குள் கொண்டு வந்து நிறுத்திக் கொண்டால், நஞ்சாகிப் போவது நமது நெஞ்சம்தானே!

ஆகவே, அவைகளை நம்மிடமிருந்து அப்புறப்படுத்த முயல்வோம். அதுவே நமக்குப் பெரிய வெற்றி, பேராண்மையும் கூட.


தென் ஆப்பிரிக்காவில், தேசப்பிதா காந்தி பெறாத அவமானமா நமக்கு வந்துவிடப் போகிறது!

ரயிலிலிருந்து தூக்கியெறியப்பட்டார். பல் உடைவது போல நையப் புடைக்கப்பட்டார். அதனால் எல்லாம் அவர் தாழ்ந்துபோய் விட்டாரா என்ன? தலை குனிந்து, இலட்சியத்தை விட்டு ஒளிந்து கொண்டாரா என்ன?

அவர் பெற்ற அவமானங்கள்தாம் அவரை மனிதராக மாற்றி, மகாத்மாவாக உயர்த்தி விட்டிருக்கிறது. அவர் செய்த செய்கைகள் எல்லாம். என்றும் வாழப்போகிற இயற்கையாக ஆகி விட்டதல்லவா?

ஆகவே, அவமானங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். அவமானப்படுத்தியவர்களைக் கண்டு அஞ்சாதீர்கள். தாழ்வு மனப்பான்மை கொண்டு உளராதீர்கள். அதையே உள்ளத்தில் போட்டுப் போட்டுக் கரையாதீர்கள்.

தரையென்றால், பள்ளமும் மேடும், கல்லும் முள்ளும் இருப்பதுபோல, வாழ்வென்றால் எல்லாமும் இருக்கும். பார்த்து நடப்பதும், பயப்படாமல் தடுப்பதும் பண்பார்ந்த செயல்கள் அல்லவா?




எஸ்.எஸ்
பப்ளிகேஷன்

ISBN: 978-81-906055-6-4

9 788190 605564

**S.S. PUBLICATION**
8, Police Quarters Road,
T. Nagar, Chennai - 600 017.
Phone: 044-24332696
Email: ss_publication@yahoo.co.in